பொழிவு - 19
குவிப்பு - 02
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
பெப்ரவரி- 2016
(ISSN 1800-2641)

Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 167 / News / 2016"


# மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை ஆயர் பணியில் இருந்து ஓய்வுபெற்றார்!

## மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை திருத்தந்தையால் நியமனம்


திருச்சபைச் சட்ட எண் 401 பகுதி 1இற்கு அமைவாக மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் பதவி துறப்பை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதை இலங்கைக்கான அப்போஸ்தலிக்க தூதுவர் அறிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர் நியமிக்கப்பட்டு பொறுப்பை ஏற்கும்வரை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருகோணமலை மறைமாவட்டத்தின் இளைப்பாறிய ஆயர் மேதகு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களை மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமித்துள்ளார். இந்த நியமனம் ஜனவரி மாதம் 14ஆம் திகதி இலங்கை நேரம் மாலை 4.30 மணியிலிருந்து அமுலுக்கு வந்தது.

(இது தொடர்பான மேலதிக செய்திகளை 3ஆம் பக்கத்தில் காணலாம்)



ஆயர் யோசேப்பு ஆண்டகை




ஆயர் கிங்ஸ்லி ஆண்டகை

# தவக்காலம்

## அருளின் காலம் .... மனமாற்றத்தின் காலம்





# மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு 35 ஆண்டுகள் நிறைவு விழா

## யாழ் புதிய ஆயர் ஜஸ்ரின் ஆண்டகை தலைமையில் திருப்பலி



மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 35 ஆண்டுகள் (1981) நிறைவு விழா கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி காலை 7.30 மணிக்கு தோட்டவெளி வேதசாட்சிகள் அன்னை ஆலய வளாகத்தில் நடைபெற்றது. யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் மேதகு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் இச்சிறப்புத் திருப்பலிக்கு தலைமை தாங்கினார்.

முதல் தடவையாக உத்தியோகபூர்வமாக மன்னார் மறைமாவட்டத்திற்கு வருகை தந்திருந்த யாழ்ப்பாண புதிய ஆயருக்கு மோட்டார் பவனி, பாண்ட் இசை சகிதம் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. திருப்பலி நிறைவில் புதிய ஆயருக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக் காணும் அருட்பணி. றெஜினோல்ட் அடிகளார்



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் றெஜினோல்ட் சேவியர் பிரான்சிஸ் அடிகளார் கடந்த பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி தனது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து குருத்துவ வெள்ளிவிழாவைக் கொண்டாடினார்.

அன்று காலை 9.00 மணிக்கு மருதமடுத் திருத்தலத்தில் இவர் தனது யூபிலி நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

குருத்துவப் பணி வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் அருட்பணியாளர் றெஜினோல்ட் அவர்களுக்கு மன்னார் மறைமாவட்ட இறைமக்கள் சார்பாக மன்னா நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்!

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப் பெற ஏன் நீங்கள் வழிசெய்யக்கூடாது?

ஒரு வருடத்திற்கான
உள்நாட்டுச் சந்தா ரூபா 800.00
வெளிநாட்டுச் சந்தா ரூபா 3,500.00

எம்மோடு தொடர்புகொள்ளுங்கள் -
077 - 7420811, 023 - 2250789, 023 - 3233276

## சந்தாவைப் புதுப்பியுங்கள்!

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

# 'கடவுளின் பெயர் இரக்கம்' திருத்தந்தையின் புதிய நூல்

'கடவுளின் பெயர் இரக்கம்' (The Name of God is Mercy) என்ற தலைப்பில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய புதிய புத்தகம் ஒன்று 86 நாடுகளில் ஏறக்குறைய இருபது மொழிகளில் ஜனவரி 12ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இப்புதிய புத்தகத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வத்திக்கான் பத்திரிகையாளர் அன்ரிகா ரொமிசிலியோ (Andrca Tornicllio) அவர்களுக்கு அளித்த பல நேர்காணல்களில் வெளியிடப்பட்ட, கடவுளின் இரக்கம் பற்றிய கண்ணோட்டங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

தூய பேதுருவைப் போன்று, திருத்தந்தைக்கும் இரக்கம் தேவைப்படுகின்றது. கடவுளின் இரக்கம் தேவைப்படும் ஒரு மனிதர் திருத்தந்தை என்று தனது நீண்ட நேர்காணலில் திருத்தந்தை கூறியிருப்பது இப்புத்தகத்தில் உள்ளது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## சிலுவைப் பாதைத் தியானங்கள்

*இறைவனின் இரக்கத்தை இன்னும் அதிகமாகத் தியானிக்க, சுவைக்க நமக்கு வழங்கப்படும் அரிய வாய்ப்புத்தான் தவக்காலம். இக்காலத்தில் இயேசுவின் கொடுமையான பாடுகள், தியாக மரணம், அற்புதமான உயிர்ப்பு ஆகியவற்றைத் தியானிப்பதன் மூலம் இறைவனின் இரக்கத்தை உணர்ந்து அனுபவிக்க உதவும் சிறந்த கருவிதான் சிலுவைப்பாதை.*

*சிலுவைப் பாதை இயேசுவின் பாடுகளின் பாதையில் நடந்துசெல்கின்ற ஓர் அனுபவத்தை நமக்குத் தருகின்றது. இயேசுவின் சிலுவைப் பாடுகளைத் தியானிப்பது அவர்மேல் நாம் பரிதாபப்பட அல்ல; மாறாக நம் பாவத்திற்காய் பரிகாரப்பட...! அவர்மேல் அனுதாபப்பட அல்ல; மாறாக அவரது அன்பின் ஆழம் உணர்ந்திட...!*

**திருவிவிலியச் சிலுவைப் பாதை**

*திருவிவிலியச் சிலுவைப் பாதை முற்றுமுழுதாக திருவிவிலியத்தை அடிப்படையாகக்கொண்டது. மறைந்த திருந்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர் அவர்கள் 1991ஆம் ஆண்டு பெரிய வெள்ளிக்கிழமை அன்று முதன் முதலாக இதனை அறிமுகப்படுத்தினார். வழக்கமான சிலுவைப்பாதையில் எட்டு நிலைகள் மட்டுமே விவிலிய அடிப்படைகளைக் கொண்டுள்ளன. 3, 4, 6, 7, 9 ஆகிய ஐந்து நிலைகளுக்கு விவிலிய அடிப்படைகள் இல்லை. திருவிவிலிய சிலுவைப்பாதை நிலைகள் அனைத்துமே விவிலிய அடிப்படைகளைக் கொண்டுள்ளன.*

*திருத்தந்தை 2ஆம் அருள்சின்னப்பரின் பணிக்காலத்தில் அவர் ஒவ்வோர் ஆண்டும் பெரிய வெள்ளிக்கிழமை அன்று உரோமில் உள்ள கோலோசியத்தில் (Colosseum) இந்தத் திருவிவிலியச் சிலுவைப்பாதை பக்திமுயற்சியை மக்களோடு சேர்ந்து அனுசரித்து வந்துள்ளார்.*

*மன்னார் மறைமாவட்டத்தில் கோமரசன்குளம் கல்வாரித் திருத்தலத்திலும், மடுத்திருப்பதியிலும் இந்தத் திருவிவிலியச் சிலுவைப்பாதை நிலைகளே உருவாக்கப்பட்டுள்ளன.*

*பங்குத்தந்தையர்கள் இந்தத் திருவிவிலியச் சிலுவைப் பாதைத் தியானங்களையும் பங்குகளில் அறிமுகப்படுத்தி விவிலிய அடிப்படையில் இயேசுவின் பாடுகளைத் தியானிக்க மக்களை ஊக்குவிப்பது நன்று.*

**சிறுவருக்கான சிலுவைப் பாதை**

*வழக்கமாகப் பெரியவர்களுக்காக எழுதப்படும் சிலுவைப்பாதைச் சிந்தனைகளில் நமது குழந்தைகள், சிறுவர்கள் ஈடுபாட்டோடு பங்கேற்பது குறைவு. அவர்கள் வெறும் பார்வையாளர்களாக மட்டுமே இருக்கிறார்கள். பலவேளைகளில் அவர்கள் பராக்குப் பார்த்துக்கொண்டும், கதைத்துக்கொண்டும் ஏன் சிலவேளை சண்டைபிடித்துக்கொண்டும் இருக்கிறார்கள்.*

*எனவே சிறுவர்களின் அறிவு, அனுபவத்திற்கு ஏற்ப மறைவாழ்வில் அவர்கள் வளர்க்கப்பட வேண்டும். அவர்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய இலகுவான மொழியில், கதைகள் சம்பவங்கள் வழியாக அவர்களைச் சிந்திக்கத் தூண்டும்போதுதான் அது அவர்களின் இதயத்தைத் தொடும். சிலுவைப்பாதை அவர்களின் வாழ்க்கைப் பாதையாக மாறும். எனவே சிறுவர்களின் நிலையில் நின்று சிறுவர்களுக்காக எழுதப்படும் சிலுவைப்பாதைச் சிந்தனைகளை வழங்கி சிறுவர்களை இந்தச் சிலுவைப் பாதைப் பக்திமுயற்சியில் பயனுள்ள முறையில் ஈடுபடத் தூண்ட வேண்டும்.*

**வாழ்வியல் சூழ்நிலைகளைக்கொண்ட சிந்தனைகள்**

*சிலுவைப்பாதைச் சிந்தனைகளை எழுதுகின்றவர்கள் இலகுவான மொழிநடையில், மக்களின் வாழ்வியல் சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு, வாழ்க்கை மாற்றத்திற்கு வழிசமைக்கும் வகையில் சிந்தனைகளை எழுதவேண்டும். சிந்தனைகளை வழங்குகின்றவர்கள் சிலவேளை தனிப்பட்ட கோபதாபங்களை மனத்தில் வைத்து தமக்கு எதிரானவர்களை குத்திக்காட்டுகின்ற வர்த்தைகளைச் சேர்த்துக்கொள்கின்ற நிலைப்பாடுகளும் இடம்பெறுகின்றன. இவை கண்டிப்பாகத் தவிர்க்கப்படவேண்டும்.*

**பாடுகளின் பாதை தொடர் கதையே**

*இயேசுவினுடைய பாடுகளின் பாதை என்பது என்றோ எங்கோ நடந்து முடிந்த ஒரு வரலாற்றுச் சம்பவம் அல்ல. அது தினம் தினம் எம் வீடுகளில், வீதிகளில், நகரங்களில் அரங்கேறிக்கொண்டிருக்கும் யதார்த்தமாகும். பிறேசில் நாட்டு இறையியலாளரான லியனார்டோ பொப் (Leonardo Boff) அவர்கள் "பாடுகளின் பாதை என்றும் தொடர்கதையே" என்ற தலைப்பில் கூறும் வார்த்தைகள் நமது சிந்தனைக்கு விருந்தாக அமைகின்றன.*

*"தினமும் பட்டினியில் உணவின்றித் தவிக்கும் பல்லாயிரம் பேரில்... தினந்தோறும் மனிதாபிமானம் இழந்து அடிமைகளாய் பணிபுரிவோரில்.... தினமும் போரினால் ஊனமுற்று படுக்கையில் முடங்கிக் கிடப்போரில்.... தினந்தோறும் நமது ஊரில், நகரில் புறந்தள்ளப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு வாழ்வோரில்.... அன்றாடம் சாதி, சமயம், இனம், பால், ஏழ்மை என்கிற சமூக அநீதிகளால் அலைக்கழிக்கப்படுவோரில்.... இயேசு சிலுவையில் அறையப்படுதல் தொடர் நிகழ்வே. பாடுகளின் பாதை என்றும் தொடர் நிகழ்வே!"*

***மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,***
***அன்புடன் அருட்திரு. தமிழ் நேசன்,***
***மன்னா பதிப்பாசிரியர்***

# இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் பணி
# ஆன்மீக, அரசியல் தலைமைக்கு முன்னுதாரணம்

**- தமிழ் சிவில் சமூக அமையம் -**



23 வருடங்கள் கத்தோலிக்க திருச்சபையின் மன்னார் மறை ஆயராகத் தன்னலமற்ற அருஞ்சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்றிருக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை தமிழ் மக்கள் மத்தியில் கட்சி அரசியலுக்கும், சமயத்துக்கும் அப்பால் கடந்த இரண்டு தசாப்தங்களாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும், நீதிக்காவும், நாளாந்த உரிமைகளுக்காகவும் குரல்கொடுத்து வருபவர்களில் தலையானவர் என்றால் அது மிகையாகாது.

தனது ஆயர் பணியின் பெரும் பகுதியினை யுத்தத்திற்கு மத்தியில் ஆற்றிய இராயப்பு யோசேப்பு ஆண்டகை, அப்போது இடம்பெற்ற கொடுமைகள் தொடர்பாக அஞ்சாமல் குரல்கொடுத்த அதேவேளை, அந்நேரத்தில் தனது அருட்பணி மூலமாகப் பலருக்கு அடைக்கலமும், பாதுகாப்பும் உதவியும் செய்தார். குறிப்பாக யுத்தத்தின் பின்னர் நிலவிய பயங்கரமான சூழலில் தமிழ் மக்களின் குரலாக மிகுந்த துணிச்சலுடன் அவர்களின் துயரை வெளிக்கொணரும் பணியிலும் ஆயர் தனது சேவையை வழங்கினார்.

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு மையப்பீடத்தில் இருந்துவந்த விமர்சனத்தையும் பொருட்படுத்தாது தமிழ் மக்களின் விடுதலையைத் தனது இறையியல் சம்பந்தமான விளங்கிக் கொள்ளல்களோடு சேர்த்து நோக்கி, மக்களின் சார்பில் குரல் தந்தவர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை. ஒரு வகையில் இவர் விடுதலை இறையியல் தத்துவார்த்தத்தை தனது வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார் எனக்கூடக் கூறலாம்.

இந்த நிலைப்பாடு காரணமாக அவருக்கெதிராக அரச இயந்திரம் குறிப்பாக பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஊடாக பல விசாரணைகளை முடுக்கிவிட்டது. அவரைப் பயங்கரவாதி என்றும் நாமம் சூட்டியது. அவற்றைப் பொருட்படுத்தாது தொடர்ந்து மக்கள் பணி ஆற்றினார்.

2012இல் வழங்கிய பேட்டியொன்றில் சர்ச்சைக்குரிய ஆயர் என அவர் சிலரால் அழைக்கப்படுவதுபற்றி கேட்கப்பட்டபோது "இங்கு சர்ச்சைக்குரிய விடயங்கள் நடக்கின்றன. அவற்றைப்பற்றி பேச நான் துணிவதாலேயே சர்ச்சைக்குரிய ஆயர் என்று அழைக்கப்படுகின்றேன்" என உறுதியாக அவர் பதில் கூறியமை அவரின் மனவலிமைக்கு சான்றாகின்றது. ஜனவரி 2011இல் இலங்கை அரசாங்கத்தின் கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின்முன் தோன்றிய இராயப்பு யோசேப்பு ஆண்டகை இறுதி யுத்தத்தில் 146,479 தமிழர்களின் நிலை தொடர்பில் பொறுப்புக்கூறப்பட வேண்டும் என்ற பதிவொன்றைச் செய்தார். தமிழ் மக்களுடைய நீதிக்கான போராட்டத்தில் இந்தப்பதிவு முக்கியமான முதல் மைல் கல்லாக இருந்தது.

2012 ஒக்டோபரில் இணையம் ஊடாக ஜெனீவாவில் இலங்கை தொடர்பான பருவகால மனித உரிமைகள் தொடர்பிலான மதிப்பீடொன்றின் (Universal Periodic Review) போதான துணை மாநாட்டில் உரையாற்றிய யோசேப்பு ஆண்டகை தமிழ் மக்களுக்கு அரசியலமைப்பின் 13ஆம் திருத்தம் தீர்வாகாது என்றும், தமிழர்கள் ஒரு தேசம் என்ற வகையில் அவர்களது சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளும் தீர்வே நிலைத்த தீர்வாக இருக்கும் எனவும் வலியுறுத்தினர். இதே விடயத்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர் மீள வலியுறுத்தியுள்ளார்.

2013 மற்றும் 2014இல் பல நூற்றுக்கணக்கான கத்தோலிக்க பாதிரிமார்களை ஒருங்கிணைத்து சர்வதேச விசாரணைகளை வலியுறுத்தி இராயப்பு யோசேப்பு ஆண்டகை கடிதம் எழுதினார். தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஊடாக சர்வதேச விசாரணைகளை வலியுறுத்தும் பல்வேறு பணிகளும் அவரது தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்டன. அரசியல் தீர்வு தொடர்பிலும் தெளிவான, உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டியதன் அவசியத்தை அமையத்தின் செயற்பாடுகள் ஊடாக ஆயர் தமிழ் அரசியல் பரப்பில் எடுத்தியம்பினார். தமிழர்களின் அரசியல் தலைமைத்துவம் தேர்தல்களின்போது மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளின்படி செயற்பட வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தினார்.

ஆகஸ்ட் 2014இல் காணாமல்போனோர் ஆணைக்குழுவின் அழைப்பைத் தொடர்ந்து, அவர்கள்முன் மன்னாரில் தோன்றிய இவர் உள்ளகப் பொறிமுறைகளில் நம்பிக்கையில்லை என்பதை நீண்ட விளக்கம் ஒன்றை எழுத்து மூலம் வழங்கியபின் சாட்சியமளிக்க மறுத்து வெளியேறினார். அவரால் அச்சந்தர்ப்பத்தில் கையளிக்கப்பட்ட கடிதம் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரால் இலங்கை தொடர்பாக வழங்கப்பட்ட வாய்மொழிமூல அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2015 ஜனவரியில் மன்னார் ஆயர் என்ற வகையில் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸை மடுவில் வரவேற்றார். அங்கு ஆயர் யோசேப்பு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருத்தந்தை பொறுப்புக்கூறலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி முக்கிய உரையாற்றினார். மே 2015இல் துரதிஷ்டவசமாக சுகவீனமுற்ற இராயப்பு ஜோசப் ஆண்டகை நீண்டகால சிகிச்சைக்குப்பின் 2015 டிசம்பரில் சிங்கப்பூரில் இருந்து தாயகம் திரும்பி அதன் பின்னர் 14 ஜனவரி 2016 அன்று அவரது பணிகளில் இருந்து ஓய்வு பெற்றிருக்கிறார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2016

### மாசி

02 - மரியன்னை ஆலயம் - மன்னார்
தூய காணிக்கை அன்னை பாலைக்குழி - காத்தான்குளம், சாம்பல் தோட்டம், துள்ளுகுடியிருப்பு
தூய செங்கோல் மாதா முத்தரிப்புத்துறை
தூய வேளாங்கண்ணி ஆலயம் - படகுதுறை
06 - புனித வனத்து சின்னப்பர் - கணேசபுரம்
09 - புனித வனத்து சின்னப்பர் - 7ம் கட்டை, பம்பைமடு
11 - தூய லூர்து அன்னை திருவிழா - ஜீவநகர், முதலைக்குத்தி, இரண்டாம் பண்ணை, பாசிமோட்டை, கீளியன்குடியிருப்பு கெபி
13 - தூய லூர்து அன்னை திருவிழா - மாந்தை
22 - புனித இராயப்பர் - கத்தாளம்பிட்டி

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## மன்னாவை
## உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். **- மன்னா நிர்வாகம்.**

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இனத்திற்காகக் குரல் கொடுத்தவர் யோசேப்பு ஆண்டகை!

## மன்னார் மறைமாவட்ட மக்கள் மட்டுமல்ல இலங்கை மற்றும் உலகவாழ் தமிழ் மக்களும் அவருக்கு நன்றிகூறுகின்றனர்

### குருமுதல்வர் விக்ரர் அடிகளார்

ஓய்வுபெற்றுள்ள மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை தமிழ் இனத்திற்காகக் குரல் கொடுத்தவர். இவருக்கு மன்னார் மறைமாவட்ட மக்கள் மட்டுமல்ல இலங்கை மற்றும் உலக வாழ் தமிழ் மக்களும் நன்றிகூறி நிற்பதாக மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அடிகளார் தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்திற்கு அப்போஸ்தலிக்க பரிபாலகராக ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் திருத்தந்தையால் நியமிக்கப்பட்டதை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கடந்த ஜனவரி மாதம் 14ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு மன்னார் ஆயர் இல்லத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவ் ஊடக மாநாட்டில் குருமுதல்வருடன், மன்னார் மறைமாவட்ட ஊடக இணைப்பாளர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார், ஆயரின் செயலாளர் அருட்திரு. முரளிதரன், நிதியாளர் அருட்திரு. எஸ். இராஜநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் தொடர்ந்தும் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், மன்னார் மறை மாவட்டத்திற்கு அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமிக்கப்பட்டிருக்கிற அதிவணக்கத்திற்குரிய ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களை மன்னார் மறைமாவட்டக் குருக்கள்,



துறவியர், பொதுநிலையினர் ஆகியோர் அன்புடன் வரவேற்று நிற்கின்றனர்.

இளைப்பாறிய மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை சிகிச்சை பெற்று கடந்த ஒரு மாதத்திற்குமுன் சிங்கப்பூரிலிருந்து நாடு திரும்பியிருந்தார். தற்பொழுது அவர் எமது ஆயர் இல்லத்திலே தங்கியிருக்கின்றார். சுகயீனமாக இருந்து சிகிச்சை பெற்றுவந்த அவரின் உடல் நிலையில் தற்பொழுது பாரிய முன்னேற்றம் காணப்படுகிறது.

தற்பொழுது அவருக்கு சாதாரண சிகிச்சை மட்டும் வழங்கப்பட்டு வருகின்றது. அவர் தனது தனிப்பட்ட அன்றாட நடவடிக்கைகளை தனது வாசஸ்தலத்தில் இருந்துகொண்டே செய்துவருகின்றார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# ஓய்வுபெற்ற ஆயர்களுக்கு நன்றி





மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயராகப் பணியாற்றி (1981 - 1992) தற்போது ஆயர் பணியிலிருந்து ஓய்வுபெற்றிருக்கும் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கும், மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராகப் பணியாற்றி (1992 - 2016) தற்போது ஓய்வுபெற்றிருக்கும் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களுக்கும் மன்னார் மறைமாவட்டக் குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரும் அன்புநிறைந்த நன்றிகளையும் செபங்களையும் தெரிவிக்கின்றனர். இந்த ஆயர் பெருந்தகைகளின் ஓய்வுக் காலம் அமைதியும் மகிழ்வும் நிறைந்தாக அமைய வாழ்துகின்றனர்.

# இலங்கையின் முதலாவது கத்தோலிக்க செய்திப் பத்திரிகையான 'ஞானார்த்த பிரதீபய'வின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா

இலங்கையின் முதலாவது செய்திப் பத்திரிகையாகவும் இலங்கையின் முதலாவது கத்தோலிக்க செய்திப் பத்திரிகையாகவும் விளங்குகின்ற 'ஞானார்த்த பிரதீபய' என்ற பெயரைக்கொண்ட சிங்கள கத்தோலிக்க வாராந்தப் பத்திரிகையின் 150ஆவது வருட நிறைவு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு பேராயரின் இல்லத்தில் ஜனவரி மாதம் 11ஆம் திகதி நடைபெற்றது.

'ஞானார்த்த பிரதீபய' செய்திப் பத்திரிகை இலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் கத்தோலிக்க ஆன்மீக அம்சங்களைக் கட்டியெழுப்புவதற்கும் தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கும் ஒரு மகத்தான சேவையை செய்துள்ளது.

இப்பத்திரிகை அநாதைகள் பராமரிப்புக்கு நன்கொடைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் 1866 ஆம் ஆண்டு யூன் மாதம் 7ஆம் திகதி கத்தோலிக்க குருக்களான பீற்றர் இலரி மற்றும் ஜோன் பெர்ணாந்து ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையினால் ஒரு விசேட நினைவுச்சின்னம் ஜனாதிபதிக்கு வழங்கிவைக்கப்பட்டதுடன், இப்பத்திரிகையின் ஆண்டு மலரும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் இப்பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் தற்போதைய ஆசிரியருக்கு விருதுகளும் வழங்கிவைக்கப்பட்டன. அமைச்சர்களான ஜோன் அமரதுங்க, ரவி கருணாநாயக்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மன்னார் மறைமாவட்டத்தில் சிறப்பாக இடம்பெற்ற கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல் நிகழ்வுகள்

ஒவ்வொரு ஆண்டும் நினைவுகூரப்படும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வார நிகழ்வுகள் (ஜனவரி 18 - 25) இவ்வாண்டு மன்னார் மறைமாவட்டத்தில் முருங்கன் மற்றும் வவுனியா ஆகிய இரண்டு இடங்களில் அர்த்தமுள்ளவகையில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

## முருங்கனில்

முருங்கன் மெதடிஸ்த ஆலயத்தில் கடந்த ஜனவரி 24ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல் நிகழ்வு இடம்பெற்றது. மன்னார் கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்விற்கு இந்த ஒன்றியத்தின் இணைத்தலைவர்களான கத்தோலிக்க திருச்சபையின் அருட்பணியாளர் மாக்கஸ் மற்றும் மெதடிஸ்த திருச்சபையின் அருட்பணியாளர் ரவி முருகுப்பிள்ளை ஆகியோர் தலைமை தாங்கினர். இந்நிகழ்வின்போது அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் மறையுரை ஆற்றினார்.

இந்த இறைவேண்டல் நிகழ்வில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வரும், மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு கிழக்கு மாகாண பொறுப்பாளரான திருப்பணியாளரும் இன்னும் பல கத்தோலிக்க, மெதடிஸ்த இறைபணியாளர்களும், இறைமக்களும் கலந்துகொண்டனர்.

## வவுனியாவில்

வவுனியாவில் உள்ள அங்கிலிக்கன் திருச்சபை ஆலயத்தில் கடந்த ஜனவரி 25ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல் நிகழ்வு இடம்பெற்றது. வவுனியா கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியத்தினல் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வானது இந்த ஒன்றியத்தின் தலைவர் அருட்பணியாளர் எஸ். சத்தியராஜ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது அருட்பணியாளர் தமிழ் நேசன் அடிகளார் அருளுரை ஆற்றினார்.

கிறிஸ்தவ திருச்சபைகளுக்கிடையில் ஒன்றிப்பும் ஒற்றுமையும் ஏற்படவேண்டும் என்ற கருத்தை முன்வைத்து இடம்பெற்ற இந்த இறைவேண்டல் நிகழ்வில் வவுனியா மறைக்கோட்ட முதல்வர் அருட்பணியாளர் பெனோ அலெக்ஸ்சாண்டர் அடிகளாரும் இன்னும் பல கத்தோலிக்க, அங்கிலிக்க, மெதடிஸ்த இறைபணியாளர்களும், இறைமக்களும் கலந்துகொண்டனர்.

மன்னார் மறைமாவட்ட பல்சமய உரையாடல்கள் மற்றும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஆணைக்குழுவின் இயக்குனர் இந்த இரண்டு அமைப்புக்களின் இணைப்பாளராக இருந்து இந்த நிகழ்வுகளை ஒருங்கிணைத்திருந்தார். (இந்நிகழ்வுகளோடு தொடர்புடைய புகைப்படங்கள் 16ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன.)

# கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா பெப்ரவரி 21ஆம் திகதி

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் மிக விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து கச்சதீவு அந்தோனியார் திருவிழா தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய இந்த வருட உற்சவம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது. இதற்கான ஏற்பாடுகளை மாவட்டச் செயலகம் வருடாந்தம் மேற்கொண்டு வருகின்றது. அதேபோன்று இந்த வருடத்திற்கான ஏற்பாடுகளும் தற்போது நடைபெற்று வருகின்றன.

இத்திருவிழாவிற்கு இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பல ஆயிரக்கணக்கானோர் கடந்த வருடங்களில் வந்து சென்றிருக்கின்றனர். இதேபோன்று இந்த முறையும் பல ஆயிரக்கணக்கானோர் வரலாமென்றும் எதிர்பார்க்கப்படுகின்ற நிலையிலேயே அதற்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# மாந்தை லூர்து மாதா திருவிழா



மடு அன்னையின் ஆதி இருப்பிடம் எனக் கருதப்படுகின்ற மாந்தைப் பகுதியில் எழுந்தருளி இருக்கும் மாந்தை லூர்து மாதாவின் வருடாந்தத் திருவிழா பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி காலை 7.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அடம்பன் பங்குத்தந்தை அருட்பணி. மில்ரன் தேவராஜ் (நியூட்டன்) தலைமையில் இத்திருவிழாவுக்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்றன.

# இலங்கைத் திருச்சபையின் வரலாற்று அறிஞர் அருட்தந்தை பேணியோலா இறைபதம்

இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் முதுபெரும் வரலாற்று அறிஞர் அருட்தந்தை விட்டோ பேணியோலா (சே.ச) அடிகளார் தனது 102வது வயதில் கடந்த ஜனவரி மாதம் 7ஆம் திகதி இறைபதமடைந்தார்.


இத்தாலி நாட்டைச் சேர்ந்த இயேசு சபைக் குருவாகிய அடிகளார் 37 வருடங்ள் இலங்கையில் பணியாற்றியுள்ளார்.

இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றை ஆவணப்படுத்திய இந்த



நூற்றாண்டின் மிகச்சிறந்த எழுத்தாளராக அடிகளார் கருதப்படுகின்றார். அவரின் ஆன்மா அமைதியில் இளைப்பாறுவதாக!

# மாதா பக்தியை வளர்க்கும் செபமாலை உருவாக்குனர்களுக்கு நன்றி



கனடாவைச் சேர்ந்த சதாசகாய மாதா பங்கின் மடுமாதா பிரசீடிய மரியாயின் சேனைக்குள் இயங்கும் "மடுமாதா செபமாலை உருவாக்குனர்கள்" மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் முரளிதரன் ஊடாக இலவசமாக திருச்செபமாலைகளை விநியோகித்து வருகின்றார்கள்.

சென்ற வருடம் மன்னார் மறைமாவட்டத்திற்குள் விநியோகிக்கப்பட்ட இந்தச் செபமாலை விநியோகம் தற்போது மட்டக்களப்பு, திருகோணமலை, இரத்தினபுரி போன்ற மறைமாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இத்திருச்செபமாலைகளை இலவசமாக அனுப்பி, மரியன்னை பக்தியையும், செபமாலைப் பக்தியையும் வளர்க்கும் கனடா நாட்டைச் சேர்ந்த மரியன்னை பக்தர்களுக்கு மன்னா தனது அன்பான நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் இரக்கத்தாலும், புனித ஆட்சிப்பீடத்தின் ஆதரவாலும்
மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர்
மேதகு ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகிய நாம்
நம் மறைமாவட்டத்தில் உள்ள சகல குருக்கள்
துறவிகள் இறைமக்கள் அனைவருக்கும்
இறைவனின் அருளும் ஆசியும் விரும்பி எழுதும் 2016ஆம் ஆண்டிற்கான



# அப்போஸ்தலிக்க திருமடல்

*இயேசுக் கிறிஸ்துவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே,*

### 1. மன்னார் ஆயருக்கு நன்றியும் பாராட்டுக்களும்

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் மன்னார் மறைமாவட்டத்திற்கும் அனைத்துலகத் தமிழ்ச்சமூகத்திற்கும் செய்த சிறப்பான சமய, சமூக, அரசியல் பணிகளுக்காக அனைத்து மக்களும் அவருக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பது திண்ணம். சக ஆயர் என்ற வகையில் நானும் அவருடைய அரும்பணிகளைப் பாராட்டி அவருக்கு எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். சுகவீனமுற்ற நிலையில் இருக்கும் அவர் தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகின்றார். அவருடைய நற்சுகத்திற்காகத் தொடர்ந்து நாம் அனைவரும் செபிப்போமாக.

### 2. அப்போஸ்தலிக்க பரிபாலகராக எனது நியமனம்

உரோமையில் உள்ள திருத்தந்தையின் அப்போஸ்தலிக்க திருஆட்சிப்பீடம் (Holy See) ஒவ்வொரு தலத்திருச்சபைகள் மட்டில் அக்கறையும் கரிசனையும் கொண்டுள்ளதோடு, ஒவ்வொரு தலத்திருச்சபைகளின் தேவைகள் மட்டில் தனிக்கவனம் செலுத்திவருகின்றது. மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை தனது ஆயர் பணிகளை முன்னெடுக்கமுடியாத நிலையில் இருப்பதைக் கருத்தில்கொண்டு, இதனால் ஏற்பட்டுள்ள ஆயர் பணிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்காக திருத்தந்தையின் திருஆட்சிப்பீடம் மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக (Diocesan Apostolic Administrator) என்னை நியமித்து அனுப்பியுள்ளது. மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர் நியமிக்கப்படும்வரை இந்தப் பணியைத் தொடரும்படி திருத்தந்தையின் திருஆட்சிப் பீடம் என்னைப் பணித்துள்ளது. இந்தப்பணிப்பொறுப்பை இறைவனுடைய திருவுளமாக ஏற்றுக்கொண்டுள்ள நான், இந்த மறைமாவட்டத்திற்கு என்னால் முடிந்த நற்பணிகளைச் செய்வதற்கு என்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

### 3. திருத்தந்தை அறிவித்துள்ள இரக்கத்தின் யூபிலி ஆண்டு

அகில உலகத்திருச்சபையோடு சேர்ந்து இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டுக்குள் நாமும் பயணிக்க ஆரம்பித்துள்ளோம். இரண்டாம் வத்திக்கான் சங்கம் நிறைவுபெற்ற ஐம்பதாவது ஆண்டை நினைவுகூருமுகமாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்தச் சிறப்பு யூபிலி ஆண்டைப் பிரகடனப்படுத்தியுள்ளார். கடந்த டிசம்பர் மாதம் 8ஆம் திகதி மரியாளின் மாசில்லாத உற்பவப் பெருவிழாவோடு ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டு இந்த வருடம் நவம்பர் மாதம் 20ஆம் திகதி கிறிஸ்து அரசர் பெருவிழாவோடு நிறைவுக்கு வருகின்றது. "தந்தையைப்போல் இரக்கமுள்ளவராய் இருங்கள்" என்பதே இவ்வாண்டுக்கான மையப்பொருளாகத் தரப்பட்டுள்ளது.

### 4. மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடும் பங்குச் செயற்திட்டங்களும்

இந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டை மையப்படுத்தி சென்ற ஆண்டின் இறுதியில் மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப் பணித் திட்டமிடல் மாநாடு நடைபெற்றது. மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் துறவியர் மற்றும் பொதுநிலைப் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டு தமது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளனர். இவை தொகுக்கப்பட்டு பங்குகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்தக் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு பங்கும் தமது சூழ்நிலைக்கு ஏற்ப பங்கு மேய்ப்புப்பணித் திட்டமிடலை மேற்கொண்டு இரக்கத்தின் யூபிலி ஆண்டுக்கான செயற்திட்டங்களை வகுத்துச் செயற்பட ஆரம்பித்துள்ளன. பங்குத்தந்தையர்களும், ஆணைக்குழு இயக்குனர்களும், துறவியரும், பொதுநிலைப்பணியாளர்களும் இந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டை அர்த்தமுள்ளதாக, நடைமுறைச்சாத்தியமானதாக மாற்ற தமது முழுமையான பங்களிப்பை வழங்கவேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

### 5. இறை இரக்க ஆண்டில் திருத்தந்தையின் அழைப்பு

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறையிரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை அறிவித்து அகில உலகத்திருச்சபைக்கும் எழுதிய திருமடலில் பல காத்திரமான கருத்துக்களை, மிகவும் தெளிவாக, அழுத்தும் திருத்தமாக முன்வைத்துள்ளார். "இறையிரக்கத்தின் மறைபொருளை நாம் தொடர்ந்து தியானிக்க வேண்டும். அது மகிழ்ச்சி, சாந்தம் மற்றும் அமைதி ஆகியவற்றின் ஊற்று ஆகும்" (இறையிரக்க ஆண்டுத் திருமடல் எண். 2) எனத் திருத்தந்தை குறிப்பிடுகின்றார். "கடவுளின் இரக்கம் என்பது வெறும் அருபியான கருத்தியல் அன்று, மாறாக ஒரு தந்தையைப்போல, தாயைப்போல தங்களின் பிள்ளைகளுக்காக இதயத்தின் ஆழத்தில் உருகுவதைப்போல நிஜமானது" (திருமடல் எண். 6) என இறைவனுடைய இரக்கத்தின் தன்மையை நமக்கு விளங்கப்படுத்துகின்றார்.

"இரக்கம் திருச்சபை வாழ்வின் ஆதாரமாகும்" எனக் குறிப்பிடும் திருத்தந்தை, "திருச்சபை எவ்வாறு இரக்கத்தையும் அன்பையும் காட்டுகிறது என்பதில்தான் அதன் நம்பகத்தன்மை அடங்கியுள்ளது" (திருமடல் எண். 10) எனக் கூறுகின்றார். "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள்" (லூக். 6:36) என்ற இயேசுவின் வார்த்தையை வாழ்வாக்கும் பல சந்தர்ப்பங்களைத் திருத்தந்தை தனது திருமடலில் விளக்கியுள்ளார். "கடவுள் நம்மை அளவில்லாவிதத்தில் அன்பு செய்கிறார் என்பதற்கு அவரின் இரக்கமே சான்று. எனவே, ஒவ்வொரு நாளும் கடவுளின் பரிவிரக்கத்தால் தொடப்பட்டு, நாமும் மற்றவர்களுக்கு இரக்கம் காட்டவேண்டும்" (திருமடல் 13) என அழைப்புவிடுக்கின்றார். "நாம் வாழும் இக்காலத்தில் உள்மனக் காயங்களால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உதவிக் கரம் நீட்ட நாம் முன்வரவேண்டும். அத்தோடு பல்வேறு காரணிகளால் பாதிக்கப்பட்டு, குரல்வளை நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கு, நல்ல சமாரியராக ஆறுதலின் எண்ணெய் பூசி, இரக்கமெனும் கட்டுகளால் பிணைத்து, விழிப்போடு அருகிருந்து அவர்களைக் காக்க நாம் முன்வரவேண்டும்" (திருமடல் 15) என திருத்தந்தை வலியுறுத்துகின்றார்.

### 6. நிறைவாக

உங்கள் மத்தியில் பணியாற்றுவதற்கு எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பை இறைதிருவுளமாக ஏற்றுக்கொண்டுள்ள நான், எனக்காகச் செபிக்கும்படி உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திருவிவிலியத்தின் வழியாகவும், திருப்பலி, திருவருட்சாதனங்கள், ஏனைய பக்தி முயற்சிகள் வழியாகவும் இறை இரக்கத்தை இன்னும் ஆழமாக இந்த ஆண்டில் அறிந்து உணர்வோமாக. நமது குடும்பங்களில், அன்பியங்களில், பங்குத்திருச்சபையில் இன்னும் அதிகமாக இரக்கத்தைப் பிரதிபலித்து நாம் ஒவ்வொருவரும் இரக்கத்தின் கருவிகளாக மாறுவோமாக. நமது மறைமாவட்டத்தின் பாதுகாவலியாகிய மடு அன்னை நம்மோடு பிரசன்னமாக இருந்து தாய்க்குரிய பாசத்தோடு நம்மை வழிநடத்துவாராக.

**இப்படிக்கு,**
**கிறிஸ்துவில் உங்கள்மேல் பற்றுள்ள,**
**(ஒப்பம்)**

**மேதகு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை,**
**மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர்**

# நாட்டு நடப்புக்கள்

## இம்முறை 350,000 சிறுவர்கள் முதலாம் தரத்துக்கு

முதலாம் தரத்துக்கு இம்முறை நாடு பூராகவும் உள்ள 9480 அரச பாடசாலைகளில் நாடளாவிய ரீதியில் 350,000 சிறுவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## வடக்கில் கடந்த ஆண்டு 2,551 பேருக்கு டெங்கு

டெங்குத் தொற்றால் கடந்த வருடம் வடக்கில் 4 பேர் உட்பட நாடளாவிய ரீதியில் 52 பேர் உயிரிழந்துள்ளனர். வடக்கில் 2 ஆயிரத்து 551 பேர் உட்பட நாடளாவிய ரீதியில் 29 ஆயிரத்து 690 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணத்திலேயே டெங்குத் தொற்று மிக அதிகமாக ஏற்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. அவ்வாறே இறப்பும் வடக்கில் யாழ்ப்பாணத்திலேயே அதிகமாக இருந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் 2 ஆயிரத்து 16 பேரும், வவுனியாவில் 197 பேரும், முல்லைத்தீவில் 141 பேரும், மன்னாரில் 105 பேரும், கிளிநொச்சியில் 92 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாயியுள்ளனர்.

## முல்லையில் 2,000 ற்கும் அதிக மாற்றுத் திறனாளிகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 151 மாற்றுத் திறனாளிகள் தற்போது உள்ளனர். அவற்றில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிலேயே அதிகளவானவர்கள் வசிக்கின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் புள்ளி விவரத்தில் குறிப்பிட்டுள்ளது. உடல் அவயங்களை இழந்த பலர் குடும்பத் தலைவர்களாக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## 24 மணித்தியாலத்தில் 3,200 முறைப்பாடுகள்

பொதுமக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் நேரடியாகச் சமர்ப்பிக்க முடியுமான, ஜனாதிபதியிடம் தெரிவிக்க, எனும் விசேட சேவை கடந்த ஜனவரி 8ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

குறித்த சேவை ஆரம்பிக்கப்பட்டு 24 மணித்தியாலங்களில் 3,200 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## நாளாந்தம் ஏழு பேர் வீதி விபத்துக்களால் உயிரிழப்பு

நாட்டில் தற்போது அதிகரித்துவரும் வீதி விபத்துக்கள் காரணமாக நாளொன்றுக்கு ஏழு பேர் உயிரிழப்பதாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு நாளொன்றுக்கு 101 வீதி விபத்துக்கள் பதிவாகி வருவதையும் ஒருங்கே சுட்டிக்காட்டியுள்ளது.

நாடளாவிய ரீதியில் கடந்த ஆண்டில் மாத்திரம் 36,894 வீதி விபத்துக்களில் 2,771 பேர் உயிரிழந்துள்ளனர். 7,719 பாரதூரமான காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இதுவரை காலங்களில் கடந்த ஆண்டான 2015ஆம் ஆண்டிலேயே அதிகமான வீதி விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாக வரலாற்றில் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸ் போக்குவரத்து பிரிவின் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2050இல் கடலில் மீன்கள் இருக்காது

### உலக பொருளாதார பேரவை தகவல்

உலகம் முழுவதும் ஓர் ஆண்டுக்குக் குறைந்தது 8 மில்லியன் தொன்கள் அளவுக்கு பிளாஸ்ரிக் குப்பைகள் கடலில் கொட்டப்பட்டு வருகின்றன. இதற்கு உடனடியாகத் தீர்வு காணப்படாவிட்டால் 2030ஆம் ஆண்டுக்குள் இரு மடங்காகும் நிலை ஏற்படவுள்ளது. இதுவே, 2050ஆம் ஆண்டுக்குள் 4 மடங்காக அதிகரித்துவிடும். இதன் எதிரொலியாக, கடலில் மீன்களைவிட பிளாஸ்ரிக் குப்பைகளே அதிகம் இருக்கும் அபாயமான நிலை உருவாகும்.

தற்போது, கடலில் 150 மில்லியன் தொன்களுக்கும் அதிகமாக பிளாஸ்ரிக் குப்பைகள் உள்ளன. கடந்த 50 ஆண்டுகளில் பிளாஸ்ரிக் பயன்பாடு 20 மடங்காக அதிகரித்துள்ளது. அடுத்த 20 ஆண்டுகளில் இது மேலும் இரட்டிப்பாகும் அபாயமும் உள்ளது. பெரும்பாலான பிளாஸ்ரிக் பொருள்கள் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக் கூடியனவாக இருக்கின்றன. இந்தத் தகவலை உலக பொருளாதார பேரவை அமைப்பு வெளியிட்டுள்ளது.

## கொழும்பில் 1000 பிச்சைக்காரர்கள்

### 16000 ற்கும் மேல் கட்டாக்காலி நாய்கள்

கொழும்பு நகரில் 1000க்கும் மேற்பட்ட யாசகர்கள் உள்ளனர். இவர்களில் மூன்றில் ஒருவீதம் சிறு பிள்ளைகள் எனத் தெரிவித்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க, 16,000 ற்கும் மேல் கட்டாக்காலி நாய்கள் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

கொழும்பில் கடந்த 21.01.2016 வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அமைச்சர் சம்பிக்க ரணவக்க இத்தகவல்களை வெளியிட்டார்.

அமைச்சர் இங்கு தொடர்ந்தும் தகவல் தருகையில், ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் குடிசைகளிலும் இருக்கின்றனர். 68,000 பேர் கொழும்பு நகரில் சட்டவிரோதமாக குடிசைகளில் வாழ்கின்றனர். இக்காணிகள் அனைத்தும் அரசுக்கு சொந்தமானவை. 1600 குடும்பங்கள் புகையிரத பாதை ஓரக் குடியிருப்புக்களில் வாழ்கின்றனர்.

மேற்கண்ட அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். இன்று மேல் மாகாணத்தில் மக்கள் குடியேற்றத்திற்காக 38,000 ஏக்கர் காணி மட்டுமே மிஞ்சியுள்ளது. இதற்குள் மக்கள் அனைவரும் குடியேற்றப்பட வேண்டும் என்றார்.

# பண்டிகைக்கால விற்பனை நிலையங்கள் மூலம் மன்னார் நகரசபைக்கு 5 மில்லியன் ரூபா. வருமானம்

கடந்த டிசம்பர் மாதம் மன்னார் நகரசபையால் கேள்வி கோரல் முறையில் வழங்கப்பட்ட பண்டிகைக்கால விற்பனை நிலையங்கள் மூலம் 5 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றது. இதில் எஞ்சியுள்ள சுமார் 3 மில்லியன் ரூபா நிதியின் மூலம் மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட 15 கிராம அலுவலர்கள் பிரிவுகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட் தெரிவித்தார்.

குறித்த வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பது தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் கடந்த ஜனவரி 7ஆம் திகதி மன்னார் நகரசபையில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் நகர சபையினால் கடந்த பண்டிகைக்காலங்களில் குத்தகையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 5 மில்லியன் ரூபா பாதீட்டில் உள்ளடங்கப்பட்ட வேலைகளுக்காகவும், எஞ்சிய 3 மில்லியன் ரூபா வருமானத்தைக் குறை நிரப்பு வரவு - செலவுத் திட்டம் மூலம் 15 கிராம சேவகர் பிரிவுக்கும் தலா 0.2 மில்லியன் ரூபா வீதம் குறித்த பிரதேசங்களின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் வீதி வேலைகளை மேற்கொள்ளச் சபையால் உத்தேசிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மக்களின் அபிப்பிராயங்கள் மற்றும் ஆலோசகைகளைப் பெறும் வகையில் குறித்த அவசர கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் கலந்துகொள்ளும் வகையில் மன்னார் நகரசபையின் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் 15 கிராம சேவகர் பிரிவுகளையும் சார்ந்த கிராம சேவகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற சமூக மட்ட அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, அதன் பிரகாரம் மன்னார் நகரத்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்ட பலர் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# ஆயரை சந்திக்க வரும் பிரமுகர்கள் மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்த வேண்டாம்

### மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்ல செயலகம் வேண்டுகோள்

மன்னார் மறைமாவட்டத்தின் இளைப்பாறிய ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களைச் சந்திக்கவரும் பிரமுகர்களோ அரசியல்வாதிகளோ அல்லது அவர்களுடன் வருகைதரும் பத்திரிகை நிருபர்களோ இங்கு பேசப்படும் விடயங்களை மிகைப்படுத்தியோ அல்லது அவற்றைத் தங்களுக்குச் சாதகமாகவோ மாற்றி, திரித்துக்கூறி மக்கள் மத்தியில் பதற்றத்தையும், சந்தேகங்களையும் ஏற்படுத்த வேண்டாம் என்று மன்னார் ஆயர் இல்லச் செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மன்னார் மறைமாவட்டத்தின் இளைப்பாறிய ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை இக்கட்டான காலத்தில்கூட உண்மைக்காக, நீதிக்காக ஓங்கிக் குரல் கொடுத்தவர். அவரது உண்மைக்கான, நீதிக்கான குரலும் அவருடைய மனிதநேயப் பணிகளும் இலங்கையில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் பேசப்பட்டு, பாராட்டப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும் என்பது யாவரும் அறிந்ததே.

இவ்வாறாகப் பல அரும்பணிகள் செய்த ஆயருக்கு அண்மையில் ஏற்பட்ட நோய் எம் எல்லோரையும் அதிர்ச்சிக்கும் கவலைக்கும் உள்ளாக்கியுள்ளது. ஆயர் செய்த பணிகளும் அவருடைய உண்மைக்கான குரலும் தொடரவேண்டும் என்பதே எல்லோருடைய செபமும் அவாவுமாகும்.

அவர் தற்போது பல சிகிச்சைகளுக்குப் பின்பு ஓரளவு உடல்நலம் தேறி ஆயர் இல்லத்தில் ஓய்வுபெற்றுவருகின்ற இவ்வேளையில் அவரைப் பார்வையிட பல பிரமுகர்கள், அவரால் உருவாக்கப்பட்டவர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பங்கு மக்கள் எனப் பலர் ஆயரை பார்வையிட்டும் மற்றும் மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அப்போஸ்தலிக்க பரிபாலகரான அதிவந்தனைக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களைச் சந்தித்து ஆசீர் பெற்றுச் செல்வதும் யாவரும் அறிந்த விடயமாகும்.

இவ்வாறு இருக்க, கடந்த சில காலங்களாக அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசப் ஆண்டகையின் உடல் நிலை குறித்தும் மற்றும் மறைமாவட்டம் குறித்தும் வெளிவருகின்ற தவறான மற்றும் திரிவுபடுத்தப்பட்ட கருத்துக்கள் ஆயர் இல்ல வட்டாரத்துக்கும் ஆயர் மட்டில் அக்கறை கொள்ளும் மக்களுக்கும் அதிர்ச்சியையும் வேதனையையும் தருவதாக உள்ளது.

எனவே எதிர்வரும் காலங்களில் ஆயரைச் சந்திக்கவரும் பிரமுகர்களோ, அரசியல்வாதிகளோ அல்லது அவர்களுடன் வருகைதரும் பத்திரிகை நிருபர்களோ இங்கு பேசப்படும் விடயங்களை மிகைப்படுத்தியோ, மாற்றி திரித்துக் கூறியோ மக்கள் மத்தியில் பதற்றத்தை, சந்தேகங்களை ஏற்படுத்தி ஆயரையும் ஆயர் இல்ல வட்டாரத்தையும் மனச்சஞ்சலத்துக்கு உள்ளாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் இனிவரும் காலங்களில் ஆயர் குறித்தோ மற்றும் ஆயர் இல்லத்தில் நிகழும் எந்த நிகழ்வுகள் குறித்தோ ஆயர் இல்லச் செயலகத்தின் அனுமதி இன்றி தன்னிச்சையாகச் செயற்பட்டு எந்தக் கருத்துக்களையும் சமூக வலைத்தளங்களிலோ அல்லது பத்திரிகைகளிலோ வெளியிட வேண்டாம் என கேட்டுகொள்கிறோம் என மன்னார் மறை மாவட்ட ஆயர் இல்லச் செயலகத்தின் ஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அப்போஸ்தலிக்க பரிபாலகர் அமைச்சர் ரிசாட் சந்திப்பு

மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையை அமைச்சர் ரிசாட் பதியுதீன் கடந்த ஜனவரி மாதம் 19ஆம் திகதி அன்று சந்தித்து தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளாரும் கலந்துகொண்டார். அப்போஸ்தலிக்க பரிபாலகர் அமைச்சர் ரிசாட் பதியுதீன் மன்னார் மாவட்டத்துக்கு ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டியதுடன் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இன்னும் தீவிரம் காட்டி தீர்த்துவைக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார். அத்துடன் மன்னாரின் உட்கட்டமைப்பு குறைபாடுகள் மற்றும் வைத்தியசாலைக் குறைபாடுகளைத் தீர்த்துவைப்பதற்கு அமைச்சர் தனது அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்தார். ஆயருடனான சந்திப்பில் கலந்துகொண்ட முக்கியஸ்தர்கள் மன்னாரின் குறைபாடுகள் தொடர்பில் விடுத்த கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் ரிசாட் தெரிவித்தார்.

## தமிழ் மக்கள் பேரவை உருவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம்

### மன்னார் பிரஜைகள்குழுத் தலைவர்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள சில அரசியல்வாதிகளின் தன்னிச்சையான போக்கே தமிழ் மக்கள் பேரவை உருவாகக் காரணமென மன்னார் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளதுடன், பேரவை மக்கள் சக்தியாகச் செயற்பட ஆதரவு வழங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை ஈ. செபமாலை அடிகளார் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் பேரவையை மன்னார் பிரஜைகள் குழு வரவேற்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள சில அரசியல்வாதிகளின் தன்னிச்சையான போக்கும் தமிழ் மக்களின் குரலாகச் செயற்படாமையுமே தமிழ் மக்கள் பேரவை உருவாகக் காரணமாக அமைந்துள்ளது.

வடமாகாண சபையானது தமிழர் பகுதிகளில் அரசு மேற்கொண்டது இனப்படுகொலையெனத் தெரிவிக்கையில் கூட்டமைப்பிலுள்ள சிலர் இது தொடர்பில் விசாரிக்க வேண்டுமெனத் தெரிவித்ததுடன் இனப்படுகொலையென்பது தொடர்பில் குரல் கொடுக்கவில்லை. இதுபோல் பல உதாரணங்களைக் குறிப்பிட முடியும். இவ்வாறான செயற்பாடே தமிழ் மக்கள் பேரவை உருவாகக் காரணமானது.

எம்மைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் பேரவை மக்கள் சக்தியாகச் செயற்பட எமது ஆதரவினை வழங்குவோம். இந்த அமைப்பு மக்கள் குரலாக மேலும் வலுப்பெற்று ஒலிக்க வேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பாகும்.

## தமிழ் மக்கள் பேரவைக்கு இளைப்பாறிய மன்னார் ஆயர் வாழ்த்து

### ஆயர் யோசேப்பு முன்னாள் எம்.பி சுரேஸ் சந்திப்பு



தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பரேமச்சந்திரனுக்கும், மன்னார் மறைமாவட்ட ஆயர் வண. இராயப்பு ஜோசப்பிற்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 05ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மன்னார் ஆயர் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. தமிழ் மக்கள் பேரவையின் தோற்றம், அதன் செயற்பாடுகள் குறித்து காலை 9.30 மணிக்கு மன்னார் ஆயர் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தமிழ் மக்கள் பேரவையின் தோற்றம், அதன் செயற்பாடுகள் குறித்து ஆயர் சந்திப்பில் கலந்துகொண்ட பிரதிநிதிகளிடம் ஆர்வத்துடன் கேட்டறிந்த அதேவேளை, தமிழ் மக்கள் பேரவைக்கு தனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்குவதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் கலாநிதி க.சர்வேஸ்வரன், மன்னார் நகரசபை முன்னாள் பிரதித் தலைவர் ஜேம்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.


## தலைமன்னாரில் சிறப்பாக இயங்கும் குடும்பக் குழு

தலைமன்னார் பங்கின் குடும்பக் குழுவானது 1990ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை பல பணிகளைச் செய்துகொண்டு வருகின்றது. இக்குடும்பக் குழுவின் பணியானது பிரிந்த குடும்பங்களை ஒன்றுசேர்ப்பது, திருமணம் முடிக்கின்ற வீடுகளில் வழிபாடுகள் வைப்பது, ஒவ்வொரு மாதமும் திருமணம் முடித்த குடும்பங்களின் திருமண நாளை நினைவுபடுத்துமுகமாக அந்தந்த வீடுகளுக்குச் சென்று அறிவிப்பது போன்ற கடமைகளைச் செய்கின்றார்கள்.

திருமணப் பெயர்ப் பட்டியலை ஒவ்வொரு மாதமும் தயாரித்து மாதத்தின் கடைசி ஞாயிறு திருப்பலியை குடும்ப தினமாக அனுசரிப்பதற்கு ஏற்பாடு செய்கின்றார்கள். அந்த மாதத்தில் திருமணம் முடித்தவர்களின் பெயர் பட்டியலை திருப்பலியில் வாசிக்கின்றார்கள். 25வது, 50வது, 60வது யூபிலியை நினைவுகூருகின்ற குடும்பங்களை அந்தந்த மாதங்களில் குடும்ப ஞாயிறு திருப்பலியில் கௌரவிக்கின்றார்கள். வருடக் கடைசியில் திருமண யூபிலியை நிறைவுசெய்கின்ற குடும்பங்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஞாயிறு திருப்பலியில் அவர்களுடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகளினால் மாலைகள் போட்டு கௌரவிப்பதற்குரிய ஏற்பாடுகளை இக்குடும்ப குழுவினர் சிறப்புப் பணியாகச் செய்துவருகின்றனர்.

*தகவல் : அல்பிறட் சில்வா*

## இரக்கத்தின் யூபிலி ஆண்டில் வவுனியா பம்பைமடு இறை இரக்க அரசர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள்




இந்த இறையிரக்க ஆண்டில் கனிபோன்ற இறையிரக்கத்தைச் சுவைக்க மன்னார் மறைமாவட்டத்தில் முதல் முறையாக பம்பைமடு பங்கு ஆலயம் இறையிரக்க அரசருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஆயர் அவர்களின் அனுமதியுடன் இலங்கையிலும், வெளிநாட்டிலும் உள்ள இறையிரக்க பக்தர்களின் தியாகத்தில் இந்த ஆலயம் பொலிவுடன் கட்டப்பட்டு வருகின்றது. தினமும் 3.00 மணிக்கு இறையிரக்க செபமாலையும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இறையிரக்க செபமாலையும் திருப்பலியும், மாதத்தின் முதல் வெள்ளியில் பாவசங்கீர்த்தனமும், இறையிரக்க வழிபாடும், நற்கருணை எழுந்தேற்றமும், திருப்பலியும் வவுனியா பகுதியில் உள்ள பல மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

போலந்து நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட இறையிரக்க அரசர் திருவுருவப்படம் ஆலயத்தை அருளால் நிரப்புகின்றது. இந்த இரக்கத்தின் சந்நிதிக்கு அன்போடு அழைத்து நிற்கின்றோம்.

*தகவல் : பங்குத்தந்தை, இறையிரக்க அரசர் ஆலயம், மன்னார் வீதி, பம்பைமடு, வவுனியா.*

## தலைமன்னாரில் திருமண வைர, பொன், வெள்ளிவிழா நிகழ்வுகள்



தலைமன்னார் மேற்கு புனித லோறன்சியார் ஆலயத்தில் கடந்த டிசம்பர் மாதம் 28ஆம் திகதி ஞாயிறன்று திருமண வைர விழா, பொன் விழா, வெள்ளி விழா தம்பதியர் கௌரவிக்கப்பட்டனர். பங்கின் குடும்பக்குழுவினரின் அனுசரணையுடன் மேற்படி விழா நடந்தேறியது.

அன்றையநாள் காலைத் திருப்பலி ஆரம்ப நிகழ்வுக்கு 60ஆவது வைர விழாவைக் கொண்டாடும் திரு. திருமதி. அந்தோனிப்பிள்ளை பிலோமினா, 50 ஆவது பொன்விழாவை கொண்டாடும் திரு. திருமதி. தனசீலன் கூஞ்ஞ மரிய செலின் மற்றும் 25ஆவது வெள்ளிவிழாவைக் கொண்டாடும் 16 குடும்பங்கள் இவர்களின் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளினால் மலர்மாலை அணிவித்து, ஆலயப் போட்டிக்கோவிலில் வரவேற்கப்பட்டனர்.

பங்குத்தந்தை அருட்தந்தை நவரெட்னம் அடிகளாரும் அருட்தந்தை நேரு அடிகளாரும் இச்சிறப்புத் திருப்பலியை நிறைவேற்றினார்கள். திருப்பலி வேளையில் அன்றைய நாயகர்களான குடும்பங்களின் திருமண வாக்குறுதிகள் புதுப்பிக்கப்பட்டன. திருப்பலியின்பின் இவர்களின் குடும்பத்தினர் அனைவரும் இவர்களிடமிருந்து ஆசீர்வாதம் பெற்று மகிழ்ந்தனர். பின்பு குடும்பக்குழுவினர் இவர்களுக்கு தேனீர் விருந்தளித்து பரிசில்களும் வழங்கி கௌரவித்தனர்.

அன்று மாலை 6.00 மணிக்கு ஊரின் முதியோர் சங்க உறுப்பினரால் விவிலிய வினோத உடைப் போட்டியும், குழுக்களாகப் பிரிந்து பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. *தகவல் : அல்பிறட் சில்வா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தவக்காலச் சிறப்பிதழ்




# நோன்பு தேவையா?

அருள்பணி N. ஜான் டெமசீன், திண்டிவனம்






திருநீற்றுப் புதனன்று மறையுரையாற்றிய அருள்பணியாளர் ஒருவர், "அன்பார்ந்த சகோதரர் சகோதரிகளே! இன்றிலிருந்து தவக்காலம் ஆரம்பமாகின்றது. எனவே பழைய பாவ வாழ்க்கையை விட்டுவிட்டு, புதிய பாவ வாழ்க்கையை ஆரம்பியுங்கள்!" என்று சொன்னாராம்.

தவக்காலம் என்பது புதிய பாவ வாழ்வை ஆரம்பிப்பதற்காக அல்ல, மாறாக புதிய வாழ்வை ஆரம்பிப்பதற்காக, தவக்காலத்தில் நாம் நோன்பு இருப்பதும், இறைவேண்டலில் ஈடுபடுவதும் நமது தனிப்பட்ட வாழ்வைச் சுத்திகரிப்பதற்கும், பொதுவாழ்வில் அன்பும், நீதியும், உண்மையும், பகிர்தலும் கொண்டவர்களாய் வாழ்வதற்காகவுமே!

### *பழைய ஏற்பாட்டில் நோன்பு*

ஆண்டவர் வழங்கிய பத்துக் கட்டளைகளைப் பலகைகளில் எழுதுவதற்கு முன்பு மோசே 40 பகலும் 40 இரவும் ஆண்டவரோடு இருந்தார். அப்போது அவர் உண்ணவும் இல்லை: தண்ணீர் பருகவும் இல்லை (காண். விப 34:28). எனவே ஆண்டவரின் உடனிருப்பை ஆழமாக, அழுத்தமாக உணர மோசே 40 நாள்கள் நோன்பிருந்தார் என்று நாம் பொருள் கொள்ளலாமல்லவா?

ஆதலால் நோன்பு இருக்கும் நாள்கள் இறைவனின் உடனிருப்பை ஆழமாக உணர்த்தும் நாள்கள் எனலாம். இறைவனின் முன்னிலையில் தூய்மையாக்கப்பட வேண்டுமென்றால் நோன்பிருக்க வேண்டும் என்கின்ற எண்ணம் லேவியர் நூலில் காணப்படுகிறது (காண். லேவி 16:29-31).

நினிவே நகர மக்கள் உண்ணா நோன்பிருந்து, சாக்கு உடை அணிந்துகொண்டமையால் கடவுளின் கடுந்தண்டனையில் இருந்து தப்பித்துக்கொண்டார்கள் (காண். யோனா 3:5-10). இதனால்தான் இறைவாக்கினர் யோனா, "இறைவா! நீர் கனிவுமிக்கவர், இரக்கமுள்ளவர், மிகுந்த பொறுமையும் அளவிலா அன்பும் உடையவர்" என்கிறார் (யோனா 4:2).

யூத மக்களைப் பேராபத்திலிருந்து மீட்கப் புரட்சிகரமான செயலில் ஈடுபட்ட பெண்கள் யூதித்து, எஸ்தர் ஆகியோர். இவர்களது முயற்சி வெற்றி அடைய யூத சமூகம் முழுவதுமே உண்ணா நோன்பு இருந்து இறைவேண்டலில் ஈடுபட்டதாக நாம் அறிகின்றோம். இவ்வாறு நோன்பானது இறைவனின் உடனிருப்பை உணரவும், அவரது இரக்கத்தைப் பெறவும், நாம் நினைத்த காரியம் நிறைவேறவும், ஆண்டவரின் அருளைப் பெறவும் துணைபுரிகின்றது.

இறைவாக்கினர்கள் சுட்டிக்காட்டும் நோன்போ புரட்சிகரமானதாய் இருக்கின்றது. நோன்பினால் ஏற்படும் அகமாற்றம் நமது அன்றாட வாழ்வில் வெளிப்பட வேண்டும். இல்லையேல் அது வெற்றுச்சடங்கு என்கின்றனர் இறை வாக்கினர்கள். "நோன்பு என்பது உண்ணாமலிருப்பதும், சாக்கு உடையையும் சாம்பலையும் அணிந்து கொள்வது மட்டுமன்று, இவற்றிற்கு மேலாக பசித்தோருக்கு உணவைப் பகிர்ந்து கொடுப்பதும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்வதுமாகும்! என்கிறார் இறைவாக்கினர் எசாயா (காண். எசா 58:3-12).

உண்மையான நோன்பு என்பது நேர்மையுடன் நீதிவழங்குவதும், கருணையைப் பொழிவதுமாகும் என்கின்றார் இறைவாக்கினர் செக்கரியா (காண். செக் 7:3-10). எனவே நோன்பு என்பது பொது வாழ்வில் நாம் கடைப்பிடிக்கவேண்டிய பகிர்தல், உண்மை, அன்பு, நீதி இவைகளைச் சுட்டிக்காட்டும் புனிதச்செயலாகும்.

### *புதிய ஏற்பாட்டில் நோன்பு*

ஆண்டவர் இயேசு 40 நாள்கள் உண்ணா நோன்பிருந்து சோதனையை வென்று சாதனை வீரராய், மாபெரும் இறைவாக்கினராய் தமது பொதுவாழ்வை ஆரம்பிப்பதாக நற்செய்தியாளர்கள் மத்தேயுவும் லூக்காவும் கூறுகின்றார்கள் (காண். மத் 4:1-11): லூக் 4:1-13).

இயேசு எடுத்துக்கொண்ட இலட்சிய வாழ்வுக்கு உறுதியூட்டும் உரமாக, வளம் சேர்க்கும் வரமாக 40 நாள்கள் உண்ணா நோன்பு துணைபுரிந்துள்ளது. பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள் சுட்டியுள்ளதுபோல் இயேசுவின் நோன்புக்கும் அவரது வாழ்வுக்கும் பெரிய தொடர்பு இருந்துள்ளதை நாம் காண்கிறோம். ஏனெனில் அவர் தமது வாழ்வு முழுவதுமே கருணை, இரக்கம், அன்பு, நீதி, உண்மை உடையவராய்த் திகழ்ந்தார். நோன்பைப்பற்றி இயேசு பின்வருமாறு இறைவாக்கினர் பாணியில் மொழிகின்றார். "வெளிவேடக்காரரைப்போல் நோன்பு இருக்கவேண்டாம்! நோன்பு இருப்பது இறைவனுக்கு மட்டும் தெரியட்டும்" (காண். மத் 6:16-18). நோன்பினால் ஏற்படும் அகமாற்றம்தான் மிக முக்கியமானது.

தொடக்ககாலத் திருச்சபையிலும் நோன்பைக் கடைப்பிடிக்கும் வழக்கம் இருந்துள்ளது. பர்னபாவும் சவுலும் (பவுல்) திருப்பணிக்காக அனுப்பப்பட்டபோதும் (காண். திப 13:1-3), திருச்சபையின் மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோதும் (காண். திப. 14:23) நோன்பிருந்து இறைவேண்டலில் இறைமக்கள் ஈடுபட்டிருந்தனர்.

### *நோன்பைப் பற்றிய ஓர் இறையியல் பார்வை*

இறைவனின் உடனிருப்பை உணர்த்துவது நோன்பு. இறைவனின் அருளையும், இரக்கத்தையும் பொழியவைப்பது நோன்பு. நமது எண்ணங்கள் நிறைவேறிட ஆண்டவரின் வல்லமையை வழங்குவதும் நோன்பு.

எனினும் தனிமனித வாழ்வில் அறநெறியையும், நன்னடத்தையையும் நோன்பு வலியுறுத்துகின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. உணவில் நாம் கொண்டிருக்கும் கட்டுப்பாடானது உடலையும், உள்ளத்தையும் கட்டுப்பட வைக்கிறது. நமது உடலும், உள்ளமும் தூய்மையாக்கப்படுகின்றன. இதனால் தனிமனித வாழ்வில் ஒழுக்கமும், கட்டுப்பாடும் அதிகரிக்கின்றன. மருத்துவர்களும் நோன்பு இருப்பது நல்லது என்றே கூறுகின்றார்கள்.

நோன்பு தனிமனித அறத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. செல்வர்கள் தாங்கள் பெற்றுள்ள பொருள் வளங்களை ஏழைகளோடு பகிர்ந்து கொள்ளும் பண்பினை நோன்பு வலியுறுத்துகின்றது. மத் 25:35-40 இல் காணப்படுகின்ற மனித நேயம்தான் ஒவ்வொரு நோன்பின் அடித்தளமாகும். உணவு, உடை, இருப்பிடம் இவைகளில் கட்டுப்பாடாக இருப்பதனால் எஞ்சுகின்ற செல்வத்தை வறியவரோடு பகிர்ந்துகொடுப்பது நோன்பின் உயரிய நோக்கமாகும். எனவேதான் திருத்தந்தை ஆறாம் பவுல் பெனித்தேமினி (PAENITEMIN) என்கின்ற திருத்தூது அறிவுரையில் "பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துள்ள செல்வமிக்க நாடுகள் தங்களது ஆடம்பரங்களைக் கட்டுப்படுத்தி வாழவேண்டும். இதனால் ஏற்படுகின்ற பயனானது ஏழ்மையிலும் பசியிலும் தவிக்கின்ற நாடுகளிலுள்ள சகோதர சகோதரிகளுக்கு உதவியாக மாறிவிட வேண்டும் என்றார். இவ்வாண்டு நாம் கடைப்பிடிக்கும் நோன்பு பொருளாழம் மிக்கதாக, நமக்கும் பிறருக்கும் பயனளிப்பதாக, இறைவனுக்கு மகிமை தருவதாக அமையட்டும்.

**- நன்றி - தோழன்**

# இறை அருளின் காலமே தவக்காலம்

*தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்,*
*கி. அருளப்பு, விடத்தல்தீவு*

கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய இந்த யூபிலி ஆண்டிலே வரும் தவக்காலத்தில் கடவுளின் இரக்கத்தை அனுபவிக்கவும் கொண்டாடவும் அன்னையாம் திருச்சபை எம் ஒவ்வொருவரையும் அழைக்கின்றது. செப தப தானமே தவக்காலத்தின் நோக்கமும் குறிக்கோளுமாகும். இதைத்தான் திருச்சபையும் திருவழிபாடும் எமக்கு வலியுறுத்துகின்றன.

இந்த நவீன காலத்தில் தவக்காலமென்பது தேவைதானா? என்னும் கேள்வி இன்று பலருடைய உள்ளத்தில் எழலாம். அதுவும் இந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டில் இது அவசியம் தேவையென நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும். ஏனெனில் நாம் அனைவரும் பாவிகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்தகைய எண்ணமோ, உணர்வோ இன்று பலரிடம் இல்லை. தாங்கள் செய்யும் பாவங்களை நியாயப்படுத்தும் போக்கே இன்றைய சமுதாயத்தில் பலரிடம் காணப்படுகின்றது. கல்லான இதயமின்றி சதையிலான இதயம் இருந்தால் மட்டுமே இதை ஒருவர் உணரவும் புரிந்துகொள்ளவும் முடியும்.

இரக்கத்தின் ஆண்டிலே, இறை அருளைத்தேடும் இத்தவக்காலத்திலே, வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்களை இறைவார்த்தையின் ஒளியில் ஆராய்ந்து சிந்தித்து தெளிவடைய இரக்கத்தின் ஆண்டவர் எம் அனைவரையும் அழைக்கின்றார். உள்மன சுதந்திரத்துடன் அகம் நோக்கி பயணம் செய்யும் நாம் பல அனுபவங்களுக்குள் புதைந்து தொலைந்துவிடாமல் எழுந்து எதிர்நோக்குடன் பயணிக்க முயல்வது சிறப்பாகும்.

கிறிஸ்தவ விசுவாசப் பயணத்தில் இயேசுவைப் பின்சென்று, அவரது கையளிப்பில் மலர்ந்த இறையிரக்கத்தின் விழுமியங்களை வாழ்ந்து முதிர்ச்சியடைய, இச்சிந்தனைகளை எம் செப தப தான தர்மங்கள் ஊடாக செயற்படுத்த திருச்சபை அழைக்கின்றது. "உங்கள் இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" என்று யோவேல் இறைவாக்கினர் தனது செய்தியில் வெளிப்படுத்துகின்றார். இதுவே மனமாற்றத்தின் அழைப்பாகும். இது ஒரு சாவால்மிக்க அழைப்பாகும். இது எம்மை சுய ஆய்வு செய்யும்படி விடுக்கப்படும் அழைப்பாகும்.

வழமையான சடங்குகள், பழக்கப்பட்ட மரபுகளைச் செய்து எம் இதயம் இரக்கத்தின் ஆண்டவரிடம் இருந்து தொலைவில் இருக்கின்றதென்றால் அதன் பயன் என்ன? நடந்துவந்த பாதையில் எத்தனை தேவைகளை எம் இதயம் உணர்ந்து துடித்தது? தேவைகளை நிறைவுசெய்து இன்புற்றிருக்கத் தேடியவை, தேடிவந்தவை கைகூடியபோது அவற்றைப் பற்றிக்கொண்டும் அவற்றுடன் ஒட்டிக்கொண்டும் எம் இதயம் எப்படித் துவண்டுள்ளது!

சக்கேயு என்ற செல்வந்தர் முற்றிலும் உலக நாட்டங்களுடன் வாழ்ந்தார். அவரது ஊரவர்கள் அவரை வெறுத்தனர். பிறரை ஏமாற்றுபவராக, சுரண்டுபவராக இருந்தாலும் உள்ளம் நல்லவராக இருந்தார். அவருக்கு ஒரு விருப்பு இருந்தது. இயேசு யார் என்று அவர் பார்க்க விரும்பினார். அவரது விருப்பை நிறைவேற்ற இரு தடைகள் இருந்தன. ஆயினும் முயன்று அவர்முன்னே சென்றார். இயேசுவைக் கண்டார். இயேசுவும் அவரைக் கண்டார். "சக்கேயுவே விரைவாய் இறங்கிவாரும்" என்று அழைக்கும் இயேசுவின் குரலைக் கேட்டார்.

மரத்தில் இருந்து மட்டும் அவர் இறங்கவில்லை, தன் பாவநிலைகளில் இருந்தும் அவர் இறங்கிவந்தார். "இந்த வீட்டுக்கு மீட்பு உண்டாயிற்று" என்றார் இயேசு. சக்கேயு தன் உள்ளத்தை வெறுமையாக்கி இயேசுவின் மீட்பை உணர்ந்ததால் தன் உடமைகளைத் தானம் செய்தார். ஆண்டவரை உடைமையாக்கி விடுதலை அடைந்தார். அவருக்குரிய பங்கைக் காப்பதும் ஆண்டவரே என்ற சுயம் பெற்றார்.

இன்று அன்னையாம் திருச்சபை எம் ஒவ்வொருரையும் மனமாற்றம் பெற அழைக்கின்றது. அன்று இயேசு எமக்கு விட்டுச் சென்ற அவருடைய கல்வாரித் திருப்பலியை தினம் தினம் நிறைவேற்றி வருகின்றோம். இதில் இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்பு போன்றவையோடு அன்னை மரியாவையும், புனிதர்களையும் எம் தாய்த் திருச்சபை வருடாவருடம் நினைவுகூர்ந்து வருவதை நாம் அறிவோம். இந்த நிகழ்வுகள் அனைத்தும் எம் ஒவ்வொருவரையும் புடம் போடவேண்டும். கடந்த வருடத்துக்கும் இந்த வருடத்துக்கும் இடையில் எம்முடைய கிறிஸ்தவ வாழ்வு ஆன்மீகம் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது என்பதை நாம் சுய ஆய்வு செய்ய வேண்டும்.

மாற்றமில்லா வாழ்வு! நாற்றம் அடிக்கும் வாழ்வு! மாற்றம் என்பது ஏற்றத்தின் முதல்படி. தண்ணீர் ஓடிக்கொண்டு இருப்பதுபோல் மனிதன் மாறிக்கொண்டே இருக்க வேண்டும். இது இயேசுவின் திருமுழுக்கு எமக்கு கொடுக்கும் அழைப்பு! இந்த இரக்கத்தின் ஆண்டும் இதை எமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றது. இறங்கி வா! இறக்கி வை! அப்போது உன் வீடே மீட்படையும்.

*தூய மனத்தோர் பேறுபெற்றோர் - என்று*
*தூய மகன் சொன்னார் - அவர்*
*தோன்றும் கடவுளை நேரில் காண்பார்*
*சொர்க்கம் வருமென்றார்.*
*காயும் உடலை வாட்டி எடுப்பது*
*காமம் களவுகளே - ஒரு*
*காலம் மயக்கும் இன்பங்களெல்லாம்*
*மறுநாள் கவலைகளே*
*வாயும் வயிறும் ஆசையில் வீழ்ந்தால்*
*வாழ்கை பாலைவனம் - அவர்*
*தூய மனத்தில் வாழ நினைத்தால்*
*எல்லாம் சோலைவனம்.* (இயேசு காவியம்)

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# தவக்காலம் .....!

மற்றுமொரு தவக்காலம்! வழக்கம்போல் மீண்டும் சிலுவைப்பாதைகள், ஒருசந்திகள் என்று வேறேதும் கொண்டாட்டங்களுக்கு வழியே இல்லாத சோகமான காலம்..... எப்போதும் உயிர்ப்புத் திருவிழா வரும் என்று ஏங்குகின்ற காலம்..... இயந்திரமயமாகிவிட்ட காலச்சூழ்நிலையில், சடங்கு சம்பிரதாயமான வாழ்க்கையில் இப்படியும் நினைக்கத் தோன்றும்!

உண்மைதான், நமது வழிபாடுகள் நமது வாழ்க்கையைப் பாதிக்காதவரை, நமது ஆன்மீகம் ஆன்மாவரை சென்றடையாதவரை எல்லாமே சடங்குகள்தான். வழிபாட்டு நிகழ்வுகள் நமது வாழ்க்கையில் அர்த்தம் காணாதவரை அவை நீண்ட, நெடிய, காலத்தை விரயமாக்கும் சடங்குகள்தான்!

உள்ளத்தை மாற்றவும், உள் அர்த்தங்களை மாற்றவும், வாழ்வின் வசந்தத்தைத் தேடவும் தவக்காலம் நமக்கு உதவுகிறது. பாவம், குறைகள், மனித பலவீனங்கள் போன்றவைகளை அலசி ஆராயவும், உண்மையான, அடிப்படையான மனமாற்றத்திற்குப் பாதை அமைக்கவும் தவக்காலம் வழி அமைக்கின்றது.


எனவே இக்காலத்தை நன்கு பயன்படுத்துவோம். நற்செய்தியைக் கேட்டு, அதை நம்பவும், மனமாற்றம் பெற்று வாழ்ந்திடவும், இயேசு பெருமான் காட்டும் மீட்பின் பாதையில் வழிநடந்து செல்லவும், நமக்கு உதவிட இத்தவக்காலமும் இதனோடு இணைந்த பல்வேறு பக்திமுயற்சிகளும் நமக்கு வழிசமைக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# வர்ணிக்க முடியாத அவலங்களோடு வாழ்ந்த மக்களுக்கு தங்களது பிரசன்னமும் வழிநடாத்தலும் மிகுந்த ஆறுதலைக் கொடுத்தது.

### இளைப்பாறிய யாழ் ஆயருக்கு வத்திக்கான் நன்றி தெரிவிக்கிறது



யாழ். மறைமாவட்டத்தின் இளைப்பாறிய ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் பணியைப் பாராட்டியும் நன்றி தெரிவித்தும் வத்திக்கான் நற்செய்தி அறிவிப்புத் தலைமையகத்தின் கர்தினால் பேரருட்திரு. பெர்ணாண்டோ பிலோனி அவர்கள் ஆயருக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அக்கடிதத்தின் உள்ளடக்கம் வருமாறு:

**மேன்மைதங்கிய ஆயர் அவர்களே!**

தாங்கள் யாழ். மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி வழிகாட்டியாக பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் கிறிஸ்துவின் திருச்சபைக்கு ஆற்றிய நீண்டகால சேவைக்காக எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதற்காக இக்கடிதத்தை வரைகின்றேன். 50 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு குருவாக அதில் 33 ஆண்டுகள் அப்போஸ்தலிக்க வழிமரபின் அழைப்பைப் பெற்று 11 ஆண்டுகள் மன்னார் மறைமாவட்ட ஆயராகவும், பின்னர் 1992 யூலை 6ம் திகதியிலிருந்து யாழ். திருச்சபையின் ஆயராகவும் அரும் பணியாற்றியுள்ளீர்கள்.

தாங்கள் பணியாற்றிய மறைமாவட்டங்களில் நிலவிய கொடூரமான ஆயுதப்போர் காரணமாக தங்களது ஆயர் பணிக்காலம் முழுவதுமே தாங்கள் பல சவால்களையும், கஷ்டங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்நிலையில் பல வர்ணிக்க முடியாத அவலங்களோடு வாழ்ந்த மக்களுக்கு தங்களது பிரசன்னமும் வழிநடத்தலும் உண்மையாகவே மிகுந்த ஆறுதலைக் கொடுத்தது. நல்ல ஆயனைப்போல மந்தைகளைத் தாக்கவந்த ஓநாய்களைக் கண்டு அஞ்சி ஓடிவிடாமல், தங்கள் பாதுகாப்பையும் கருத்தில் கொள்ளாமல், தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களோடுகூட இருந்து பணியாற்றினீர்கள். இப்படியான தங்கள் பணியை மக்கள் எப்போதும் நன்றியோடு நினைவுகூர்வார்கள். அவர்களுடைய உள்ளார்ந்த நன்றியுணர்வு அவர்கள் தங்களுக்காக ஒப்புக்கொடுக்கும் செபங்களாக அமையும்.

இலங்கையின் மறைபரப்புத் திருச்சபை தங்களது பிரசன்னத்தினாலும், தலைமைத்துவப் பண்புகளினாலும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. ஓர் நீண்டகால அனுபவமுள்ள அர்ப்பணிக்கப்பட்ட மறைபரப்புப் பணியாளராகிய தங்களிடமிருந்து அது தொடர்ந்து பலன் பெற்றுக்கொண்டிருக்கும். எனது மறைபரப்புக் காரியாலயத்தில் பணியாற்றும் அனைவரோடும் சேர்ந்து மீண்டும் தங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். எமது செபங்கள் நிறைந்த நல்வாழ்த்துக்கள் கூறி விடைபெறுகின்றேன்.

## யாழ் மறைமாவட்டக் குருக்களின் பணித்தள மாற்றங்கள்

**அருட்தந்தை**

1.ஜே.பி.அன்ரனி - பங்குத்தந்தை, யாழ் அடைக்கல அ.ஆலயம்.
2.எம். ரெஜி இராஜேஸ்வரன் - பங்குத்தந்தை, சுண்டிக்குளி
3.ஏ. சி. கிறிஸ்தோப்பர் - பங்குத்தந்தை, கொழும்புத்துறை
4.ஜே. மத்தாயஸ் - பங்குத்தந்தை, புனித மரியாள் ஆல. கோப்பாய்
5.ஏ. ஜே. அன்ரனி ஜெயரஞ்சன் - பங்குத்தந்தை, நெடுந்தீவு.
6.எஸ். நேசநாயகம் - மறைமாவட்ட நிதிப் பொறுப்பாளர்
7.எக்ஸ். டபிள்யு. ஜேம்ஸ் - பங்குத்தந்தை, மிருசுவில் / இயக்குனர், திருவழிபாட்டு ஆணைக்குழு.
8.ஆர். சி. எக்ஸ். நேசராஜா - பங்குத்தந்தை, யாழ். மரியன்னை பேராலயம்/ யாழ். மறைக்கோட்ட குருமுதல்வர்.
9.ஆர். எச். சகாயநாயகம் - பங்குத்தந்தை, மாதகல்
10.ஜி. எப். கனிசியஸ் ராஜ் - பங்குத்தந்தை, வட்டக்கச்சி
11.எஸ். ஜே. சி. பாஸ்கரன் - அதிபர் புனித மடுத்தீனார் குருமடம்.
12. டபிள்யூ. சாள்ஸ் கொலின்ஸ் - அதிபர், கத்தோலிக்க அச்சகம்.
13.ரி.ஜே.கிருபாகரன் - அதிபர், புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி
14.எம்.எ.பி.ஆர். சவுந்தரநாயகம் - பங்குத்தந்தை, பண்டத்தரிப்பு
15.எஸ். இயூயின் பிரான்சிஸ் - அதிபர் கரித்தாஸ் - கியூடெக்
16.எ. ஜே. யாவிஸ் - பங்குத்தந்தை, பருத்தித்துறை / பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர்.
17.எ. அன்ரன் ஸ்ரீபன் - பங்குத்தந்தை, தர்மபுரம்
18.எ. புனிதகுமார் - பங்குத்தந்தை மல்வம் - உடுவில்
19.எம். இயேசுரட்ணம் - பங்குத்தந்தை, இளவாலை, இளவாலை மறைக்கோட்ட முதல்வர்.
20.எஸ்.ஜே.கியூ. ஜெயரஞ்சன் - பங்குத்தந்தை, மானிப்பாய்
21.ஜெ. எல்மோ அருள்ளேசன் - பங்குத்தந்தை, செம்பியன்பற்று
22.எஸ். டியூக் வின்சன் - பங்குத்தந்தை, மணல்காடு
23.ஆ. எஸ். சி. மரியதாஸ் - பங்குத்தந்தை, கூளாமுறிப்பு
24.பி. பத்திநாதன் - பங்குத்தந்தை, கரம்பொன்
25.எஸ். விமலசேகரன் - பங்குத்தந்தை, வலைப்பாடு
26.எ. யஸ்ரின் - பதில் பங்குத்தந்தை, குருநகர்
27.எம். டேவிட் - பங்குத்தந்தை, மண்டைதீவு
28.எம். பத்திநாதர் - பங்குத்தந்தை, உரும்பிராய்
29.எஸ். யூட் அமலதாஸ் - இயக்குனர் ஆரோபணம் & பங்குத்தந்தை உருத்திரபுரம்
30.எம். கான்ஸ்போவர் - பங்குத்தந்தை, சக்கோட்டை
31.எஸ். ஜே. இராஜநாயகம் -ஆன்மீக இயக்குனர் - யாழ். பல்கலைக்கழகம்
32.ஆர். ஸ்ரலின் - அதிபர் - 'அகவெளி' குடும்ப நலநிலையம்.
33.மகன் அலோசியஸ் - புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
34.எ.பி. திருமகன் - ஆன்மீக இயக்குனர்- யாழ்.சிறைச்சாலை
35.எக்ஸ். பேணாட் றெக்னோ - கிளி முல்லை மறைக்கோட்ட முதல்வர்
36.அன்ரன் அமலதாஸ், யாழ்/ சென்ஜேம்ஸ் ஆண்கள் கல்லூரி
37.சதீஸ்குமார் பி. - யாழ்/ புனித அன்ரனீஸ் கல்லூரி, ஊர்கா..

### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை மக்களுக்கு யாழ். இறைமக்கள் 15 ரூபா இலட்சம் பண உதவி

அண்மையில் பெய்த அடை மழையினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட சென்னை வாழ் ஏழை மக்களுக்கு உதவுமாறு யாழ். ஆயர் பேரருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிராகாசம் ஆண்டகை அவர்கள் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் யாழ். மறைமாவட்டத்தின் பங்குகள்தோறும் இறை மக்கள் வழங்கிய உதவி நிதியாக 15,26,720 ரூபா அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சென்னை மைலாப்பூர் பேராயர் பேரருட்திரு. ஜோர்ஜ் அந்தோனிசாமி அவர்கள் மூலமாக அனுப்பிவைக்கப்படும் இந்நிதி அங்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு நிவாரணமாக சென்றடைவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### திருத்தந்தையின் இலங்கை விஜய நினைவு நூல்

# வரலாற்றுப் பொக்கிஷம்

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் இலங்கை வருகையை (2015 ஜனவரி 13-15) நினைவுகூரும் வகையில் வெளியிடப்பட்டுள்ள "FROM VATICAN TO THE PEARL OF THE INDIAN OCEAN" என்ற பெயரைத் தாங்கிய இந்த நூலில் இலங்கை திருச்சபை மற்றும் அரசியல் பிரமுகர்களின் செய்திகள், புனித யோசப்வாஸ் மற்றும் திருத்தந்தை பிரான்சிஸ் பற்றிய விரிவான கட்டுரைகள், இலங்கை விஜயத்தின்போது திருத்தந்தை மற்றும் ஏனையவர்கள் ஆற்றிய உரைகள் ஆகியன மும்மொழிகளிலும் இடம்பெற்றுள்ளன. அத்துடன் 250க்கும் மேற்பட்ட வண்ண மயமான படங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. வரலாற்றுப் பொக்கிஷமாக வைத்திருக்கவேண்டிய இந்த நூல் 13X10 அங்குலம் அளவைக் கொண்டது. உங்களால் நேசிக்கப்படுபவர்களுக்கு இப்புத்தகம் ஒரு சிறந்த அன்பளிப்பாகும்.

**கிடைக்கும் இடங்கள்**

கொள்ளுப்பிட்டி: பெயார்/ புட், 704, காலிவீதி, கொழும்பு – 3
வெள்ளவத்தை: 73, மெனிங் ப்ளேஸ், கொழும்பு – 6
கொட்டாஞ்சேனை: கீல்ஸ் சுப்பர் மார்க்கட், இல. 01, பெஞ்சீன் வீதி கொட்டாஞ்சேனை, கொழும்பு – 13
வத்தளை: 12, சென்ட் செபெஸ்டியன் மாவத்தை.
கண்டி: 128/1, கொழும்பு வீதி, கண்டி
மட்டக்களப்பு: 11, இரண்டாம் குறுக்குத்தெரு, மட்டக்களப்பு
யாழ்ப்பாணம்: 117, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.
அட்டன் : 39 - 1/1, பிரதான வீதி, அட்டன்
திருகோணமலை: 134, பிரதானவீதி, திருகோணமலை
நீர்கொழும்பு: 180, பிரதான வீதி, நீர்கொழும்பு
கிளிநொச்சி : 56/2, ஏ9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி
கல்முனை: 149, யாசின் கட்டடம், பிரதானவீதி, கல்முனை
பண்டாரவளை : 35/5, அனுஷா கட்டடத் தொகுதி, பொலிஸ்கந்தை, வெலிமடை வீதி, பண்டாரவளை

மற்றும் உங்களது பங்குத் தேவாலயம், எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டட், 185, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14. தொலைபேசி 077 7751021, 011 7322783

## மன்னார் மாவட்டச் செய்திகள்

### மன்னாரில் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம் அறிமுகம்

இளம் கலைஞர்களின் ஆற்றல்களை ஊக்குவிக்கும் வகையில் இளம் கலைஞர்களின் கருத்துக்கள் அரங்கம் என்ற நிகழ்ச்சியை கெயார் சர்வதேச நிறுவனமும் மன்னார் மாவட்ட செயலகமும் இணைந்து அண்மையில் செயலகத்தில் நடத்தியது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்டச் செயலாளர் எம். வை. எஸ். தேசப்பிரிய கலந்துகொண்டார்.

கலாசாரம், நல்லிணக்கம், கல்வி, கலை, அரங்கம் மற்றும் வெளிப்பாடுகள் ஆகியவற்றின் ஊடாக நாடு முழுவதிலும் சகவாழ்வினை உருவாக்குவதே ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் செயற்பட்டுவரும் Youth Create திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். கிராமியக் கலை, கருத்துக்கள் அரங்கம், மேடை நாடகம், நடனம், சிறுகதை எழுத்தாக்கம் மற்றும் குறுந்திரைப்படம் போன்ற அரங்கேற்ற மற்றும் கட்புலக் கலை வடிவங்களுடாக ஜனநாயகம், மனித உரிமை மற்றும் நல்லிணக்கம் போன்றவற்றை பிரதிபலிக்கும் கலைப் படைப்புக்களை தயார்செய்து அவற்றை பரந்தளவில் பிரபல்யமடையச் செய்வது இத்திட்டத்தின் ஒரு பிரதான செயற்பாடாகும்.

அந்த அடிப்படையில் அத்திட்டத்தின் மூலம் பயிற்றப்பட்டு பல பிரதேசங்களில் ஆற்றுகைகளில் ஈடுபட்டுவரும் மன்னார் மாவட்ட இளம் கலைஞர்களின் திறன்களையும், சேவைகளையும் அறிமுகம் செய்யும் ஒரு சந்தர்ப்பமாக இந்நிகழ்வு அமைந்தது. இந்நிகழ்வின்போது மேடையேற்றப்பட்ட நாடகமானது கலந்துகொண்ட அனைவரது கவனத்தையும் ஈர்த்துக்கொண்ட ஒரு அம்சமாகும். நாட்டின் சமாதானத்திற்கு ஒரு பிரதான முட்டுக்கட்டையாக விளங்கும் மொழிப்பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தந்தையை இழந்த நிலையில் வறுமையில் தவிக்கும் ஒரு குடும்பத்தினை சித்தரிக்கும் இந்நாடகம் அனைவரையும் கண்கலங்க வைத்தது.

மேலும் இத்திட்டத்தின் மூலம் பயிற்றப்பட்ட குறுந்திரைப்படக் கலைஞர்களினால் தயாரிக்கப்பட்ட ஒருசில திரைப்படங்களும் இந்நிகழ்வின்போது திரையிடப்பட்டன. இந்நிகழ்வினையொட்டி சமாதானம், நல்லிணக்கம் போன்ற கருப்பொருட்களை சித்தரிக்கும் வகையில் ஒரு ஓவியக் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வின்போது கருத்துத் தெரிவித்த பிரதம அதிதி மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ். தேசப்பிரிய இனம், மொழி, சலாச்சாரம் என்பவற்றால் வேறுபட்டிருக்கும் மக்களை ஒன்றிணைப்பது நாட்டின் முக்கிய விடயமாகும். இவ்வாறான திட்டங்கள் ஊடாக நாட்டில் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தி வன்முறையற்ற சமூகத்தினை உருவாக்க முடியும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பல அரச, சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பிரதேச கலைஞர்கள் மற்றும் தனியார் வங்கித்துறை ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

### மன்னாரில் 98 வீதமானவர்களுக்கு மின்சாரம்

மன்னார் மாவட்டத்தில் 27 ஆயிரத்து 638 குடும்பங்களுக்கு கடந்த வருடம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இது 98 வீதமான மக்கள் குறித்த மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளமையைக் காட்டுவதாக மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர். போரின் பின்னர் கடந்த 2009ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் 37 வீதமாகக் காணப்பட்ட மின்சாரம் பெற்றுக்கொண்ட குடும்பங்களின் தொகை, கடந்த ஆறு வருடங்களின் பின்னர் 2015ஆம் ஆண்டு 98 வீதமாகக் காணப்படுகின்றது.

இருந்தபோதும் மன்னார் மாவட்டத்தில் சில பகுதிகளுக்கு இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும், அந்தப் பகுதிகளுக்கும் விரைவில் மின் விநியோகத்தை மேற்கொள்ளுமாறும் மாவட்ட இணைத்தலைவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### மர்மப் பொருள்கள் உள்ளதாகக் கூறி தோண்டிய இடத்தில் எதுவுமில்லை

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள மன்னார் தோட்டக்காடு கிராம அலுவலகர் பிரிவுப்பகுதியில் காணப்பட்ட காட்டுப் பகுதியில், மர்மப் பொருள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில், குறித்த அடையாளம் காணப்பட்ட பகுதி மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைவாகத் தோண்டப்பட்டபோதும் எவ்வித பொருளும் மீட்கப்படவில்லை.

### மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**- மன்னா நிர்வாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையிரக்கத்தின் திருமுகம்

## இறையிரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை அறிவிக்கும் முகமாக

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய ஆணை மடல் - தொடர் 2

(சென்றவார தொடர்ச்சி)

8. நமது கண்களை இயேசுவின்மீதும் அவரது இரக்கம் நிறைந்த பார்வையின்மீதும் பதியவைத்து நாம் தூய தமதிரித்துவத்தின் அன்பை அனுபவிக்கின்றோம். இயேசு தனது தந்தையிடமிருந்து பெற்ற பணி இறை அன்பின் மறைபொருளை அதன் முழுமையோடு வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான்.


திருநூல் முழுவதிலும் முதல் முதலாகவும், ஒரே இடத்திலும் "கடவுள் அன்பாய் இருக்கிறார்" (1யோவா 4:8:16) என்று யோவான் அறிவிக்கின்றார். இந்த அன்பு இயேசுவின் வாழ்வு முழுவதும் காணப்படக்கூடியதாகவும், உணரக்கூடியதாகவும், ஆக்கப்பட்டுள்ளது. அவரது ஆளுமை முழுவதும், அன்பு, அதுவும் கைமாறு கருதாமல் அளிக்கப்பட்ட அன்பு அன்றி வேறெதும் இல்லை. இயேசு தன்னை அணுகிவந்தவர்களோடு ஏற்படுத்திக்கொண்ட உறவு முற்றிலும் தனித்துவமானது, திரும்ப நிகழ்த்தமுடியாதது என்பதைக் காட்டுகின்றது. பாவிகள், ஏழையர், ஒதுக்கப்பட்டோர், நோயாளிகள், துன்புறுவோர் ஆகியோருக்கு அவர் நிகழ்த்திய அரும்செயல்கள் இரக்கத்தை கற்பிக்க செய்யப்பட்டவையே. அவரிடம் உள்ளவை அனைத்தும் இரக்கத்தையே பேசுகின்றன. அவரில் எதுவும் பரிவு இல்லாமல் இல்லை. இயேசு தன்னை பின்தொடர்ந்த மக்கள் கூட்டத்தைக் கண்டு அவர்கள் களைப்படைந்து, சக்தியிழந்து, தொலைந்து போய், வழிகாட்டுவோர் இன்றி இருப்பதை உணர்ந்தார். அவர்கள்மீது பெரும் பரிவு கொண்டார் (காண் மத். 15:37). இந்த எல்லாச் சூழல்களிலும் அவரை இயக்கியது இரக்கமேயன்றி வேறொன்றுமில்லை. இதே இரக்கத்தைக்கொண்டு அவர் தான் சந்தித்த மக்களின், உள்ளக்கிடக்கையை வாசித்தார். அவர்களின் உள்ளார்ந்த தேவைகளுக்கு பதிலிருத்தார். நயீன் ஊர் விதவையை சந்தித்தபோது, அவரின் மகனை அடக்கத்திற்கு எடுத்துச்சென்றபோது, அந்தத் துயரத்தாயின் துன்பத்தைக்கண்டு அவர்மீது பெரும் பரிவுகொண்டார். அவரது மகனை இறப்பினின்று உயிர்பெற்றெழச்செய்து அவரிடம் திருப்பித் தந்தார் (காண் லூக் 7:15). கெனசரெத்து பகுதியில் தீய ஆவி பிடித்திருந்தவரை குணமாக்கியபிறகு "உமது வீட்டிற்குப் போய் ஆண்டவர் உம்மீது இரக்கங்கொண்டு உமக்குச் செய்ததையெல்லாம் உம் உறவினருக்கு அறிவியும்" (மாற் 5:19) என்னும் பணியுடன் அவரை அனுப்புகின்றார். மத்தேயுவை அழைத்ததும் இரக்கத்தின் சூழலில் தரப்பட்டுள்ளது. வரிவசூலிக்கும் சாவடியை கடந்து சென்றபோது இயேசு மத்தேயுவை ஆவல்கொண்டு பார்த்தார். அந்தப் பார்வை இரக்கம் நிறைந்ததாய் இருந்தது. பாவியும் வரிவசூலிப்பவருமான அம்மனிதனின் பாவங்களை அந்தப் பார்வை மன்னித்து, மற்ற சீடர்களின் தயக்கத்தையும் தாண்டி, இயேசு அவரை தனது பன்னிரு திருத்தூதர்களுள் ஒருவராக அவரைத் தேர்ந்துகொண்டது. இந்த நற்செய்திப் பகுதியைப்பற்றி விளக்கும்போது புனித பீட, "இயேசு மத்தேயுவை இரக்கம் நிறைந்த அன்போடு உற்றுநோக்கித் தேர்ந்துகொண்டார்" என்றார். இந்தக் கருத்து என்னைக் கவர்ந்ததால் அதை என் ஆயர் பணியின் இலக்காகத் தேர்ந்துகொண்டேன்.

9. இரக்கத்திற்கென அர்ப்பணிக்கப்பட்ட உவமைகளில் இயேசு கடவுளின் தன்மையை, குற்றங்களை மன்னித்து வெறுத்தொதுக்குவதை பரிவினாலும், இரக்கத்தினாலும் மேற்கொள்ளும்வரை மனம் தளராத தந்தையாக வெளிப்படுத்துகின்றார். இவற்றுள் மூன்று உவமைகளை நாம் அறிவோம்: அவை காணாமற்போன ஆடு, தொலைந்த நாணயம், இரு மகன்களின் தந்தை (காண் லூக் 15: 1-32). இந்த உவமைகளில் கடவுள் எப்போதும், குறிப்பாக மன்னிக்கும்போது, மகிழ்ச்சி நிறைந்துள்ளவராகக் காட்டப்படுகின்றார். இவற்றில் நாம் நற்செய்தியின் கருவையும், நமது இறைநம்பிக்கையின் உட்கருவையும் காண்கின்றோம். ஏனெனில் இதயத்தை அன்பினால் நிறைத்து மன்னிப்பின் வழியாக ஆறுதலை கொணர்ந்து எல்லாவற்றையும் மேற்கொள்கின்ற ஓர் ஆற்றலாக இரக்கம் காட்டப்படுகின்றது.

நமது கிறிஸ்துவ வாழ்வின் முக்கிய போதனையை நாம் இன்னொரு உவமையிலிருந்து வெளிக்கொணரலாம். எத்தனைமுறை ஒருவரை மன்னிக்க வேண்டும் எனும் பேதுருவின் கேள்விக்கு ஏழுமுறை மட்டுமல்ல, எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன்" (மத். 18:22) என பதிலளிக்கின்றார். அதைத் தொடர்ந்து பெருந்தொகைக் கடனாக திரும்ப தர அழைக்கப்பட்டு தன் தலைவனின் இரக்கத்தை கெஞ்சி மன்றாடிய இரக்கமற்ற ஊழியனின் உவமையை கூறுகின்றார் இயேசு. அவனது கடனையெல்லாம் தலைவர் மன்னித்துவிடுகின்றார். ஆனால் அந்த ஊழியன் அவனிடம் சிறு தொகை கடன்பட்ட உடன் ஊழியனை சந்திக்கின்றான். அந்த உடன் ஊழியனும் காலில் விழுந்து அவனது இரக்கத்திற்கு மன்றாடுகின்றான். ஆனால் அந்த முதல் ஊழியன் அவனது வேண்டுதலை ஏற்க மறுத்து அவனை சிறையில் அடைக்கின்றான். தலைவன் இதைக் கேள்வியுறுகின்றபோது கோபம் கொண்டு, முதல் ஊழியனை அழைத்து, "நான் உனக்கு இரக்கம் காட்டியது போல நீயும் உன் உடன் பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா?" (மத் 18:33) எனக் கடிந்துகொள்கிறார். இறுதியாக இயேசு, "உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதர சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்கமாட்டார்" என்று (மத் 18:35) உவமையை முடிக்கின்றார்.

இந்த உவமை நம் எல்லோருக்கும் மிக ஆழமான பாடத்தைக் கொண்டுள்ளது. இரக்கம் என்பது இறைத்தந்தையின் செயற்பாடு மட்டுமல்ல, அவரின் உண்மையான பிள்ளைகள் யார் என்பதை நிர்ணயிக்கும் கருவியாகவும் விளங்குகின்றது என்பதை இயேசு வலியுறுத்துகின்றார். சுருங்கக்கூறின் நமக்கு முதலில் இரக்கம் காட்டப்பட்டதால் நாம் இரக்கம் காட்ட அழைக்கப்படுகின்றோம்.

25 எண்களைக் கொண்ட இந்த ஆணை மடல் மன்னாவில் தொடராக வெளியிடப்படும். இறைஇரக்க ஆண்டில் பயணம் செய்யும் நாம் அனைவரும் இதை வாசித்துப் பயனடைவோம்.



குற்றங்களை மன்னிப்பது இரக்கமுள்ள அன்பின் தெளிவான அடையாளமாகின்றது. கிறிஸ்தவர்களாகிய நமக்கு அது சாக்குச் சொல்லி தப்பிக்கமுடியாத கட்டளையாகின்றது. சில நேரங்களில் மன்னிப்பது எவ்வளவு கடினமாயுள்ளது! ஆனால் இதயத்தில் சாந்தம் பெறுவதற்கு நம் பலவீனமான கரங்களில் கொடுக்கப்பட்ட கருவிதான் மன்னிப்பு. மகிழ்ச்சியான வாழ்வு வாழ்வதற்கு கோபம், பழி, வன்முறை, வன்மம் ஆகியவற்றை விட்டொழிப்பது அடிப்படைத் தேவையாகும். எனவே "பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தணியட்டும்" (எபே 4:26) எனும் திருத்தூதரின் அறிவுரைக்கு செவிமடுப்போம். எல்லாவற்றிற்கும், மேலாக இரக்கத்தை வாழ்வின் உயர் இலக்காகவும் நமது இறை நம்பிக்கையின் நம்பகத்தன்மையின் அளவுகோலாகவும் அழைத்த நமதாண்டவரின் "இரக்கமுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்" (மத் 5:7) எனும் வார்த்தைகளுக்கு செவிமடுப்போம். இந்தப் புனித ஆண்டில் இந்த மலைப்போதனையின் ஒரு போதனையை கடைப்பிடிக்க முயல்வோம்.

திருநூலில் நாம் காண்பதுபோல இரக்கம் என்பது கடவுள் நம்பால் செயல்படுத்தும் செயல்பாட்டைக் குறிக்கும் சொல்லாகும். அவர் தம் அன்பை அறிக்கையிடுவதோடு நிறுத்திக்கொள்வதில்லை. அதை காணக்கூடியதாகவும் உணரக்கூடியதாகவும் ஆக்குகின்றார். உண்மையில் அன்பு வெறும் கருத்துப் பொருளாக எப்பொழுதும் இருக்க முடியாது. அதன் இயல்புத் தன்மையில் அது கண்டுணரக்கூடிய ஒன்றாகும். எண்ணங்கள், மனநிலைகள், செயல்பாடுகள் ஆகியவை அன்றாட வாழ்வில் காட்டப்படுகின்றன. நம் ஒவ்வொருவருக்கும் அவரின் அன்பு கரிசனையே கடவுளின் இரக்கம். அவர் நமது நல்வாழ்வை விரும்புகின்றார், நம்மை மகிழ்ச்சியானவர்களாகவும், அக்களிப்பால் நிரம்பியவர்களாகவும், அமைதி உள்ளவர்களாகவும் காண ஆசிக்கின்றார். இரக்கம் நிறைந்த, அன்புடைய கிறிஸ்தவர்கள் நடக்கவேண்டிய பாதையும் இதுதான். இறைத்தந்தை அன்புசெய்வது போலவே, அவரது பிள்ளைகளும் செய்கிறார்கள். அவர் இரக்கம் நிறைந்தவராய் இருப்பதுபோல நாம் ஒருவர் மற்றவரிடம் இரக்கம் கொண்டிருக்க அழைக்கப்படுகிறோம்.

10. இரக்கம் திருச்சபை வாழ்வின் ஆதாரமாகும். திருச்சபையின் மேய்ப்புப்பணிச் செயற்பாடுகள் அனைத்தும் அது தன் இறைநம்பிக்கையாளர்களுக்கு வெளிப்படுத்தும் மென்மைத்தன்மையால் ஆட்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். உலகிற்குத் தரும் அதன் போதனையிலும் சான்று வாழ்விலும் இரக்கம் குறைவுபடக்கூடாது. திருச்சபை எவ்வாறு இரக்கமும், பரிவிரக்கமுள்ள அன்பும் காட்டுகிறது என்பதில்தான் அதன் நம்பகத்தன்மை அடங்கியுள்ளது. திருச்சபை, "இரக்கம் காட்ட முடிவில்லா ஆவல்" கொண்டுள்ளது. ஒருபுறம், ஒருவேளை நாம் பல காலமாக இரக்கத்தின் வழியைக் காண்பிக்கவும், வாழவும் மறந்துவிட்டோம். நீதியின்மீது மட்டுமே, நமது கவனத்தை பதியவைத்து, அது அவசியமானதும், தவிர்க்க முடியாததுமான நிலையாக இருந்தாலும், அது முதல்படி மட்டுமே என்பதை மறக்கடிக்கும் சோதனையுள்ளது. ஆனால் திருச்சபை அதையும் தாண்டிச் சென்று உயர்ந்த மிக முக்கியமான இலக்குகளை அடைய முயற்சிக்க வேண்டும். மறுபுறம், சொல்வதற்குக் கடினமாக இருந்தாலும், பெரும்பான்மையான கலாச்சாரத்தில் இரக்கத்தை செயல்படுத்துவது குறைந்துகொண்டே போகிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். சில நேரங்களில் இந்த வார்த்தை பழக்கத்தில் இல்லாத ஒன்றாகிப்போனது. ஆனால் இரக்கத்திற்கான சான்றுகள் இல்லாதபோது வாழ்க்கை வறண்ட பாலைநிலத்தில் ஒதுக்கப்பட்டதுபோல பயனற்றதும், மலடாகவும் ஆகிவிடுகின்றது. மீண்டும் ஒருமுறை இரக்கத்திற்கான மகிழ்வான அழைப்பை திருச்சபை எடுக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. நமது ஆதாரங்களுக்கு திரும்பி நமது சகோதர சகோதரிகளின் பலவீனங்களையும் போராட்டங்களையும் தாங்கிக்கொள்ளும் நேரமிது. நம்மைப் புதுவாழ்வுக்கு எழுப்பி எதிர்காலத்தை நம்பிக்கையுடன் நோக்க நம்முள் திடத்தை விதைக்கின்ற ஆற்றலே இரக்கம்.

11. புனித இரண்டாம் ஜான் பவுல் தனது இரண்டாம் சுற்று மடலாகிய "மிகுந்த இரக்கம்" என்பதில் கூறுவதை நாம் மறந்து விடக்கூடாது. இம்மடல் எதிர்பாராத நேரத்தில் வந்தது. அதன் விவாதப்பொருள் பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. அதன் இரு பகுதிகளுக்கு உங்களது கவனத்தை ஈர்க்க ஆசைப்படுகின்றேன். முதலாவதாக, புனித இரண்டாம் ஜான் பவுல் இன்றைய கலாச்சார சூழலில் இரக்கத்தைப்பற்றிய கருத்தை நாம் மறந்துவிட்டோம் என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றார். "பழங்காலத்து மக்களைவிட இக்கால மனநிலையானது இரக்கத்தின் கடவுளை எதிர்ப்பதுபோல தோன்றுகின்றது. உண்மையில் இரக்கம் என்னும் சிந்தனையையே வாழ்க்கையிலிருந்து விலக்கிவிடவும், மனித இதயத்திலிருந்து எடுத்துவிடவும் முயற்சிக்கின்றது. வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் பெரும் வளர்ச்சி கண்டுவிட்டபடியால், மனிதர் உலகின் தலைவராகி அதைத் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்தி ஆளுகின்ற (காண் தொநூ 1:28) மனிதருக்கு "இரக்கம்" எனும் வார்த்தையும் கருத்தும் ஒருவித அமைதியின்மையை ஏற்படுத்துகின்றது. ஒரே ஒரு கோணத்திலிருந்தும் மேலோட்டமாகவும் புரிந்துகொள்ளப்பட்ட இந்த உலகின்மீதான ஆளுகை பற்றிய கருத்தில் இரக்கத்திற்கு இடமில்லாததுபோல் தோன்றுகின்றது. இதனால்தான், இன்றைய திருச்சபையின் சூழலிலும் உலகிலும் இறைநம்பிக்கை பற்றிய உயிர்த்துடிப்புள்ள பல தனி நபர்களும், குழுக்களும் தன்னிச்சையாக இறையிரக்கத்தின் பக்கம் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்".

மேலும் புனித இரண்டாம் ஜான் பவுல் தற்கால உலகில் இரக்கத்தை அறிவிக்கவேண்டிய அவசியத்தையும், அதற்கு சான்று பகரவேண்டிய தேவையையும் முன்னிலைப்படுத்துகின்றார். "இது மனிதர்மீது கொண்ட அன்பால் வலியுறுத்தப்படுகிறது. ஏனெனில் நம் காலத்தவர் பலரின் உள்ளுணர்வின்படி, மானுடம் சார்ந்த எல்லாம் பெரும் அபாயத்தில் உள்ளது. கிறிஸ்துவின் மறைபொருள் என்னை இரக்கத்தை கடவுளின் இரக்கம் நிறை அன்பு என்று அறிவிக்க வலியுறுத்துகின்றது. இது அதே கிறிஸ்துவின் மறைபொருளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதுவே என்னை அந்த இரக்கத்தை அணுகி திருச்சபையின் மற்றும் உலகின் இக்கட்டான காலகட்டத்தில் அந்த இரக்கத்திற்காக மன்றாடச் செய்கின்றது"

இந்தப் போதனை முன் எப்போதும்விட இப்போது பொருளுள்ளது, மற்றும் இந்த புனித ஆண்டில் மீண்டும் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளத்தக்கது. அவரின் வார்த்தைகளுக்கு மீண்டும் செவிமடுப்போம். "படைத்தவரும் மீட்பவருமாகிய கடவுளின் மிகப்பெரிய குணநலன்களில் ஒன்றான இரக்கத்தை திருச்சபை அறிவிக்கையிட்டு அறிவிகின்றபோது, தன்னிடம் கண்காணிப்பாளர் மற்றும் பகிர்ந்தளிப்பவர் எனும் முறையில் அளிக்கப்பட்ட மீட்பரின் இரக்கத்தின் ஊற்றருகில் மக்களைத் திருச்சபை கொணரும்போது திருச்சபை நம்பகத்தக்க வாழ்வை வாழ்கின்றது."

12. நற்செய்தியின் நாடித்துடிப்பாகவும் ஒவ்வொரு மனிதரின் இதயத்தையும் மனதையும் தனக்கேயுரிய விதத்தில் ஊடுருவக்கூடியதுமான இறையிரக்கத்தை அறிவிக்க திருச்சபை ஆணையிடப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் மணப்பெண் எவ்வித பாகுபாடுமின்றி எல்லோரிடமும் சென்ற இறைமகனைப்போல தன் செயல்பாடுகளை அமைத்துக்கொள்ள வேண்டும். புதிய நற்செய்தியறிவிப்புப் பணியை திருச்சபை தன்மேல் ஏற்றுள்ள இக்காலத்தில் இறையிரக்கம் எனும் கருத்து, மீண்டும் மீண்டும், புதிய உற்சாகத்துடனும், புதுப்பிக்கப்பட்ட மேய்ப்புப்பணி செயல்பாட்டுடனும் முன்மொழியப்பட வேண்டும். திருச்சபை இந்த இரக்கத்தை வாழ்வதும் அதற்கு சான்று பகர்வதும், திருச்சபைக்கும் அதன் செய்தியின் நம்பகத்தன்மைக்கும் மிக மிக அவசியமாகும். மக்கள் அனைவரின் இதயத்தைத் தொடும்படியாகவும், இறைத் தந்தையிடம் இட்டுச்செல்லும் வழியைக் கண்டடைய அவர்கள் தூண்டப்படும்படியாகவும் திருச்சபையின் மொழியும் அவளின் செய்கையும் இரக்கத்தை பகிர்ந்தளிக்க வேண்டும்.


கிறிஸ்துவின் அன்புதான் திருச்சபையின் முதல் உண்மை. திருச்சபை இந்த அன்பின் பணியாளராகத் தன்னை ஆக்கிக்கொண்டு, இந்த அன்பை எல்லா மக்களுக்கும் இடைநிலையாளராய் நின்று வழங்குகின்றது. இந்த அன்பு பிறரை மன்னிக்கின்றது. தன்னையே பிறருக்கு வழங்குவதில் தன்னை வெளிப்படுத்துகின்றது. எனவே எங்கெல்லாம் திருச்சபை இருக்கின்றதோ அங்கே இறைத்தந்தையின் இரக்கம் தெள்ளத்தெளிவாய்த் தெரிகின்றது. பங்குகள், குழுமங்கள், சபைகள், இயக்கங்கள், சுருங்கக்கூறின் எங்கெல்லாம் கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் ஒவ்வொருவரும் இரக்கம் எனும் பாலைவனச் சோலையைக் கண்டடைய வேண்டும்.

13. "இறைத்தந்தைபோல் இரக்கம் உள்ளவர்களாய்" என்னும் நமதாண்டவரின் வார்த்தைகளின் ஒளியில் இந்த யூபிலி ஆண்டை நாம் வாழ விழைகின்றோம். "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவராய் இருங்கள்" (லூக்6:36) என்று கூறிய இயேசுவின் போதனையை நற்செய்தியாளர் நமக்கு நினைவூட்டுகின்றார். மகிழ்வும், அமைதியும் நிறைந்திருக்கும் வேளையில் இது சவால்கள் நிறைந்த வாழ்வியல் முறையுமாகும். இயேசுவின் குரலுக்கு செவிசாய்க்க விருப்பமுள்ளவர்களை நோக்கி இயேசுவின் இக்கட்டளை அளிக்கப்படுகின்றது (காண் லூக்6:27). இறையிரக்கத்திற்கு நாம் தகுதியுள்ளவர்களாகும்படியாக நம்மை இறைவார்த்தைக்கு செவிமடுக்க நாம் முதலில் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது நம்மிடம் வரும் இறைவார்த்தையைத் தியானிக்க நாம் நிசப்தத்தின் மகத்துவத்தை மீண்டும் கண்டுணர வேண்டும். இவ்வாறு கடவுளின் இரக்கத்தை நம்மால் தியானிக்கவும், அதை நமது வாழ்வியல் முறையாக ஏற்படுத்திக்கொள்ளவும் முடியும். *(தொடர்ச்சி அடுத்த இதழில்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# நாம் பெற்ற திருமுழுக்கு அருட்சாதனத்திற்கு ஒவ்வொரு நாளும் சாட்சியாக வாழ திருத்தந்தை அழைப்பு



ஆண்டவரின் திருமுழுக்குப் பெருவிழாவான கடந்த ஜனவரி 10ஆம் திகதி அன்று நண்பகலில் வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒவ்வொரு விசுவாசியும் தான் பெற்ற திருமுழுக்குக்கு ஒவ்வொரு நாளும் சாட்சியாக வாழ வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். திருமுழுக்கு அருளடையாளம் வாழ்வில் ஒரேயொரு முறைதான் பெறப்படுகிறது. இது பகிர்ந்துகொள்ளப்பட வேண்டிய புதிய வாழ்வாக இருப்பதால் ஒவ்வொரு நாளும் இதற்குச் சாட்சியாக வாழ வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

மனிதமற்ற சூழல்களில் வாழ்வோர் மற்றும் இருள் நிறைந்த பாதைகளில் நடப்பவர்களுக்கு இப்புதிய வாழ்வைப் பகிர்ந்துகொள்ளவும், இப்புதிய ஒளியை வழங்கவும் விசுவாசிகள் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் திருத்தந்தை கூறினார்.

கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி அன்று காலைத் திருப்பலியில் 26 குழந்தைகளுக்கு திருமுழுக்கு அருளடையாளத்தை நிறைவேற்றிய பின்னர் நண்பகலில் மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வருள் அடையாளத்தை அண்மையில் பெற்றுள்ள குழந்தைகளுக்கும் அதனைப் பெற்றுள்ள மற்றும் அதற்காகத் தயாரித்துவரும் இளவயதினர், வயதுவந்தோர்க்கும் சிறப்பு ஆசிரை வழங்குவதாகக் கூறினார்.

திருமுழுக்கின் பொருள் மற்றும் அதைப் பெற்றுள்ளவர்களின் கடமைகள் குறித்து மூவேளை செப உரையில் விளக்கிய திருத்தந்தை, ஒவ்வொருவரும் தாங்கள் திருமுழுக்குப் பெற்ற திகதியைப் பார்க்குமாறும் இத்திகதியே கிறிஸ்தவர்களாக வாழ்வதற்கும் திருஅவை மற்றும் புதிய மனித சமுதாயத்தின் உறுப்பினர்களாவதற்கும் நம்மை அர்ப்பணித்த நாள், இயேசுவோடு நம்மை இணைத்துக்கொண்ட நாள் என்று திருத்தந்தை எடுத்துரைத்தார்.

திருமுழுக்கு நாளில் முதல் முறையாக நாம் தூய ஆவியாரைப் பெறுகிறோம், அவர் நம் இதயங்களை முழு உண்மைக்குத் திறக்கிறார். வாழ்வின் இன்னலான பாதையிலும் பிறரோடு அன்பு மற்றும் ஒருமைப்பாட்டின் மகிழ்வுப் பாதையிலும் நம்மை வழிநடத்துகிறார்.

தூய ஆவியார் கடவுளின் மன்னிப்பின் கனிவை வழங்குகிறார். தூய ஆவியாரை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு அவர் வாழ்வளிக்கும் பிரசன்னமாக இருக்கிறார் என்பதை மறக்க வேண்டாமென திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக்கொண்டார்.

## உலகின் செல்வந்த சமுதாயம் ஏழைகளை மறந்திட முடியாது

உலகின் செல்வந்த அரசியல் மற்றும் பொருளாதார வர்க்கத்தினர் ஏழை மக்களின் அழுகுரல்களை கண்டுகொள்ளாமல் இருக்கக்கூடாது எனவும் சமத்துவமின்மையை ஏற்படுத்துவதில் தமது பங்களிப்பு தொடர்பாக அவர்கள் அக்கறை கொள்ள வேண்டுமெனவும் பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ரோபோக்கள் போன்ற புதிய தொழில்நுட்பங்கள் ஆன்மாக்களற்ற இயந்திரங்களாக மனிதர்களுக்கு பதிலீடாக்குவதனை அனுமதிக்க முடியாதென்றும் லாவோஷில் இடம்பெற்ற உலகப் பொருளாதார மாநாட்டுக்கான செய்தியில் பாப்பரசர் குறிப்பிட்டுள்ளார்.

உங்கள் அனைவருக்குமான செய்தியொன்றைக் கூறுகின்றேன். ஏழைகளை மறந்துவிடாதீர்கள். ஏழைகள் தொடர்பாக செல்வந்தர்களும், அரசியல் வர்க்கத்தினரும் கண்டு கொள்ளாதவர்களாக இருந்துவிட முடியாதென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### ஐரோப்பிய நாடுகள் மனிதாபிமானத்துடன்

## குடியேற்றவாசிகளுக்கு வரவேற்பளிக்க வேண்டும்

ஐரோப்பிய அரசாங்கங்கள் குடியேற்றவாசிகளுக்கு வரவேற்பளிக்க வேண்டும் என பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த ஜனவரி 11ஆம் திகதி வலியுறுத்தியுள்ளார்.

குடியேற்றவாசிகளின் வரவால் பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் தீவிரவாதத் தாக்குதல்கள் தொடர்பான அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளபோதும் ஐரோப்பாவானது நிர்க்கதிக்குள்ளான நிலையில் வரும் குடியேற்றவாசிகள் தொடர்பில் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

ஜேர்மனியில் கொலோன் நகரில் பெண்கள்மீது குடியேற்றவாசிகளால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் தாக்குதல்களால் அங்கு பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையிலேயே பாப்பரசரின் இந்த உரை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது குடியேற்றவாசிகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள எதிர்ப்பலைகள் மனிதாபினமான அடிப்படைகளை குழிதோண்டிப் புதைப்பதாக உள்ளதாக பாப்பரசர் குற்றஞ்சாட்டினார்.

வரலாற்றின் சில கணங்களில் சில தருணங்கள் தாங்கிக்கொள்வதற்கு சிரமமானவையாக இருந்தபோதும் ஒவ்வொரு தனிநபரதும் தன்மானத்துக்கும் மதிப்பளிக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

## ஈராக்கிலுள்ள கிறிஸ்தவ மடாலயம் ஐ.எஸ். தீவிரவாதிகளால் தாக்கி அழிப்பு



ஈராக்கிலுள்ள மிகவும் பழைமையான கிறிஸ்தவ மடாலயத்தை ஐ.எஸ். தீவிரவாதிகள் அழித்து நிர்மூலமாக்கியுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வட நகரான மொசூலுக்கு அண்மையிலுள்ள குன்றில் அமைந்திருந்த 1400 ஆண்டுகள் பழைமையான சென். எலிஜாஹ் மடாலயத்தையே ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்கி அழித்துள்ளனர்.

இந்நிலையில் இந்த மடாலயம் அழிக்கப்பட்டதை வெளிப்படுத்தும் புகைப்படங்களை ஆய்வுக்குட்படுத்திய நிபுணர்கள், மேற்படி மடாலயம் தற்போது அழிக்கப்படவில்லை எனவும் அது 2014ஆம் ஆண்டின் இறுதியளவில் அழிக்கப்பட்டுள்ளதாகக் கருதுவதாகவும் தெரிவிக்கின்றனர்.


இந்த மடாலயம் அழிக்கப்பட்ட விவகாரத்துக்கு மொசூலிலுள்ள முன்னணி கத்தோலிக்க குரு ஒருவர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# புனிதர்களின் பாதையில்

## புனித லூர்து அன்னை

*ஆயர், மறைவல்லுநர்*

*(கி.பி. 1221 - 1274)*



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

கி.பி. 1858 ஆம் ஆண்டு பெப்ரவரி 11இல் தென் பிரான்ஸ் நாட்டில் பிரனீஸ் மலையடிவாரத்தில் லூர்து என்ற சிற்றூருக்கு அருகில் குன்றுகளுக்கிடையே முதன்முறையாகப் பெர்நதத் சுபீரு என்ற நாட்டுப்புறத்து 14 வயதுச் சிறுமிக்கு, விறகு சேகரிக்கச் சென்ற இடத்தில் கன்னிமரி காட்சியளிக்கின்றார். "இளமைத் தோற்றத்துடன் மரியா மிக அழகானவராகக் காணப்பட்டார்" என்று பெர்நதத் குறிப்பிடுகின்றார். கையில் ஒரு செபமாலை இருந்ததையும் பார்க்கிறார். பெர்நதத்திற்கு வாழ்த்துக்கூறி, தம்முடன் செபிக்க அழைக்கின்றார் கன்னிமரி.

பெப்ரவரி 25ல் மீண்டும் காட்சியளித்து மரியன்னை கூறுவார், "அங்கே தெரிகின்ற அருவியில் போய் உன்னைக் கழுவிக் கொண்டு, நீர் பருகு". அருவியை நோக்கிப் போகும்போது, "அங்கு அல்ல" என்று சொல்லி மரியா குகையின் தரைப் பகுதியைச் சுட்டிக்காட்டினார். "நான் அங்கே போனேன். கை வைத்துப் பார்த்தால், தூசி படிந்த தண்ணீர் கொஞ்சம் காணப்பட்டது. குடிப்பதற்கான அளவு இல்லை. கொஞ்சம் சுரண்டிப்பார்த்தால் தண்ணீர் கொஞ்சம் கூடுதலாக வந்தது. ஆனால் மண் கலந்து இருந்தது. மூன்று முறை அதைக் கையினால் அள்ளி அகற்றிவிட்டு, அடுத்தமுறை பருகினேன். அருகில் இருந்தவர்கள் ஏளனம் செய்தனர். காரணம், பருகிய வேளையில் முகமெல்லாம் மண் படிந்து இருந்தது. ஆனால் மாலைப் பொழுதுக்குள் தண்ணீர் பீறிட்டுவரத் தொடங்கியது" என்று குறிப்பிடுகிறார். ஒரு வாரத்திற்குள் அந்த நீரூற்றினின்று இன்றுவரை ஓடிவரும் தண்ணீர் நாள்தோறும் 32,000 கலன் ஆகும்.

1858 மார்ச் 25ஆம் நாள் மங்கள வார்த்தைத் திருநாள். மரியன்னை மீண்டும் அவ்விடத்தில் காட்சி தருகின்றார். இந்தமுறை அந்தத் தாயின் பெயரைக் கேட்கிறார் சிறுமி பெர்நதத். "நாமே அமல உற்பவி" என்ற விடை கிடைக்கிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர்தான் திருத்தந்தை 9ஆம் பத்திநாதர் "தேவ அன்னை அமல உற்பவி. பாவ மாசு எதுவுமின்றி உற்பவித்தவர்" என்பது விசுவாசப் பிரமாணம் என்று அறுதியிட்டுக் கூறியிருந்தார்.

கடைசியாகப் பதினெட்டாவது முறையாக கார்மேல் மலைக்கன்னியின் திருநாளன்று மரியன்னை பெர்நதத்துக்கு காட்சியளித்தார். காட்சிகளிலெல்லாம் பாவிகளுக்காக மன்றாடப் பணிக்கின்றார். செபத்துடன் தவமுயற்சிகள் இன்றியமையாதவை என்று குறிப்பிடுகின்றார். அந்த இடத்தில் பவனி வரவேண்டும், ஆலயம் எழுப்பப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். கூட்டம் கூடிவிட்ட நிலையிலும் பரவசமாகிவிட்ட பெர்நதெத் மட்டுமே மரியின் உருவத்தைப் பார்க்க முடிந்தது.

உலகின் எத்திசையிலிருந்தும் இன்று ஆண்டுதோறும் எண்ணற்ற திருப்பயணிகள் அங்கு செல்கின்றனர். ஆயிரக்கணக்கான புதுமைகள் நடைபெறுகின்றன. பலதரப்பட்ட கொடிய நோய்கள் நீங்குகின்றன. மருத்துவர்களால் முற்றிலும் கைவிடப்பட்டவர்களுக்கு அவர்கள் கண்முண்னே குணம் கிடைத்துள்ளது. பாவிகள் பலர் மனந்திரும்புகின்றனர் என்பதுதான் சிறப்பு. "உனக்கு நான் காட்சி கொடுத்ததினால், நீ இவ்வுலகில் துன்பம் இல்லாமல் வாழ்வாய் என்று நான் கூறமாட்டேன். மாறாக உனக்குக் கலப்பில்லா மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு மறு உலகில்தான்" என்று லூர்து அன்னை பெர்நதத்துக்குக் கூறியிருந்தபடி அவர் பல வேதனைகளை அனுபவித்த பிறகு இறைவனடி சென்றார்.

கடந்த 12.02.1999 ஆம் ஆண்டு 'இந்து' ஆங்கில நாளிதழில் கீழ்க்கண்ட புதுமை சொல்லப்படுகிறது. "கொடிய நோயின் பின்விளைவாக முடக்குவாதத்தில் விடப்பட்ட ஒரு நோயாளி லூர்துநகரின் புனிதத் தலத்திற்குக் கொண்டுவரப்பட்டார். 51 வயதான இவர் முற்றிலும் முடமாகி நடக்க இயலாதிருந்தவர். இங்கு புனித அருவிக்கு அருகில் கொண்டுவரப்பட்ட சில மணி நேரத்திற்குள், தாராளமாக நடக்க ஆரம்பித்தார். இது 66வது புதுமையாக மருத்துவர்களால் ஐயந்திரிபற ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், திருச்சபை இது ஐயத்திற்கு இடமின்றி தெய்வச்செயல்தான், புதுமைதான் என்று புடமிட்டுச் சோதித்தறிந்தபின் ஏற்றுக்கொண்டது 12 ஆண்டுகளுக்குப் பிறகே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் ......!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 49

## பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அநாகரிகமானவை!

### *விழிப்பாக இருக்கவேண்டும்*

ஒரு தம்பதியினர் புனித பயணம் மேற்கொண்டு ஜெருசலேம் சென்றனர். ஜெருசலேமில் துரதிஸ்ரவசமாக மனைவி மாரடைப்பில் இறந்துவிடுகிறாள். அங்கிருந்து சொந்த ஊருக்கு மனைவியின் உடலைக் கொண்டுசெல்வதற்கு தம் நாட்டுத் தூதரகத்தின் உதவியை நாடுகிறார் கணவன். தூதரக அதிகாரி, "சேர், உங்க மனைவியின் உடலை சொந்த ஊருக்குக் கொண்டுபோறதுக்கு ஐம்பது ஆயிரம் ரூபாய் செலவு ஆகும். இங்க ஜெருசலேமில் அடக்கம் செய்யிறது எண்டா ஐநூறு ரூபாவோடு அலுவல முடிக்கலாம்!" என்கிறான்.

உடனே அவ்வதிகாரியை இடைமறித்த இறந்துபோன பெண்ணின் கணவன், "இங்க ஒரு மண்ணும் வேணா. ஜெருசலேமில் ஏற்கனவே இயேசுக்கிறிஸ்து என்ற ஒருத்தரப் புதச்சி அவர் மூண்டு நாளுக்குப் பிறகு உயிர்த்தெழுந்திற்றார். இந்த விசயத்தில் நான் 'ரிஸ்க்' எடுக்க விரும்பல்ல. ஐஞ்சு லட்சம் ஆனாலும் பரவாயில்ல, என் மனைவியை ஊருக்கே கொண்டு போயிர்ரன் சேர்" என மிகவும் நிதானமாகக் கூறி நின்றார்.

'நம்ம ஆளுட மூச்சு எப்ப நிக்கும்? நம்மட ஆள் எப்ப முடியும்?' எனச் சிலர் காத்துக்கிடக்கிறார்கள். எனவேதான், துணைவர் - துணைவியர் மட்டில் கவனமாகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டும் என்று ஒருதடவை ஞாபகப்படுத்த வேண்டும்போல் இருக்கிறது.

### *பெண்களுக்கு எதிரான வன்முறைகள்*

இன்றைய சூழலில் பெண்களின் நிலைமையை அவதானிக்கிறபோது, "பெண் ஊதுவத்தி போன்றவள்! அவளின் நேற்று – எரிந்துவிட்டது. அவளின் இன்று – எரிந்துகொண்டிருக்கிறது. நாளை – கறுப்பாக இருக்கிறது!" என்ற சில கவிதை வரிகள்தான் மனதுக்குள் வந்து நிழல் ஆடுகின்றது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாக இருப்பதை ஊடகங்கள் தெரியப்படுத்திய வண்ணமாக இருக்கின்றன. நாளேடுகளைப் படிக்கிறபோது போதைப் பொருளுக்கு அடுத்தபடியாக பெண்களுக்கு எதிரான வன்முறைகளே அதிகரித்துவருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அதேவேளை பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு போதைப்பொருள்களே முக்கிய காரணியாக இருந்து வருகிறது என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

### *பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அநாகரிகமானவை*

உண்மையில், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் - வன்கொடுமைகளும் அநாகரிகமானவை–அருவருக்கத்தக்கவை என்றே சொல்லவேண்டும். இவ்வாதத்திற்கு இரண்டு காரணங்களை அடிப்படையில் முன்வைக்கலாம். ஒன்று, நாகரிகம் அடைந்த சமூகங்களில் பெண்கள் கௌரவமாகவே எப்போதும் நடத்தப்படுகிறார்கள் என்பது நாகரிகம் அடைந்த சமூகங்களில் காணப்படும் முக்கியமான ஓர் அம்சம். காரணம் இரண்டு, பெண்கள் ஆண்களுக்கு நிகராக, சமனாக, சமத்துவம் உள்ளவர்களாக இருந்தாலும் இயற்கையிலேயே உடலியல் நிலையில் பெண்களை ஆண்களோடு ஒப்பிடுகையில் பொதுவாக வலுக்குறைந்தவர்களாக இருப்பது கண்கூடு. இக்கருத்து எவ்வகையிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவத்தை இகழ்வதாகவோ அன்றேல் குறைப்பதாகவோ அமையாது. ஏனெனில் அது இயற்கையின் இயல்பான ஒழுங்கமைப்பாகும். அந்தவகையில் இயற்கையாகவே வலுக்குறைந்த ஒருவரிடத்தில் பலசாலி ஒருவன் தன் வலிமையைக் காட்டுவது முறையற்றதான நிலையில் அவன் வன்முறையை – வன்கொடுமையைப் பிரயோகிப்பது அநாகரிகமானதும், அருவருக்கத்தக்க செயலுமாகும்.

### *மனைவிமாருக்கு எதிரான வன்கொடுமைகள்*

'கணவனது தாக்குதலிலிருந்து தப்ப மருத்துவமனைக்கு ஓடிய மனைவி' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியில் அளவெட்டி என்ற இடத்தில் தென்னம் மட்டையால் கணவன் கண்டபடி தாக்கியதால் வலி தாங்க முடியாத மனைவி அங்கிருந்து தப்பியோடி மருத்துவமனையில் தஞ்சமடைந்த செய்தியை 2015 கார்த்திகை 18இல் உதயன் நாளிதழ் வெளியிட்டிருந்தது. இன்னும், 'மனைவியைத் தாக்கிவிட்டு தலைமறைவானவர் கைது' என்ற தலைப்பில் 10.12.2015அன்று மேலும் ஒரு செய்தி பிரசுரமாகி இருந்தது.

### *இளம்பெண்களுக்கு எதிரான வன்முறைகள்*

'ஆசை வார்த்தைகள் கூறிப் பெண்களை ஏமாற்றிய ஆசாமி வகையாகச் சிக்கினார்' என 2015.11.18 அன்று தெரிவிக்கப்பட்ட செய்தியில் மூதூரைச் சேர்ந்த அந்நபரை யாழ்.குளப்பிட்டிச் சந்தியில் மின்கம்பத்தில் கட்டிவைத்து கவனித்தபின் பொலிசாரிடம் கையளிக்கப்பட்டார் என அச்செய்தி தொடர்கிறது.

நவாலியில் நடந்ததாகக் கூறப்படும் 'வீதியில் யுவதியின் கையைப் பிடித்த இளைஞர்களுக்கு ஒத்திவைத்த சிறை' எனத் தலைப்பிடப்பட்ட செய்தியில் அபராதப் பணமும், ஒரு வருட கடுழியச் சிறைத்தண்டனையும் மூன்று இளைஞர்களுக்கு வழங்கப்பட்டதாக 2015 கார்த்திகை 23ஆம் திகதி உதயனில்




செய்தி வெளியாகியிருந்தது. இதே நாளில் சாவகச்சேரியில் நடந்த இன்னுமொரு சம்பவத்தினை, 'தொடுபேசியில் பெண்களைப் படம்பிடித்த தென்னிலங்கை வாசி பொலிசாரால் கைது' எனத் தலைப்பிட்டு பிரசுரித்திருந்தார்கள். அச்செய்தியில் பூமரக் கன்றுகளை வீதியோரத்தில் விற்பனை செய்யும் ஒருவர் தொடுபேசியில் பெண்களைப் படம் எடுத்ததையடுத்து பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், 'பெண்ணின் கையைப்பிடிக்க முற்பட்ட சந்தேகநபர் பொலிசாரால் கைது' என்று 26.11.2015அன்று உதயன் நாளிதழில் அவிசாவளையில் நடந்த சம்பவம் ஒன்று கூறப்பட்டிருக்கிறது. அவிசாவளை ஆடைத்தொழிற்சாலை ஒன்றின் குளியலறைக்குள் அத்துமீறி நுழைந்து பெண்ணின் கையைப் பிடித்ததாகவும் அப்பெண் கூக்குரல் இடவே தப்பியோடிய அந்நபரை அவ்வாடைத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் துரத்திப்பிடித்து பொலிசில் ஒப்படைத்ததாகவும் அச்செய்தி சொல்கிறது.

மேற்சொல்லப்பட்ட சம்பவங்கள் அவ்வப்போது நாளிதழ்களில் பார்த்தவற்றில், ஞாபகத்தில் உள்ளவற்றில் ஒருசிலவே. ஆனால் இன்றைய நாள்களில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் மிகமிக அதிக அளவில் இடம்பெறுவதாகவே பொலிஸ் நிலைய புள்ளிவிபரங்களும் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்ட வழக்குகளும் வெளிப்படையாகத் தெரிவிக்கின்றன. இன்னும் பெரும் எண்ணிக்கையிலான வன்முறைகள் வெளியே தெரிவிக்கப்படாமல் புள்ளிவிபரங்களுக்கு உட்படுத்தப்படாமல் இருப்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதே.

### *பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்குக் கண்டனங்கள்*

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து கண்டனங்கள் எழுந்தவண்ணமாக இருக்கிற சந்தர்ப்பத்தில் யாழ். நகரில் பிரமாண்டமான நடை பயணம் ஒன்று 09.12.2015அன்று பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்தக்கோரி இடம்பெற்றதாக ஊடகங்கள் தெரிவித்து நிற்கின்றன.

சாவகச்சேரி வைத்தியசாலையை மையமாகக்கொண்டு, 'மனைவிமார்மீதான தாக்குதல் அதிகரிப்பு' என்ற செய்தி 02.12.2015இல் வெளியிடப்பட்டிருந்தது. இளம் குடும்பப் பெண்களே கணவர்களின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவது சுட்டிக்காட்டப்பட்டு இருந்தது. குறிப்பாக திருமணமான ஆண்களின் போதைப்பழக்கமும் தங்கள் மனைவிமார்மீது அவர்கள் கொள்ளும் சந்தேகமுமே இதற்குக் காரணம் என்பதும் கோடிட்டுக் காட்டப்பட்டு இருக்கிறது.

பெண்களுக்கு எதிரான தாக்குதல்கள் வேண்டுமென்றே நிகழ்த்தப்படுகின்றன என்ற தொனிப்பட வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் 09.12.2015அன்று பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்துள்ளார். மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எந்தவித பயமும் இன்றி வேண்டிய நேரத்தில் வேண்டிய இடத்திற்கு தனியாகப் பெண்கள் சென்றுவரக்கூடிய சூழல் நிலவியதாகவும், ஆனால், இன்று அவ்வாறான நிலை இல்லை என்பதையும் தமது உரையில் சுட்டிக்காட்ட முதலமைச்சர் தவறவில்லை. 'பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எம் இனத்தை அழிப்பதற்கான ஒன்றாக அரங்கேறுகிறதோ? என்ற கேள்வியையும் எழுப்ப வேண்டியிருக்கிறது' என்று முதலமைச்சர் எழுப்பிய கேள்வியும் இன்றைய சூழலில் கூர்ந்து நோக்கப்படவேண்டியது.

### *'அம்மு', ஓர் தெய்வப் பிறவி !*

கடந்த ஆண்டு ஆனித்திங்கள் 10ஆம் நாளில் உதயன் நாளிதழில் மிகமிகச் சுவாகரசியமான சம்பவம் ஒன்று இடம்பெற்றிருக்கிறது. அது கம்பொளையில் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. அச்செய்தியின் தலைப்பு 'மனைவியை துன்புறுத்திய கணவனை குதறியது நாய் - 35 இடங்களில் காயம்' என்பதாகும். சம்பவம் இதுதான்: கணவன் குடித்துவிட்டு மனைவி பிள்ளைகளை துன்புறுத்துவதை அவதானித்து வந்திருக்கிறது அவர்களின் செல்லப்பிராணியான 'அம்மு' என்ற நாய். குடித்துவிட்டு வரும் கணவன் குறிப்பாக மனைவியுடன் தகாத வார்த்தைகளால் பேசி சண்டையில் ஈடுபடுவதை விரும்பாத அச்செல்லப்பிராணி குலைத்து, பாய்ந்து, தடுத்துத் தனது அதிர்ப்தியை பல நாள்களாகவெளிப்படையாகவே வெளிப்படுத்தி வந்துள்ளது.

பல சந்தர்ப்பங்களில் சண்டையின் இடைநடுவே 'அம்மு' புகுந்து கணவனைக் கடிப்பதுபோல எச்சரிக்கை செய்தும் இருக்கிறது.

இந்நிலையில் ஆனி 06ஆம் திகதி வழமைபோல வீட்டுத்தலைவன் மதுபோதையில் வந்து தன்னுடைய கை வரிசையோடு கால் வரிசையையும் காட்டியிருக்கிறார். 'அம்மு' தன் கடுமையான எதிர்ப்பை – அதிர்ப்தியை அன்றும் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி இருக்கிறது. குடிபோதையில் இருந்த குடும்பத்தலைவன் 'அம்மு' வின் சமிக்கைகளைச் சற்றும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. தன் தீவிரமான அகிம்சை வழியிலான எச்சரிக்கைகளையும் மீறி செயற்பட்ட அக்குடும்பத்தலைவனின் மீதுபாய்ந்து அவரைக்குதறி எடுத்திருக்கிறது 'அம்மு'! விளைவு!... கடி காயங்களாகவும், கீறல் காயங்களாகவும் அந்நபருக்கு முப்பத்தைந்து (35) காயங்கள் ஏற்பட்டுள்ளன. மொத்தமாக இருபத்தொரு (21) தையல்களும் அவருடைய உடலில் போடப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்திருப்பது சந்தேகத்திற்கு இடமின்றி உறுதி செய்யப்பட்டுள்ளது.

### *முக்கியமான சில முடிவுகள்!*

இச்சம்பவத்தில் இருந்து இன்றைய அன்றாடப் பிரச்சினைகளுள் ஒன்றான பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான சில தீர்க்கமான தீர்மானங்களுக்கும் முக்கியமான சில முடிவுகளுக்கும் வரலாம்போல் தோன்றுகிறது.

01. 'அம்மு' என்ற இச்செல்லப்பிராணி மனித புத்திக்கூர்மைக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்ட ஒரு தெய்வீகக் குணம்கொண்ட படைப்பாக இருக்கவேண்டும். ஏனென்றால், மனிதகுணம் கொண்ட நாய் என்றால் (நம்மைபோல) அது வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்திருக்கும் அல்லது 'விதி விளையாடுகிறது' என்று சொல்லிவிட்டு தன் வழியில் சென்றிருக்கும் அல்லது தன் வேலையைப் பார்த்துக்கொண்டு இருந்திருக்கும்!

02. இன்றைய சூழலில் அதிக பணம்கொடுத்து நாய் வளர்க்கும் நாகரிகத்திற்காக நாய்களை வளர்க்காமல் பாதுகாப்பு அளிக்கும் வளர்ப்பதற்கு செலவில்லாத சிரமமில்லாத நாய்களை வளர்ப்பது அவசியமானதாகத் தெரிகிறது. குறிப்பாக மனைவிமார் - பெண்கள் 'அம்மு' போன்ற நாயைத் தங்களுடைய தற்பாதுகாப்புக்காக ஏனும் வீட்டிலும் வேண்டுமானால் வெளியிலும் கட்டாயமாக வளர்க்க வேண்டும் என்பதனை அவசர – அவசிய வேண்டுகோளாக முன்வைக்கலாம்போல் தோன்றுகிறது.

03. நிபுணத்துவம் வாய்ந்த பயிற்சிகளை வளர்ப்பு நாய்களுக்கு வழங்க வேண்டும். எவ்வாறான பயிற்சி என்றால், எங்கு கடிக்கவேண்டும் என்ற பயிற்சி! உதாரணமாக, மல்யுத்தக்காரர்கள் இவ்வாறு, இங்கு, இப்படி அடித்தால்தான் எதிர் போட்டியாளனை வீழ்த்தலாம் என்று பயிற்சியின் ஊடாக அறிந்திருப்பார்கள். அவ்வாறே வளர்க்கப்படுகிற நாயும் முறையான பயிற்சி பெற்றிருந்தால் - மிகச் சரியான இடத்தில் துல்லியமாகக் 'கவ்வி' எடுக்கக்கூடியதாகப் பயிற்றுவித்திருந்தால் இத்தனை இடங்களில் கடிக்கவேண்டிய சிரமம் 'அம்மு' போன்ற வாய்பேசாத பிராணிகளுக்கு ஏற்படாது. முப்பத்தைந்து கடிகளுக்கும்பின் நாய்க்கு எவ்வளவு களைப்பு ஏற்பட்டிருக்கும்! இவ்வளவு சக்தி விரையம் தேவையற்ற ஒன்றே!

04. 'அம்மு'போன்ற நாய்களை வளர்ப்பதன் வழியாக தங்கள் மனைவிமாரைக் கொடுமைப்படுத்தும் எண்ணம்கூட மேற்சொன்னவரைப் போன்றவர்களுக்கு மனதில் எழாமல் இது பாதுகாக்கும். அதேசமயம் மேற்கூறப்பட்ட சம்பவத்தைபோல விபரீதங்கள் நடந்துவிட்டால் நாயைத் தூண்டிவிட்டுத்தான் இத்தகைய நிலை ஏற்பட்டது எனக் 'கேஸ்'போட்டால் (வழக்குத் தாக்கல் செய்தால்), நாயே சகித்துக்கொள்ள முடியாத ஒன்றையே இப்பேர்ப்பட்டவன் செய்யத் துணிந்தான் என்று 'கேஸ்'சை வென்றுவிடக்கூடிய வாய்ப்பும் இருக்கும்.

05. மேலும், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் முற்றுப்பெற மேற்சொன்ன வழியையும் அணுகுமுறையையும் பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள்கூட பின்பற்றக்கூடியதாக சட்ட ஒழுங்குகளைச் செய்வதற்கு ஆவனை செய்வதன் மூலம் பலநூறு பெண்களின் வாழ்க்கையைப் பாதுகாக்கலாம் (கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும் anpuomi1970@gmail.com).




## மன்னா
## சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கத்தின் ஆண்டு - சிறப்புக் கட்டுரை

# இரக்கம் நிறைந்த இறைவன்

## ஒரு விவிலியத் தரிசனம்

- அருட்சகோதரன் சி. அஜந்தன் -

இறைதுணை கொண்டு எழுதப்பட்ட வேதாகமம் இறை இரக்கத்தின், இறை மனித உறவின் சாட்சியாக நூற்றாண்டுகள் பல தாண்டி, மானிட வரலாற்றின் வழிகாட்டியாக நிலைத்து நிற்கிறது. "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராக இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்" (லூக் 6:36) என்று இரக்கத்தின் நற்செய்தியாளராகிய தூய லூக்கா இறைவன் யார் என்பதை இரத்தினச் சுருக்கமாகக் கூறுகின்றார்.

எகிப்து எனும் அடிமைத்தனங்களும், புலம்பல்களும் நிறைந்த சாவின் பள்ளத்தாக்கிலிருந்து கதறிய இஸ்ரயேலின் நிலைகண்டு இரக்கம்கொண்ட இறைவனை இஸ்ரயேலர் கண்டு கொள்ளவில்லை. அந்த கண்ணுக்குத் தெரியாத கருணைக் கடவுளின் முழு உருவமாகத் தோன்றியவரே இயேசுக் கிறிஸ்து. "அவரோ கண்ணுக்குப் புலப்படாத கடவுளின் சாயல்" கல்வாரி எனும் மலை முகட்டிலே துடிதுடித்து, அகல விரித்த கைகளோடு சிலுவையில் இறந்து கிடந்த இயேசு, இறை இரக்கத்தின் முழுமையின் வடிவமாக இருக்கிறார். பரிசுத்த வேதாகமம் முழுவதும் இந்த இறை இரக்கத்தின் செயற்பாடுகள் இழையோடிக் கிடக்கின்றன.

இரக்கத்தின் யூபிலி ஆண்டாக எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்திருக்கும் இந்த நேரத்தில், இரக்கத்தின் இறைவனை வேதாகமத்தின் பின்னணியில் அலசிப்பார்ப்பது அர்த்தம் பொதிந்ததாக இருக்கின்றது. நீண்டு தொடரும் மானிட வாழ்வியலின் வேரோட்டமாய் அல்லது இறை உணர்வுமிக்க மானிடக் குழுமத்தின் உயிர்த்துடிப்பாக இந்த இறை இரக்கம் இருப்பது விவிலியத்தில் நிதர்சனமாகத் தெரிகின்றது. இவ் ஆய்வு, இறைவனைப்பற்றிய பார்வையில் ஒரு தெளிவை, உண்மையை எமக்குத் தரும் என்பது நிஜம்.

### பழைய ஏற்பாட்டில் இரக்கத்தின் இறைவன்

பழைய ஏற்பட்டிலே கடவுளுக்கும் உடன்படிக்கையின் மக்களான இஸ்ரயேலருக்கும் இடையேயான நெருங்கிய மிக நீண்ட உறவின் வரலாற்று அனுபவத்திலே, இஸ்ரயேலர் இறைவனை மாபெரும் இரக்கத்தின் தந்தையாகக் கண்டனர். தவறு செய்கின்றபோது கண்டித்து திருத்தும் நல்தந்தையாகவும் கண்டார்கள். தேர்ந்துகொள்ளப்பட்ட இஸ்ரயேல் மக்கள் மீண்டும் மீண்டும் உடன்படிக்கை விதிகளை மீறி, இறையுறவை முறித்துக் கொண்டு கடவுளின் மனத்தைக் காயப்படுத்தினர். ஆனால் தாம் செய்த தவறை உணர்ந்தபோது மனம் நொந்து, வருந்தி, இறை இரக்கத்தை பெற்றுக்கொண்டார்கள். இறைவாக்கினர்கள் இத்தகைய உணர்வை அவர்கள் மத்தியில் விதைப்பதில் முக்கிய பங்குவகித்தனர்.

விடுதலைப்பயணம் 34:6-7இல் "இரக்கமும் பரிவுமுள்ள இறைவன், சினம்கொள்ளத் தயங்குபவர், பேரன்பு மிக்கவர், நம்பிக்கைக்குரியவர்" என்று கூறப்படுகின்றது. இவ்வாறு இஸ்ராயேல் மக்கள் இறைவனைப்பற்றிய சரியான புரிதல் கொண்டிருந்தமையால்தான், "என் தலைவரே, நீர் எங்களோடு வந்தருளும். எங்கள் கொடுமைகளையும் பாவத்தையும் மன்னித்து எங்களை உம் உரிமைச் சொத்தாக்கிக்கொள்ளும்" (வி.ப 34:9) என்று உரிமையோடு மன்றாட முடிந்தது.

### அருளும் இரக்கமும் நிறைந்த கடவுள்

"அருளும் இரக்கமும் உடையவர் ஆண்டவர்" (தி.பா11:4). திருப்பாடல் ஆசிரியர் கடவுளின் இரக்கத்தை கருணையை அன்பை அனுபவித்துப் பாடியதை இவ்வசனத்தில் தெளிவாகக் காணமுடிகின்றது. "என் தலைவரே! நீரோ இரக்கமிகு இறைவன், அருள் மிகுந்தவர், விரைவில் சினமுறாதவர், பேரன்பும் உண்மையும் பெரிதும் கொண்டவர்" (தி.பா86:15) மனித சிற்றறிவுக்குச் சிக்காத கடவுளின் இரக்கத்தை மட்டுப்படுத்தப்பட்ட மனித எழுத்துக்களுக்குள் விளங்கிட முயல்கின்றனர். "அவர் தமக்கு அஞ்சுவோருக்கு காட்டும் பேரன்பு மண்ணின்று விண்ணளவு போன்று உயர்ந்தது. மேற்கினின்று கிழக்கு எத்துணை தொலைவில் உள்ளதோ, அத்துணை தொலைவிற்கு நம் குற்றங்களை அவர் அகற்றுகின்றார்" (தி.பா 103:11-12).

ஆயர்களுக்கான வாழ்வியலை இரத்தமும் சதையுமாக உணர்ந்துகொண்ட இஸ்ராயேலர், ஓநாய்களோடு போராடி ஆடுகளுக்காக இரத்தம் சிந்திய நல்லாயர்களாக தாம் இருந்த நிலையை அல்லது ஊரில் யாரோ இருக்கக் கண்டிருப்பார்கள். செங்குத்துப்பாறையுள்ள மலைச்சரிவில், கொடியிலே சிக்குண்டு தலைகீழாக தொங்கியபடி உயிருக்காய் போராடிய ஒற்றை ஆட்டுக்காக தன் உயிரைப் பணயம் வைத்த இடையனின் கிராமத்துக் கதைகளைக் கேட்ட நினைவுகளில் தாம் கண்ணால் காணாத கடவுளையும் ஒரு அன்பான, இரக்கமுள்ள ஆயனாகக் கண்ட அழகை, திருப்பாடல் ஆசிரியர், "ஆண்டவரே என் ஆயர், எனக்கேதும் குறையில்லை... உண்மையாகவே என் வாழ்நாளெல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் என்னைப் புடைசூழ்ந்துவரும், நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்" (தி.பா 23:1-6) என்று பாடுகின்றார்.

"தமக்கு அஞ்சி நடப்போர்க்கு ஆண்டவர் இரக்கம் காட்டுகிறார்" என இஸ்ரயேலர் கண்ட அனுபவத்தில் இவ்வாறு எழுதுகின்றனர். "தமக்கு அஞ்சி நடப்போரையும் தம் பேரன்புக்காகக் காத்திருப்போரையும் ஆண்டவர் கண்ணோக்குகின்றார். அவர்கள் உயிரைச் சாவினின்று காக்கின்றார். அவர்களைப் பஞ்சத்திலும் வாழ்விக்கின்றார் (தி.பா 33:18-19).

### அன்புள்ள தாயாக ஆண்டவனைக் கண்டார்கள்

உலகத்தில் எல்லாக் குற்றங்களும் மன்னிக்கப்படுகிற



நீதிமன்றம் தாய் உள்ளமே என்பது எமது வாழ்வியல் அனுபவம். இஸ்ராயேலரும் தங்கள் கடவுளை நேசமுள்ள, பாசமுள்ள தாயாக உணர்ந்தார்கள். பழைய ஏற்பாட்டு கடவுளும் தன்னை தன் பிள்ளைமீது இரக்கமும், அன்புமுள்ள தாயாக வெளிப்படுத்தியிருக்கிறார். இதையே "பால் குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கியவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டாதிருப்பாளோ, இவர்கள் மறந்திடினும் நான் மறக்கவே மாட்டேன்" (எசாயா 49:15). கிணற்றடிக்குத் தண்ணீர் அள்ளப்போகும் போதும்கூட தூங்கும் குழந்தையின்மீதே தாயின் நினைவு முழுக்கச் சுழலும். எங்கள் வீட்டு அம்மாவாக ஆண்டவர் தன்னை வெளிப்படுத்தி, எம் நெஞ்சுக்கு நெருக்கமானவராக ஆகிவிடுகிறார். "தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்" (எசாயா 66:13) என்ற இறைவார்த்தைகள் இறைவன் தாயுள்ளம் படைத்தவர் என்பதை எமக்குச் சொல்கின்றது.

இதைவிட எப்படி சொல்வது நான் உன்னை உயிருக்குயிராய் நேசிக்கிறேன் என்பதை, "இஸ்ரயேல் குழந்தையாய் இருந்தபோது அவன்மேல் அன்புகூர்ந்தேன், எகிப்திலிருந்து என் மகனை அழைத்து வந்தேன்... எப்ராயிமுக்கு நடை பழக்கியது நானே, அவர்களைக் கையிலேந்தியதும் நானே, ஆயினும் அவர்களைக் குணமாக்கியது நானே என்பதை அவர்கள் உணராமல் போனார்கள்... எப்ராயிமே! நான் உன்னை எப்படிக் கைவிடுவேன், இஸ்ரயேலே! உன்னை எப்படிக் கைநெகிழ்வேன், என் இரக்கம் பொங்கி வழிகிறது" (ஓசேயா 12:1-8).

### கண் காணாத கடவுளின் கருணைமுகம் இயேசு

இறை இரக்கத்தின் முழு வெளிப்பாடாக, மனித உருவாக, கண்ணால் காணமுடியாத கடவுளின் கருணை முகமாக வந்தவரே இயேசு. 'பலமுறை, பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள் இவ்விறுதி நாட்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்... கடவுளுடைய மாட்சிமையின் சுடரொளியாகவும் அவருடைய இயல்பின் அச்சுப் பதிவாகவும் விளங்கும் இவர், தம் வல்லமைமிக்க சொல்லால் எல்லாவற்றையும் தாங்கி நடத்துகிறார்" (எபிரேயர் 1:1-3). பழைய ஏற்பாட்டுக் கடவுளின் விம்பமாக, பிரதியாக நோக்கப்படுகிறார் கிறிஸ்து. இவரே இறைவெளிப்பாட்டின் உச்சமும் நிறைவுமாக விளங்குகிறார். இறை இரக்கம் தொடர்பான பழைய ஏற்பாட்டு மரபு முழுமையின்மீது நிலையான ஒரு தாக்கம் செலுத்துகிறார். இறை இரக்கம் தொடர்பான அவரது போதனைகள், உவமைகளைத் தாண்டி பலபடி மேலே சென்று அவரே இரக்கமாகிறார். 'அவரது இருப்பே தன்னியல்பில் இரக்கமாக உள்ளதாக' புனித இரண்டாம் யோவான் பவுல் குறிப்பிடுகிறார்.

"கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை, தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும் கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார்" (யோவான் 1:18) "அவர் கட்புலனாகாத கடவுளின் சாயல்.. (கொலோ 1:15) இவ்வாறு இரக்கமுள்ள தந்தையின் வெளிப்பாடாக கிறிஸ்து இருக்கின்றார்.

### லூக்கா

லூக்கா நற்செய்தியிலே திருமுழுக்கு யோவானின் சீடர்கள் "நீர்தாம் மெசியாவா?" என்று கேட்டபோது இயேசு தன்னுடைய இரக்கத்தின் செயல்களுடாக தன் முகவரி சொல்கிறார். "பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர். கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர், தொழுநோயாளர் நலமடைகின்றனர், காது கேளாதோர் கேட்கின்றனர், இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுகின்றனர். ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது. (லூக்கா 7:22). இயேசு தன் போதனைகளிலும் சிறப்பாக இறை இரக்கத்தின் உச்சத்தை காணாமற்போன ஆடு, காணாமற்போன திராக்மா, காணாமற்போன மகன் உவமைகளுடாக சிறப்புற விளக்கிறார்.

### மத்தேயு

"நான் பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" (எசாயா 6:6) என்ற ஓசேயா இறைவாக்கினரின் வார்த்தைகளை இயேசு அடிக்கடி பயன்படுத்துகிறார். வரி தண்டுபவரான மத்தேயுவை அழைத்தபோதும், (மத்தேயு 9:13) ஓய்வு நாள் ஒன்றில் வயற்காட்டு வரப்போரம் நடந்து சென்ற இயேசுவின் சீடர்கள் கதிர்களை உண்டதற்காக விமர்சிக்கப்பட்டபோதும் இயேசு "பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" என்கிற வார்த்தைகளைக் கூறுகிறார். இந்த 'இரக்கம்' யூத சமய சட்டங்களின் ஆணிவேரையே அசைப்பதாகப் பட்டது. கடவுளை கையில் தராசோடு நிற்கும் நீதிபதியாகக் கண்ட, சட்டத்தின் வரிகளையெல்லாம் அழிக்க முடியாத கைரேகைகளாக பார்த்த யூத சமய மதவாதிகளுக்கு "சட்டத்திற்காக மனிதன் அல்ல, மனிதனுக்காகவே சட்டம்" என்ற போதனை, தாங்கள் சட்டங்களால் கட்டிவைத்த 'கடவுள் கோட்டையையே' தகர்த்துப் போடுகிற அணுகுண்டென அலறினார்கள். ஆனால் இயேசுவோ, நீங்கள் என்னைக் கொன்றுபோட்டாலும் பரவாயில்லை, நான் பார்த்ததையும் கேட்டதையுமே பேசுகிறேன். நான் அனுபவித்த தந்தை இரக்கமே உருவானவர் என்பதை மீண்டும் மீண்டும் புரியவைத்தார். அவர்கள் கண்களை மறைத்த சட்டத்தை கொஞ்சம் தூக்கி நிஜக்கடவுளைக் காட்டினார்.

தான் உயிருக்குயிராய் நேசித்த ஒரே மகனை சாவுக்கு கையளித்தது இறைவன் மனுக்குலத்தின்மேல் பல நூற்றாண்டுகளாக காட்டிய இரக்கத்தின் நீட்சியின், உச்சமாகக் காணலாம். இந்த இரக்கம் ஆழம் காணமுடியாத அன்பின் ஊற்றிலிருந்து பொங்கி வழிந்து மனுக்குலத்தை நனைக்கிறது. "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவான் 1:5, 13). இந்தத் தற்கொடை அன்பே உயிரைக் கொடுக்கிற அளவான தியாகத்தைச் சாத்தியப்படுத்தியிருக்கிறது.

பாவப்பட்ட மனுக்குலத்தை மீட்டு, உயிர் கொடுத்த இயேசு, உயிர்த்தபின் தன் சீடர்களுக்கும் தோன்றி, "தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள், எவருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும்" (யோவான் 20:22-23) என்று கூறி தன் இரக்கத்தின் பணியை தன் சீடர்கள் தொடர்ந்து செய்ய வேண்டுமென அழைப்பு விடுக்கிறார். கடவுளை நம்புவதென்பது அவரது இரக்கத்தில் நம்பிக்கை வைப்பதாகும்.

இயேசு யூத சட்டங்களை உடைக்கவில்லை. அவர் எல்லாச் சட்டங்களையும் ஒன்று திரட்டி அன்பின் கட்டளைகளாக தந்தது, கடவுள் தொடர்பான பார்வைக் கோணத்தில் மிகப்பெரிய புரட்சிகரமான திருப்புமுனையாக அமைந்தது. "அன்பில்லாதோர் கடவுளை அறிந்துகொள்ளவில்லை. ஏனெனில் கடவுள் அன்பாய் இருக்கிறார்"

"உங்கள் தந்தை இரக்கமுள்ளவராக இருப்பதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாக இருங்கள்" (லூக்கா 6:36) என்பதற்கும், "மானிடரை நம் உருவிலும் சாயலிலும் உண்டாக்குவோம். (தொ.நூ 1:26), என்பதற்கும் "எங்களுக்கெதிராகக் குற்றம் செய்வோர் அனைவரையும் நாங்கள் மன்னிப்பதால் எங்கள் பாவங்களையும் மன்னியும்" (லூக்கா 11:4) என்பதையும் ஒரே பார்வையில் நெருக்கமாகப் பார்க்கிறபோது "இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்" (மத்தேயு 5:7) என்கிற மலைப்பொழிவு தெளிவாகி விடுகிறது. இரக்கத்திற்கும் எமக்கும், இரக்கத்திற்கும் இறைவனுக்கும் இடையே உள்ள உறவு துல்லியமாகத் துலங்குகிறது.

### இறுதியாக

"பலர் இறைவனுடைய இரக்கத்தை எதிர்ப்பதுபோலத் தோன்றுகிறது. மேலாக, இரக்கம் என்ற எண்ணக்கருவை வாழ்வின் நிஜங்களில் இருந்து ஓரங்கட்ட முனைகின்றனர். மனித இதயத்தை இரக்கம் என்ற இருப்புநிலையில் நின்று திசைதிருப்ப முயல்கின்றனர்" என புனித இரண்டாம் ஜோவான் பவுல் குறிப்பிடுகிறார். மனித நிர்வாகக் கட்டமைப்பு நோக்கில் 'இரக்கம்' என்ற உணர்வுப்புள்ளி ஓர் உடைவாக பல மனிதர்களால் உணரப்படுவது ஊனமுற்ற மனச்சாட்சி கொண்ட மனித இனம் உருவாகி வருவதைக் காட்டுகிறது.

இச்சிறு ஆய்வு கடவுளின் இரக்கம் தொடர்பான வேதாகமத்தின் எல்லா பக்கங்களையும் தொடவில்லை என்பது உண்மை. இறைவன் இரக்கம் நிறைந்தவராக இருக்கிறார் என்ற உண்மையை ஐயமின்றி உணரப் போதுமான சில மேற்கோள்கள் மட்டுமே எடுத்தாளப்பட்டுள்ளன.

இறுதியாக 1950ல், இறையியலாளர் றெஜினோல்ட் லக்றேஞ்ஜ் எழுதிய கருத்துக்கள் இங்கு மிகப் பொருத்தமானவையாக உள்ளன. "இறைவனின் எல்லாச் செயல்களின் வேர்ப்பகுதியாக இருப்பது அவரது இரக்கமே. இவ்விரக்கம் அவரது எல்லாச் செயற்பாடுகளிலும் ஊடுருவிக் காணப்படுவதோடு அதுவே மேலாங்கி நிற்கிறது. இறை இரக்கம் எத்துணை தாக்கம் நிறைந்ததாக உள்ளதென்றால் இறைவனின் நீதியைத் தாண்டி மதிப்புப்பெற்று நிற்கிறது. இறை இரக்கத்தின் முன் நீதி இரண்டாம் நிலையையே பெறுகிறது." இது அளவு கடந்த இறை அன்பின் வெளிப்பாடாக மனிதச் சிறு மூளைக்கு சிக்கிடாத மறைபொருளாகவே உள்ளது.

கிறிஸ்தவர்களான எமது ஆன்மீக வாழ்வின் திசைகாட்டி மரமாக உள்ள திருவிவிலியம் முழுவதும் நடந்துவருகிற இறைவன் எல்லா இருப்புநிலைகளையும் தாண்டி அன்பும் இரக்கமுமாக இருக்கிறார் என்பது மிகத்தெளிவாக விளங்குகிறது. ஆகவே மீண்டும் நினைவுபடுத்துகிறேன் "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராக இருப்பதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாக இருங்கள்" (லூக்கா 6:36).

*(நன்றி: இறையியல் கோலங்கள், யூலை - டிசம்பர் - 2015)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

### முத்தரிப்புத்துறை

## காமலின் செளமியா குரூஸின் கவிதைகள்

### 'மனிதனை'த் தேடுகிறேன்!

நீதி ஏங்குகிறது!
நிலையாய் தனக்கென்றொரு நிலம்
இந்தத் தரணியிலே இல்லாமல்
எல்லாம் தறிகெட்டுப் போனதென்று!
சாதிக்கொன்றாய்
சமயத்திற்கு வேறொன்றாய்
இனத்திற்கு இன்னொன்றாய்
நிறத்திற்கு வெவ்வேறாய்
நீதியைப் பங்கீடுசெய்ய நினைக்கும்
"தாராள மனசு"
பஞ்சாயத்துப் பண்ணையார்களால்
நீதி ஏங்குகிறது.

நிலையாய் தனக்கொரு
நிலம் இல்லாமற் போனதென்று.
செங்கோல் இன்று
"செங்குரங்குகள்" கைகளிலும்
செங்கம்பள வரவேற்புக்கள் இன்று
மனித அங்கங்களை
அசலாக சப்பித் துப்பும்
"உத்தமர்"களுக்குமாக
உருமாறிப்போனதால் நீதி ஏங்குகிறது.

நீதியே... நீ கேளாய்!
என்றோ ஒருநாள்.....
கோடியில் ஒரு "மனிதன்"
ஒரு கோடியிலிருந்து
உன் குறை தீர்க்க
"வீறுடன் எழுவான் என்றும்
வீழாத செங்கதிராய்".
அன்று நீதியே உனக்கு
அரியணை கிடைக்கும்.
விடியும் உலகம்
முடியும் அவலங்கள்!

### ஒரு துளி

இறைவா.... என்னை மன்னியும்
எனக்காக நீர் சிந்திய இரத்தத்தை
வீணாக்கி விட்டேன்
தீய எண்ணங்களிடம்
என் பரிசுத்தம் தோற்றுப்போனது
மீண்டும் வாய்ப்பளியும் எஜமானே
ஒரே ஒரு துளி எனக்காக சிந்தும்
நிச்சயம் திருந்தி வாழ்வேன்.

காய்ந்து போனது கண்கள்
வற்றிவிட்டது கண்ணீர் - அது
நிரந்தரமாகவே வற்றிப்போகட்டும்!
எதற்கும் ஒரு துளி மீதம் வைத்திரு.
கனவுகள் உன் கண்ணில்
காயாமல் வாழ்கிறது.
அவை நிறைவேறும் நாளில்
ஆனந்தக் கண்ணீர் வேண்டாமா...?

### செபத்தால் சாதிப்போம்

நம் நாட்டில் தொலைந்தது
மனித நேயம் என்றாலும்
பிறந்தது செபவாழ்வு.
இயேசுவின் அன்பின் பயணமாய்
இன்று... கதை முதல் காவியங்கள் வரை
சொல்லுமடா இயேசுவின் பெருமை

வேதாகமப் புதுமைகளாய் இன்று....
பலத்தால் சாதிக்காததை இன்று
செபத்தால் சாதிக்கலாம்
இயேசுவின் பிள்ளைகளாய் நின்று...
மனமிருந்தால் இடமுண்டு
செபம் செய்தால் நிச்சயம்
எமக்கு வெற்றி உண்டு...
செபம் செய்வோம்
இயேசுவின் அன்பைப் பிரதிபலிப்போம்!

### முத்தூர்

கதிரவன் சுட்டு - எங்கள்
கடலன்னையின் முதுகில்
எத்தனை கொப்பளங்கள்!
முதுகின்மேலே முத்தரிப்பு
மண்ணைப் போட்டு அந்தோ......

அல்லியின் கோட்டையும்
அரிபட்டுப்போகின்றதே
இந்துக் கடலின் கொப்பளங்களைத்
தகர்க்க எங்கள் முள்ளிகள்
போதாதிருக்கையில்
இவள் மல்வத்து ஓயா ஏன்
மல்லுக்கட்டி வருகிறாள்?
அடடா ஊறல் மகளோடு
உரசிவிட்டு வருகிறாளே
முந்தநாள் முளைத்த
தென்னைகள் ஏனங்கு?
முண்டியடிக்கின்றன ...
சிற்றின்பம் கொள்ளவோ
இல்லாவிடில் சிறைப்படுத்தவோ

சிற்றின்பம் கொள்ளவெனில்
ஆண்டியாய்ப்போன எங்கள்
ஆண்டியோடையிடம் கேளுங்கள்

சம்மாட்டியார் வாடிகளுக்கு
சீர்தானம் கொடுத்தே
அவள் சீரழிந்து போனாள்
கல்யாண விசாகை தேடும் முன்னர்
கதியிழந்து போனாள்...

## கொஞ்சம் சிரிங்க

***காதலி :*** நம் பெற்றோர் சம்மதித்தால் கல்யாணம், இல்லையேல் தற்கொலைதான்.
**காதலன் :** (மனசுக்குள்) ம்க்ஹம், எனக்கு ரெண்டுமே ஒன்றுதான்.

.....................................

**ஆசிரியர் :** கும்பகர்ணன் மாதக்கணக்கில் தூங்கினான். இது என்ன காலம்?
**மாணவி :** அது கொசு இல்லா காலம் சார்!

.....................................

**ஆசிரியர் :** அக்கால ஆட்சி முறைக்கும், இக்கால ஆட்சி முறைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
**மாணவி :** அக்கால ஆட்சிமுறை 'கல்வெட்டு' ஆட்சி. இக்கால ஆட்சி "கட்-அவுட்" ஆட்சி.

.....................................

***கணவன் :*** கலண்டரில என்ன பார்க்கிறாய்?
***மனைவி :*** பல்லி விழும் பலன்.
***கணவன் :*** கொண்டா, நான் பார்க்குறேன், அது சரி, பல்லி எங்க விழுந்தது?
***மனைவி :*** நீங்க சாப்பிட்ட சாம்பாறில.

## சமையல் குறிப்பு

### மோர் குழம்பு



**தேவையானவை:**
புளிக்காத தயிர் - ஒரு கப்,
காய்ந்த மிளகாய் - 2,
தேங்காய் - 1/4 கப்,
மஞ்சள் தூள்,
உப்பு - தேவையான அளவு, எண்ணெய், சீரகம் - தாளிக்க.

**செய்முறை :**
தேங்காயை நன்கு வழுவழுவென்று அரைத்துக்கொள்ளவும். தயிரில் உப்பு மஞ்சள் சேர்த்து மிக்ஸியில் ஒரு சுற்றுச் சுற்றி எடுக்கவும். இத்துடன் அரைத்த தேங்காயைச் சேர்த்துக்கொள்ளவும். பாத்திரத்தில் எண்ணெய் காயவிட்டு சீரகத்தைப் பொரிய விடவும். பின்னர் வற்றல் மிளகாயைக் கிள்ளிப்போடவும். இதனுடன் மோர் கலவையைச் சேர்க்கவும். நன்கு நுரை கூடிவரும் நேரம் தீயை அணைத்துவிடவும். கமகம மோர்க்குழம்பு தயார். காய்கள் வேண்டுமென்றால் வேகவைத்து சேர்த்துக்கொள்ளலாம்.

## மன்னா விளம்பரப் பலகை

சகித்துக்கொண்டு வாழ்வது வாழ்க்கை அல்ல. இரசித்துக்கொண்டு வாழ்வதே வாழ்க்கை!

ஒருவருக்கு நம்மைப் பிடிக்க வேண்டுமானால் அவர்கள் நினைத்ததைவிட நாம் உயர்வாக இருக்க வேண்டும்!!

.....................................

கவலைப்பட நேரமின்றி உழை. கண்ணீர்விட நேரமின்றி உறங்கு. நீயே அதிர்ஷ்டக்காரன்.

.....................................

மகிழ்ச்சி என்பது நம் வீட்டில் விளைவது. மற்றவர் தோட்டத்தில் அதைத் தேடவேண்டியதில்லை.

ஒரு புத்திசாலியால் சாதிக்க முடியாததை ஒரு பொறுமைசாலி சாதித்துவிடுவான்.

.....................................

எல்லா உறவுகளும் கண்ணாடி மாதிரித்தான். நாம் எப்படிப் பழகுகிறோமோ அப்படித்தான் அதன் விம்பங்களும்.

உறவால் வரும் அன்பைவிட அன்பால் வரும் உறவே புனிதமானது.

.....................................

எது நம்மை பிரிக்கிறதோ அதை மறப்போம், எது நம்மை இணைக்கின்றதோ அதைப்பற்றிச் சிந்திப்போம்.

.....................................

ஓடும்போது விழுந்து விடுவோம் என்று நினைப்பவனைவிட விழுந்தாலும் எழுந்து ஓடுவோம் என்று நினைப்பவனே ஜெயிப்பான்.

வாழ்க்கையில் நிம்மதி தேவையென்றால் ஞாபகமறதி அவசியம் தேவை.

.....................................

கோபங்களின்போது பிரிவை அனுமதிக்காதீர்கள். அதுவே நிரந்தரமாகிவிடும்.

## சித்த மருத்துவக் குறிப்புகள்



- ***கடுமையான தலைவலி :*** ஐந்தாறு துளசி இலைகளும் ஒரு சிறுதுண்டு சுக்கு, 2 இலவங்கம் சேர்த்து மைபோல அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.
- ***தும்மல் நிற்க:*** தூதுவளைப் பொடியில் மிளகுப் பொடி கலந்து, தேனில் அல்லது பாலில் சாப்பிட தும்மல் நிற்கும்.
- ***பல்லில் புழுக்கள்:*** சிறிது வேப்பங்கொழுந்து எடுத்து, நன்றாகப் பற்களின் எல்லாப் பகுதியிலும் படும்படி மென்று சாப்பிட வேண்டும்.
- ***உடல் பருமன் குறைய:*** வெங்காயத்தில் கொழுப்புச் சத்துக் குறைவு. அதனால் உடல் பருமனைக் குறைத்துக்கொள்ள விரும்புகிறவர்கள் உணவில் தாராளமாக வெங்காயம் சேர்த்துக்கொள்ளலாம்.
- ***வெண்மையான பற்களைப் பெற :*** வெண்மையான பற்களைப் பெற ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட பின்பு வாயை நன்றாகக் கழுவவேண்டும். தூங்கப் போகும் முன்பும், தூங்கி எழுந்த பின்பும் பல் தேய்க்க வேண்டும். பல்தேய்த்துக் கழுவும்போது ஈறுகளைத் தேய்த்துத் தடவிக் கழுவவேண்டும். இதனால் பற்களும் ஈறுகளும் வலுவடையும்.
- ***கணைச்சூடு குறைய:*** கணைச் சூட்டினால் சில குழந்தைகள் உடல் மெலிந்து நெஞ்சுக்கூடு வளர்ச்சி இன்றி மெலிவாகவும் இருப்பார்கள். அவர்களுக்கு தினமும் ஆட்டுப்பாலில் 2 தேக்கரண்டி தேன் கலந்து கொடுத்தால் கணைச்சூடு குறைந்து உடல் தேறிவிடும்.
- ***கக்குவான் இருமல் :*** வெற்றிலைச் சாறுடன், தேன் கலந்து கொடுத்தால் குழந்தைகளுக்கு வரும் கக்குவான் இருமல் குணமாகும்.
- ***உள்நாக்கு வளர்ச்சி:*** உப்பு, தயிர், வெங்காயக் கலவை உள்நாக்கு வளர்ச்சியைத் தடுக்கும்.
- ***இரத்தச் சோகை:*** இரத்தச் சோகை நோய்க்கு தேன் ஏற்ற மருந்து. இதற்குக் காரணம் அதில் இரும்புச்சத்து இருப்பதாகும். ஆட்டுப்பாலை வடிகட்டி, தேன் கலந்து பருகினால் உடல் வலிமை ஏற்படும். உடலுக்குத் தேவையான இரத்தத்தை ஊறச்செய்யும்.
- ***மயக்கத்துக்கு:*** ஏலக்காய் 1 பங்கு, பனை வெல்லம் ½ பங்கு சேர்த்து, எட்டுப்பங்கு நீர்விட்டுக் காய்ச்சிக் கொடுக்க பித்த மயக்கம் நீங்கும்.
- ***அலர்ஜிக்கு மருத்துவம்:*** அரை எலுமிச்சம்பழம் சாறும், இரண்டு ஸ்பூன் தேனும் ஒரு டம்ளர் தண்ணீரும் கலந்து அருந்திவந்தால் அல்ஜி குணமடையும்.
- ***பொன்மேனி தரும் குப்பைமேனி:*** குப்பைமேனி இலையையும், உப்பையும் சேர்த்து அரைத்து சொறி சிரங்குகளுக்குத் தேய்த்துவர குணமாகும்.
- ***மயிர் கறுக்க:*** மருதோன்றி இலை, நிலவாரை இரண்டையும் சேர்த்து அரைத்துப் பூச மயிர் கறுக்கும்.

## சமையல் குறிப்பு

### முருங்கைகாய் பொரிச்ச குழம்பு



**தேவையானவை:**
முருங்கைகாய் - 2, தேங்காய் - 1/2கப், மிளகு - 1/2 டீ ஸ்பூன், சீரகம் -1/2 டீ ஸ்பூன், சின்னவெங்காயம் - 8, பாசிப்பருப்பு - 1/4 கப், தாளிக்கும் வடகம் - 1 டீ ஸ்பூன், கடுகு - 1/2 டீ ஸ்பூன், தேங்காய் எண்ணெய் - 4 டீ ஸ்பூன்.

**செய்முறை :**
முதலில் பாசிப்பருப்பை வேகவைத்துக்கொள்ளவும், தேங்காய், மிளகு, சீரகம் சேர்த்து அரைக்கவும். தேங்காய் எண்ணெய் ஊற்றி கடுகு, நறுக்கிய வெங்காயம் தாளித்து முருங்கைக்காயைப் போட்டு வேகவிடவும். காய் வெந்ததும் வேகவைத்த பாசிப்பருப்பு, அரைத்த தேங்காய், உப்பு சேர்த்து வேகவிடவும். கொதித்து கூட்டுப்போல வந்ததும் கடைசியாக எண்ணெயில் வடகத்தைத் தாளித்து கொட்டி இறக்கவும்.

**முருங்கைக்காய் பொரிச்சக்குழம்பு தயார்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

## தொடர் 3 - திருக்கலங்களும் திருத்துகில்களும்

**"இந்தக் கிண்ணம் உங்களுக்காச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை" (எபே 2:21).**

**41. திருப்பலிக்குத் தேவையானவை எவை?**
அப்பம், இரசம், தண்ணீர், திருநூல்கள், திருக்கலங்கள், திருத்துகில்கள், திருஉடைகள் ஆகியன.

**42. திருப்பலியில் எவ்விதமான அப்பமும் இரசமும் உபயோகிக்கப்பட வேண்டும்?**
கோதுமை மாவினால் செய்யப்பட்ட புளியாத அப்பமும் இயற்கையான, கலப்படம் இல்லாத திராட்சைப்பழ இரசமும் உபயோகிக்கப்பட வேண்டும்.

**43. திருக்கலங்கள் என்பவை யாவை?**
திருவழிபாட்டை (திருப்பலியை) கொண்டாடுவதற்காகப் பயன்படுத்தப்படும் எல்லாக் கலங்களும் திருக்கலங்கள் ஆகும்.

**44. திருக்கலங்கள் எத்தனை வகை உண்டு?**
***ஐந்து வகை:*** நற்கருணைக் கலம், திருப்பலிக் கிண்ணம் (திரு இரத்தக் கலம்), திருஅப்பத்தட்டு, நற்கருனைக் கதிர்பாத்திரம், நற்கருணைச் சிமிழ்.

**45. திருக்கலங்களுள் தனிச்சிறப்பு வாய்ந்தவை எவை? ஏன்?**
திருக்கிண்ணமும் அப்பத்தட்டும்.
ஏனெனில் இவற்றில்தான் அப்பமும் இரசமும் ஒப்புக் கொடுக்கப்படுகின்றன, அர்ச்சிக்கப்படுகின்றன.

**46. நற்கருணைக் கலம் என்பது என்ன?**
நற்கருணையைப் பாதுகாப்பாய் வைத்திருப்பதற்காக தங்கத்தாலோ உட்புறத்தில் தங்கமுலாம் பூசப்பட்ட வேறு எந்தத் தாதுப்பொருளாலோ செய்யப்பட்ட ஒரே ஒரு கலம். இது வெள்ளைப்பட்டு உறையால் மூடப்பட்டிருக்கும்போது அதற்குள்ளே நற்கருணை இருக்கிறது என்று அறிந்துகொள்ளலாம்.

**47. திருப்பலிக்கிண்ணம் (திரு இரத்தக் கலம்) என்பது என்ன?**
இது ஆயரால் அர்ச்சிக்கப்படும் ஒரு கிண்ணம். இக்கிண்ணம் தங்கம் அல்லது வெள்ளியால் செய்யப்பட்டிருக்க வேண்டும். வெள்ளியால் செய்திருந்தால் உட்பக்கம் தங்கமுலாம் பூசி இருத்தல் விரும்பத்தக்கது. அதில்தான் இயேசுவின் திருஇரத்தமாக மாறும் இரசம் ஊற்றப்படுகிறது.

**48. திருஅப்பத்தட்டு என்பது என்ன?**
இது தங்கத்தால் அல்லது உட்புறம் தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளியால் ஆன வட்டமான ஒரு தட்டு. இதில்தான் அருள்பணியாளர் இயேசுவின் திரு உடலாக மாறும் அப்பத்தை / நற்கருணையை வைக்கிறார்.

**49. நற்கருணைக் 'கதிர் பாத்திரம்' என்பது என்ன?**
நற்கருணையைச் சிறப்பு வழிபாட்டிற்காகப் பீடத்தின்மீது எழுந்தேற்றம் செய்து வைக்கவும் அல்லது பவனியாக எடுத்துச்செல்லவும் பயன்படுத்தப்படும் ஒரு திருக்கலம். இதன் நடுவே பொருத்தப்படும் நற்கருணையைக் கொண்டுள்ள சிமிழைத் தவிர மற்றது எந்தத் தாதுப்பொருளாலும் செய்யப்பட்டிருக்கலாம். அந்த வட்டச்சிமிழ் தங்கத்தாலோ அல்லது தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளியாலோ செய்யப்பட்டிருக்க வேண்டியது விரும்பத்தக்கது.

**50. நற்கருணைச் சிமிழ் என்பது என்ன?**
இது இருவகைப்படும். ஒன்று: நற்கருணை ஆராதனைக்காக வைக்கப்படும் கதிர்பாத்திரம். நற்கருணையை வைக்கப் பயன்படும் நற்கருணைச் சிமிழ்.
மற்றொன்று: நோயாளிகளுக்கு நற்கருணை எடுத்துச்செல்லப் பயன்படுத்தப்படும் சிறிய நற்கருணைச் சிமிழ்.

**51. மேற்கூறப்பட்ட திருக்கலங்கள் எவ்வகைப் பொருளால் மேலும் தயாரிக்கப்படலாம்?**
உயர்ந்த ரக உலோகங்கள் தவிர (எடுத்துக்காட்டாக, தங்கம், வெள்ளி) ஆயர் பேரவையின் முடிவின்படியும் திருத்தூதரக ஆட்சிப்பீடத்தின் ஒப்புதலின்படியும் அந்தந்த நிலப்பகுதியில் கிடைக்கப்பெறுகின்ற உயர்ந்த தரமும் உறுதியும் வாய்ந்த பொருள்கள் கொண்டும் தயாரிக்கப்படலாம். அவை திருப்பணிக்கு உகந்தவையாய் இருக்க வேண்டும்.

**52. திருக்கலங்களை யார் தொடலாம்?**
நற்கருணையைக் கொண்டிராத சமயத்தில் யாரும் கதிர்பாத்திரத்தையோ திருப்பலிக்கலம், திருஅப்பத்தட்டு, நற்கருணைக்கலம் ஆகியவற்றையோ தொடலாம், ஆனால் அவைகளில் நற்கருணை இருக்கும்போது அருள்பணியாளரும், திருத்தொண்டரும் தனிப்பட்ட அனுமதி பெற்றவர்களும் மட்டும் அவைகளை அவரவர்க்கு குறிப்பிட்ட பணிகளுக்கு ஏற்றவாறு பயன்படுத்துவர்.

**53. திருக்கலங்கள் புனிதப்படுத்தப்பட வேண்டுமா? யார் அவற்றைப் புனிதப்படுத்தலாம்?**



திருக்கலங்கள் புனிதப்படுத்தப்பட வேண்டும். ஆயரோ திருப்பலி நூலின் பொதுப் போதனைக்கு ஏற்ப அருள்பணியாளரோ அவற்றைப் புனிதப்படுத்துவார்.

**54. திருப்பலிக்குத் தேவையான திருத்துகில்கள் யாவை?**
பீடத்துகில்கள் (Altar Clothes) திருமேனித் துகில் (Corporol) திருக்கிண்ணத்துகில் (Purificator) இவற்றில் சிலுவைச் சின்னம் நடுவில் இருக்கும். கைத்துகில் (Lavobo towel) சிலுவைச் சின்னம் இதன் ஓரத்தில் தைக்கப்பட்டிருக்கும், திருக்கிண்ண அட்டை (Palla) ஆகியன.

**55. திருமேனித்துகில் என்பது என்ன?**
இது சுத்தமான நூலால் நெய்யப்பட்ட சதுர வடிவம் கொண்ட ஒரு வெண் துகில். திருப்பலிக் கலத்தையும் திருஅப்பத் தட்டையும் வைப்பதற்காக, காணிக்கைப் பொருள்களைத் தயார்செய்வதன் முதல் செயலாக இத்துகிலை அருள்பணியாளர் பீடத்தின்மேல் விரிப்பார். இதுவும் இயேசுவின் அடக்கத்தின்போது இவருடைய திருஉடலைச் சுற்றியிருந்த துகிலைக் குறிக்கிறது.

**56. திருக்கிண்ண அட்டை என்பது எது?**
திருப்பலி நேரத்தில் தூசியோ பூச்சிகளோ வேறு எதுவோ இரசக் கலத்தினுள் விழாதிருக்க அதை மூடுவதற்குப் பயன்படும் ஒரு திண்மையான சிறு சதுர அட்டை.

**57. திருக்கிண்ணத் துகில் என்பது எது?**
அருள்பணியாளரே, அனுமதிபெற்ற பிற பணியாளரோ நற்கருணையைத் தொட்டபின் அல்லது உட்கொண்டபின் தம் விரல்களையும் திருக்கலத்தையும் துடைத்து தூய்மைப்படுத்தப் பயன்படும் ஒரு சிறிய துகில்.

**58. தூய தொட்டி (Sacrarium) என்பது எது?**
திருக்கலங்களையும் துகில்களையும் தூய்மை செய்யப் பயன்படுத்தப்பட்ட தண்ணீர் ஊற்றப் பயன்படும் தொட்டி ஆகும். (GIRM, 280, 334)

## 2.3. திருவழிபாட்டுக்கு உரிய பொருள்கள்

**"இவை அனைத்தையும் என் கைகளே உண்டாக்கின, இவை யாவும் என்னால் உருவாகின" (எசா 66:2)**

**59. திருவழிபாட்டுக்கு உரிய சடங்குகளை நிறைவேற்றுவதில் உபயோகிக்கப்படும் முக்கியமான பொருள்கள் எவை?**
தண்ணீர், உப்பு, எண்ணெய், தைலம், தூபம், மெழுகு, திருச்சிலுவை, அப்பம், இரசம் போன்றவை.

**60. தண்ணீர் எதற்காக உபயோகிக்கப்படுகின்றது?**
திருமுழுக்குக் கொடுக்கவும், தீர்த்தம் தயாரிக்கவும் பயன்படுகிறது. இத்தண்ணீர் திருவழிபாட்டுப் பயன்பாட்டிற்காக புனிதப்படுத்தப்பட வேண்டும். புனிதப்படுத்தப்பட்ட தண்ணீர் தூய்மைக்கு அடையாளம்.

**61. உப்பு எப்போது உபயோகிக்கப்படுகிறது?**
தீர்த்தம் தயாரிக்கப்படும்போது தண்ணீரில் உப்பு கலக்கப்படுகின்றது.

**62. உப்பு எதன் அடையாளம்? அது ஏன் தண்ணீரில் கலக்கப்படுகிறது?**
தூய்மை, மேன்மை, ஞானம் இவற்றின் அடையாளம்.
பழைய ஏற்பாட்டுக் கூற்றுகளைப் பார்க்கின்றபோது உப்பு கடவுளுக்குக் கொடுக்கப்பட்ட பலிப்பொருள்களோடு இணைந்து செல்கிறது என்பது அது உடன்படிக்கையின் அடையாளமாக இருக்கிறது என்பதும் பலனாகிறது (லேவி 2:13, எசே 43:24). உப்பு தூய்மையைக் குறிக்கும் பொருளாகவும் பொருள்களைக் கெட்டுப்போகாமல் காக்கின்ற ஒன்றாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (2அர 2:19-22). சுவையூட்டுகின்ற, தூய்மைப்படுத்துகின்ற குணநலன்களைக் கொண்டதாகவும் விவிலியம் அதை விவரிக்கின்றது (யோபு 6:6, பாரு 6:27, 1கொரி 3:13).
இவ்வாறு மேற்கூறிய கூற்றுகளின்படி, உப்பு தண்ணீரில் கலக்கப்படுவது கடவுளின் உடன்படிக்கையை நினைவுபடுத்துவது மட்டுமல்லாமல், உலகின் உப்பாக, சாரம் உள்ளவர்களாக நாம் விளங்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக (2 கொரி 13:5, லூக் 14:34-35, மாற் 9:50, மத் 5:13, கொலோ 4:6).

**63. திருஎண்ணெய் எப்போது தயாரிக்கப்படுகிறது? எதற்கு உதவுகிறது? அதன் சிறப்பு அம்சம் என்ன?**
புனித வாரத்தின் வார நாள் திருப்பலியிலோ புனித வியாழன் காலைத் திருப்பலியிலோ (திருத்தைல திருப்பலியில்) ஆயரால் மூன்று விதமான எண்ணெய் புனிதப்படுத்தப்படுகிறது. ஆயத்த நிலையினரின் எண்ணெய் (O.C), கிறிஸ்மா தைலம் (S.C), நோயாளிகளின் எண்ணெய் (O.I).
திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், குருத்துவம், நோயில்பூசுதல் போன்ற அருளடையாளக் கொண்டாட்டங்களின்போதும் பல்வேறு நேர்ந்தளிப்புச் சடங்குகளின்போதும் இத்திருத் தைலங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் இந்த எண்ணெய்கள் அந்தந்த தல ஆயரால் புனிதப்படுத்தப்படுவதால் இவை அனைத்துப் பங்குத் தளங்களுக்கும் எடுத்துச்செல்லப்பட்டு மக்களின் கிறிஸ்தவ வாழ்வுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை பங்கு மக்கள், அருள்பணியாளர், ஆயர் ஆகியோருக்கும் தல ஆயர் வழியாகப் பிற ஆயர்களுக்கும் இடையே உள்ள இணைப்பை வெளிப்படுத்துகின்றன. எண்ணெய்ப் பூசுதலின் வழியாக அனைத்துலகத் திருச்சபை தன்னை ஒவ்வொரு அருளடையாளத்திலும் வெளிப்படுத்துகிறது.

**64. சாதாரண எண்ணெய் எதற்கு உதவும்?**
நற்கருணைப் பேழைக்கு முன்பாக எரிந்துகொண்டிருக்கும் அணையா விளக்கில் எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது.

**65. தூபம் காட்டுவதன் நோக்கம் என்ன?**
தூபம் காட்டுவது ஆராதனைக்கும் வணக்கத்துக்கும் அடையாளம். நம்பிக்கையாளர் கடவுளுக்குச் செலுத்தும் ஆராதனையும் ஒப்புக்கொடுக்கும் மன்றாட்டுகளும் அவருடைய திருமுன்னிலையில் ஒரு நறுமணப் புகைபோல் எழும்புகின்றன என்பதைக் குறித்துக் காட்டுவதுதான் இதன் நோக்கம்.

**66. எந்த நாள்களில் திருப்பலியில் தூபம் பயன்படுத்தப்படலாம்?**
எல்லா நாள்களிலும் தூபத்தைப் பயன்படுத்தலாம். ஆனால் பாடல் திருப்பலிகளிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் ஆடம்பரத் திருவிழாக் கொண்டாட்டங்களிலும் தூபம் பயன்படுத்துவது சிறந்தது.
இவை தவிர அடக்கச் சடங்கிலும் நற்கருணை ஆசி கொண்டாட்டங்களிலும் நற்கருணைப் பவனியின்போதும் தூபம் பயன்படுத்தப்படுகிறது.

**67. திருப்பலியில் தூபம் எந்த நேரங்களிலெல்லாம் பயன்படுத்தப்படுகிறது?**
1. தொடக்கச் சடங்கில்
• வருகைப் பவனியின்போது
• திருப்பலி தொடங்கும்முன் பீடத்திற்கு.
2. வார்த்தை வழிபாட்டில்
• நற்செய்தி வாசக நூல் பவனியின்போது
• நற்செய்தி பறைசாற்றப்படும்முன் நற்செய்தி நூலுக்கு.
3. நற்கருணை வழிபாட்டில்
• காணிக்கைப் பொருள்களைத் தயாரிக்கும்போது காணிக்கைப் பொருள்கள், பீடம், பாடுபட்ட சிலுவை ஆகியவற்றிற்கும் அருள்பணியாளர்களுக்கும் இறை மக்களுக்கும்,
• திரு அப்பம், திரு இரத்தமும் எழுந்தேற்றத்தின்போது,
• இறுதிப் புகழுரையின்போது.

**68. தூபம் எத்தனை வகையில் காட்டப்படுகிறது?**
மூன்று வகைகளில் காட்டப்படுகிறது.
1. மூன்று வீச்சு தூபம் காட்டுதல்:- தூய்மைமிகு நற்கருணை, திருச்சிலுவையின் திருப்பண்டம், மக்களின் பொது வணக்கத்திற்கு வைக்கப்பட்டுள்ள ஆண்டவரின் திரு உருவங்கள், திருப்பலிக்கான காணிக்கைப் பொருள்கள், பீடச்சிலுவை, நற்செய்தி வாசகநூல், பாஸ்காத் திரி, அருள்பணியாளர், மக்கள்.
2. இரு வீச்சு தூபம் காட்டுதல்: புனிதர்களின் திருப்பண்டங்கள், திருஉருவங்கள்.
3. ஒரு வீச்சு தூபம் காட்டுதல்: பீடம்.

**69. மெழுகுத்திரிக்கும் கிறிஸ்தவ நம்பிக்கைக்கும் இடையே உள்ள அடையாளத் தொடர்புகள் என்ன?**
• இருளை ஒளி வெல்லும் என்ற கருத்து எபிரேய மறைநூல்களிலும் கிறிஸ்தவ விவிலியத்திலும் காணப்படுகின்ற ஒரு மையக்கருத்து.
• இயேசுக் கிறிஸ்து உலகின் உண்மையான ஒளி, இருளின் மத்தியில் ஒளிரும் கலங்கரை விளக்கம் இதன் விளைவு.
• தூய்மையான தேன் மெழுகு கொண்டாடப்படுகின்ற திருச்சடங்கின் தூய்மையை எடுத்துரைக்கின்றது.
• தம்மையே கரைத்து அழித்துக்கொள்கின்ற மெழுகுதிரிகள் சிலுவையில் கிறிஸ்துவின் தன்னலமற்ற, தியாகச் செயலையும் பிறருக்காகக் கிறிஸ்தவர்களது தன்னலமற்ற அன்பையும் நினைவுப்படுத்துகின்றன.
• நடைபெறுகின்ற புனித சடங்குகளின்போது, இறைமக்களின் உள்ளங்களில் மேலான பக்தியின் நறுமணத்தையும் தூய எண்ணத்தையும் மரியாதையின் மனநிலையையும் மெழுகுத்திரியின் பயன்பாடு உருவாக்குகிறது.

**70. திருச் சிலுவை எதன் அடையாளம்?**
கிறிஸ்து பாடுபட்டு, சிலுவையில் மரித்து, நமக்கு மீட்பைப் பெற்றுத் தந்ததால், கிறிஸ்துவைக் குறிக்கும். பாடுபட்ட சிலுவை கிறிஸ்தவத்தின் ஆற்றலுள்ள அடையாளம்.
சிலுவை அடையாளத்தை ஒருவர் தம்மீது வரைவது உரோமை கத்தோலிக்கத்தின் தனித்தன்மையான அடையாளம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.163

## தோபித்து முதல் அதிகாரம் துவங்கி யூதித் 6ம் அதிகாரம் முடிய

உங்கள் விடைகளை மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 02 | | | 18 | | | 08 |
| | | 16 | | 17 | | | | 19 | |
| | | | | | | | | | |
| | 03 | | | | | | | | |
| | 04 | | | ❖ | | | 22 | | ❖ |
| | | 05 | | | 21 | | | | 09 |
| | | | | | 11 | | | | 10 |
| 06 | | | | | | | | 12 | |
| | 07 | | | | | | | 13 | |
| 20 | | | | 14 | ❖ | | | | 15 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச் சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. பின்னர், மன்னர் ——— என்னைக் கொல்லத் தேடினார் என்று அறிந்து ............... ஓடிவிட்டேன்.
2. அவர் ............... சொல் எதுவும் பொய்க்காது.
3. ............... தம்மீது எத்துணை இரக்கம் காட்டியுள்ளார் என்று தோபித்து அவர்கள்முன் அறிக்கையிட்டார்.
4. "உன் தந்தை ............ பெறுவது உறுதி."
5. ............. விரித்துக் கோவிலின் முகப்பில் ஆண்டவர் திருமுன் குப்புற விழுந்தனர்.
6. "கடவுளே போற்றி! ........ மெய்ப்புகழ்ச்சியும் உமக்கே உரித்தாகுக."
7. ஆண்டவர் நமக்கு அருளிய ............ நமக்குப் போதுமே" என்றார்.

### வலமிருந்து இடம்

8. உலகம் முழுவதிலும் உள்ள மக்களினத்தார் அனைவரும் .................. மாறுவர்.
9. ஏனெனில் அம்மக்கள் கடுமையாய் போரிடும் ............ ஆற்றலோ அற்றவர்கள்.
10. உன் உடமையிலிருந்து ................. செய்.
11. உடனே இரகுவேல் துள்ளி எழுந்து அவரை முத்தமிட்டு மகிழ்ச்சிக் ........... வடித்தார்.
12. ஏழை எவரிடமிருந்தும் உன் ............. திருப்பிக்கொள்ளாதே.
13. அதன் காவல் மாடங்களைக் கைப்பற்றி, கடை வீதிகளில் புகுந்து கொள்ளையடித்து,..அதன் ............... சீர்குலைந்தான்.
14. என் வாழ்நாள் முழுவதும் உன்னைப்பற்றி ................. கேட்பேனாக" என்று கூறி அவர்களை வழியனுப்பி வைத்தார்.
15. என் வாழ்நாளில் பழிச்சொற்களை இனிமேல் கேட்க ................ இராது"


### மேலிருந்து கீழ்

1. அவற்றின் குடிகள் உமக்கே .......................
2. ஏனெனில் திருடிய எதையும் உண்ண நமக்கு ............ இல்லை" என்றேன்.
4. நாங்கள் கொண்டுவந்த தொகையில் .............. அவருக்குக் கொடுத்தாலும் தகும்.
8. யோர்தான் ஆற்றைக் கடந்து ............... முழுவதையும் தங்கள் உடைமையாக்கிக்கொண்டார்கள்.
16. அவருக்கு வாரிசாக ..................... குழந்தைகள் இல்லை.
17. அவருக்கு சாரா என்னும் ஒரு ............ இருக்கிறாள்.
18. நீ கடவுளுக்கு அஞ்சி பாவத்தையெல்லாம் ................ நீ பெரும் செல்வனாவாய்."
19. ........... பற்றி இன்று இரவு பேசி, அவளை உமக்கு நிச்சயிப்போம்.

### கீழிருந்து மேல்

3. சோம்பல் சீர்கேட்டையும் .......... வறுமையையும் உண்டாக்கும்.
6. "விண்ணகக் கடவுளாகிய ஆண்டவரே ................ பகைவர்களின் இறுமாப்பைப் பாரும்.
14. யாரையும் ............... மாட்டார். கதிரவன் மறைந்ததும் வீடு திரும்புவார்.
15.அவர்கள் பாலைவனத்தில்...... யாவரையும் விரட்டியடித்தார்கள்.
20. நாங்கள் அவர்கள் எல்லாரையும் ஓர் ............. வீழ்த்துவதைப்போல் எளிதாகக் கொன்றழிப்போம்.
21. நோன்பிருந்து தங்களையே ..................... கொண்டார்கள்.
22 உலகின் எல்லைகள்வரை பேரொளி ................

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 161 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
ச. விவேக்கா,
சென் மேரிஸ் வீதி,
அடம்பன்.



**இரண்டாம் பரிசு:**
J. செபதிகா,
புதுக்கமம்,
உயிலங்குளம்.

**மூன்றாம் பரிசு:**
T.S. லீலாவதி,
சாந்திபுரம்,
மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 77 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 66 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 161ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. அ. யசிந்தா, சாளாம்பன், ஆண்டான்குளம்.
02. வி. வேஜின் டிலைக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு
03. ஞா. ஜெரூஷன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
04. அ. ஸ்ரெலா மேரி, துட்டுவாகை, நேரியகுளம்.
05. S. மேவின், பறப்பாங்கண்டல், பெரியகுளம்.
06. A. D. வெற்றிறாஜ், ஆவணம், நானாட்டான்.
07. தா. மேரி ஜான்சிகா, வேப்பங்குளம், வவுனியா.
08. ராணி அரசரத்தினம், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
09. செ. ஜெபராக்கினி, சாளம்பன், ஆண்டான்குளம்.
10. இ. நீலவேணி, பாலையடிப்புதுக்குளம், வட்டக்கண்டல்.
11. நீ. நீயூமன், அந்தோனியார் புரம், இலுப்பைக்கடவை.
12. ந. ஆன் மயூரிகா, வேப்பங்குளம், வவுனியா.
13. செ. ஞானச்சந்திரா, முதலியார்குளம், செட்டிகுளம்.
14. ஜெ. றேபனா, அந்தோனியார் புரம், இலுப்பைக்கடவை.
15. கி. தனுஷாந்த், வீரபுரம், வவுனியா.
16. S. றிச்சாட், முருங்கன்பிட்டி, முருங்கன்.
17. நி. யாழிசன், செட்டிகுளம்.
18. அ. எட்மன் டயஸ், 100 வீட்டுத்திட்டம், பேசாலை.
19. A. அகஸ்ரீனா, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
20. சி. கலிஸ்ரியா, அச்சுவேலி தோப்பு, யாழ்ப்பாணம்.
21. A. ஜொகான்சன், காத்தான்குளம், கட்டைக்காடு.
22. T. பேணாட் குரூஸ், முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை.
23. N. S. மரியம்மா பீரிஸ், ஆனாள் நகர், வங்காலை.
24. S. வினோதினி, பெரியகட்டைக்காடு, நானாட்டான்.
25. டொ. ஜோர்ச் கெனடி, சிறுத்தோப்பு, பேசாலை.
26. கிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
27. M. சோபியா மெனடஸ், ஆலங்குளம், வட்டக்கண்டல்.
28. B. R C. பேரின்பநாயகம், சின்னக்கடை, மன்னார்.
29. ச. மியூலின், காத்தான்குளம், நானாட்டான்.
30. அ. கில்டன், பாப்பாமோட்டை, திருக்கேதிஸ்வரம்.
31. எ. ஆன் பிறைற்றி கூஞ்ஞு, கிழக்கு, முத்தரிப்புத்துறை.
32. பொ. ஹஸ்மி பொனிஷா, கல்கமுவ, குருநாகல்.
33. ச. சுலக்ஷனா, கொக்குப்படையான், சிலாவத்துறை.
34. S. டில்சன், செட்டியார் கட்டையடம்பன், முருங்கன்.
35. றெபேக்கா பற்றிக், சின்னக்கடை, மன்னார்.
36. நிருபா ஜெராட் சேவியர், பெற்றா, மன்னார்.
37. சௌமியா மோகன்ராஜ், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
38. என். சி. யூலியானி றோச், பள்ளிமுனை, மன்னார்.
39. P.S. பாணு, நறுவிலிக்குளம், வங்காலை.
40. N. தவமலர், பாடசாலை வீதி, முதலியார்குளம்.
41. எ. ஜெனோலின், புத்திரர்கண்டான், முருங்கன்.
42. ச. வினோசிகா, சென் மேரிஸ் வீதி, அடம்பன்.
43. அ. அனற் நிவேதா, அச்சங்குளம், நானாட்டான்.
44. F. பிருத்திகா, JRS வீதி, தலைமன்னார்.
45. றூ. மேரி ராஜ்மி டயஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
46. கி. றொசாந்தினி, அடம்பொன்தாழ்வு, வட்டக்கண்டல்.
47. டி. சஞ்ஜனா, பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில்
48. கி. பிரஷாந்த், வீரபுரம், வவுனியா.
49. நீ. நிர்மலா, அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை.
50. இ. ராஜித், பாலையடிப்புதுக்குளம், வட்டக்கண்டல்.

## தமிழ் இனத்திற்காகக் குரல் .....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

பலர் இங்கு வந்து அவரின் சுகசேமங்களை விசாரித்துச் செல்லுகின்றனர். இதையிட்டு அவர் மிகவும் சந்தோசப்படுகிறார். அவர் வெளியில் சென்று பார்வையிடுதல், ஓய்வு எடுத்தல், செபித்தல், தன்னைக் காணவரும் மக்களைச் சந்தித்தல் போன்ற செயற்பாட்டில் தன்னிச்சையாக செயற்படுகின்றார்.

திருச்சபைச் சட்ட எண் 401 பகுதி 1இற்கு அமைவாக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பதவி துறப்பை திருத்தந்தை பிரான்சிஸ் ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர் நியமிக்கப்படும்வரை ஓய்வு பெற்று இருக்கும் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை ஓய்வுபெற்றுள்ள மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை கடந்த 23 வருடங்களுக்கு முன் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டு மன்னார் மறைமாவட்டத்தில் சேவையாற்றியுள்ளார். இவர் மன்னார் மறைமாவட்டத்திற்கு மட்டுமல்ல இலங்கைவாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் ஏன் உலகத் தமிழ் மக்களுக்கும் அவர் சிறந்த சேவையாற்றியுள்ளார்.

மிகவும் கடினமான சூழ்நிலையிலே இவரின் சேவை இருந்தது என்பது அனைவருக்கும் நன்கு தெரியும். பல்வேறு அச்சுறுத்தல், பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே இவரின் சேவை மிளிர்ந்தது. மன்னார் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் அதைக் கட்டி எழுப்பி இந்த நிலைக்குக் கொண்டுவந்தது அவரின் அயராத முயற்சியாகும். மன்னார் மறைமாவட்டம் ஆயர் யோசேப்புக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கின்றது. ஆகவே மன்னார் மக்கள் மட்டுமல்ல இலங்கைவாழ் மற்றும் உலகத் தமிழ் மக்கள் சார்பாக ஆயருக்கு நன்றிகூறி நிற்கின்றோம் என்றார்.

## கச்சதீவு புனித அந்தோனியார் ......

3ஆம் பக்கத் தொடர்ச்சி

இதற்கமைய இத்திருவிழாவிற்கு யாழ்ப்பாணத்திலிருந்து செல்வோருக்கான படகு சேவைகள் அடுத்த மாதம் 20ஆம் திகதி மதியம் முதல் குறிகட்டுவானில் இருந்து இடம்பெறும். அத்தோடு இத்திருவிழாவிற்குச் செல்வோர் அன்றைய தினம் ஒரு மணிக்கு முன்னதாகவே வந்து தமது பயணத்தை மேற்கொள்ளவேண்டும். ஏனெனில் அதன் பின்னர் படகு சேவைகள் எவையும் இடம்பெறாதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இத்திருவிழாவை முன்னிட்டு விசேட பேருந்துச் சேவைகளும் இடம்பெறவிருக்கின்றன. குறிப்பாக யாழ். மத்திய பேருந்து நிலையத்திலிருந்து இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளும், தனியார் பேரூந்துகளும் இந்த விசேட சேவைகளில் ஈடுபடவுள்ளன.

சுகாதார ஏற்பாடுகளை கடற்படையினர் ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் தெரிவித்திருக்கின்றனர். அத்தோடு படகுப் பயண சேவைகளின்போது கடற்படையினர் விசேட ரோந்துப் பணிகளிலும் ஈடுபடுவார்கள் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

## இராயப்பு ஜோசப் ஆண்டகையின் .....

2ஆம் பக்கத் தொடர்சசி

ஆயரின் பல தசாப்தகாலப் பணி கத்தோலிக்க ஆன்மீகத் தலைமைத்துவத்திற்கு மட்டுமல்லாது சமூக, அரசியல் தலைமைத்துவத்திற்கும் ஒரு மாபெரும் முன்னுதாரணமாகும். ஆயர் காட்டிய முன்னுதாரணத்தைப் பின்பற்றி வலுவான சமூகத் தலைவர்கள் எம்மத்தியில் உருவாக வேண்டும் என்பது தமிழ்ச் சமூகத்தின் இன்றைய முக்கிய தேவைகளில் ஒன்றாகும். இச்சந்தர்ப்பத்தில் ஆயர் அவர்களின் அர்ப்பணிப்பான மாபெரும் பணிக்காக எமது வணக்கங்களையும், நன்றிகளையும் நாம் கூறிக்கொள்வதோடு ஆயர் வெகுவிரைவில் பூரண குணமடைந்து மக்கள் பணியைத் தொடரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். இராயப்பு ஜோசப்பு ஆண்டகையின் பாதையில் தமிழ் சிவில் சமூக அமையம் தொடர்ந்து தனது பணிகளை ஆற்றும் என்பதனையும் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## இறைஅருளின் காலமே .....

6ஆம் பக்கத் தொடர்ச்சி

மனித உள்ளமும் அப்படித்தான். இறை அருளால் பண்படுத்தப்பட்ட உள்ளமானாலும் அதனுள் இருந்து புறப்படுவதே மனிதனை அசிங்கப்படுத்துகிறது. இறை அருள் ஒன்றே போதுமென அசிங்கப்படுத்துபவற்றை ஆய்ந்து பார்த்து அகற்ற முயலாமல் மேலோட்டமானவற்றால் வாழ்வை நிரப்புவது களையை அகற்றாமல் பசளையிடுவது போலாகும். இறை இரக்கம் எங்கே தொடங்கியது, அதை எங்கே காண்பது? அதன் உச்சம் என்ன? இவைபோன்ற கேள்விகளுக்கு விடைகாண வேண்டும் என்ற எண்ணம் நம்மில் இழையோடுகின்றது. எப்போது இவ்வுலகில் பாவம் நுழைந்ததோ அப்போதே அதை முறியடிக்க கடவுள் எடுத்துக்கொண்ட அன்பின் முயற்சிதான் இறை இரக்கம்.

உயிர்ப்பின் உன்னதத்தை உணர்ந்துகொள்ள வேண்டுமாயின் இறப்பைப் புரிந்துகொள்ள வேண்டும். இறப்பு இல்லாமல் உயிர்ப்பு நிகழ்ந்திருக்க முடியாது. உயிர்ப்பு இல்லையெனில் இறப்பு அர்த்தமற்றதாகிவிடும். எனவேதான் பவுல் அடியார் கிறீஸ்துவுடைய இறப்பு, உயிர்ப்பை மீட்புச்செயலாக விளக்குகின்றார். மீட்புச்செயலின் தார்ப்பரியத்தை புரியவைக்க, கிறிஸ்து இல்லாத நிலையை, மீட்கப்படாத நிலையை, விடுதலை அடையாத நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார். கிறிஸ்துவின் மீட்புச் செயலைத் தெளிவாக்க மனிதனின் கடந்தகால நிலையை பின்னணியாகக் காட்டுகின்றார் (1கொரி 15:12). திருஅவை இறை இரக்கத்தைத் தன் அகவாழ்விலும் புறவாழ்விலும் பலப்படுத்த அழைக்கப்பட்டுள்ளது என்பதே திருத்தந்தையின் அறைகூவல். சிந்திப்போம், செயல்படுவோம்.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம். - *மன்னா நிர்வாகம்* -

## உள்நாட்டு, வெளிநாட்டு மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

**- மன்னா நிர்வாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

**6ம் ஆண்டு, 6 1/2 ஆண்டு நினைவஞ்சலி**



திறினிற்றி அன்ரன் கமலநேசன் (குஞ்சு) | ஆன் மேரி திரேசா பயஸ் பிலிப்புப்பிள்ளை (பெரியா)

(கொன்வென்ட் வீதி, மன்னார்.)

மலர்வு : 29 - 04 - 1952
உதிர்வு : 08 - 02 - 2010

மலர்வு : 27 - 08 - 1945
உதிர்வு : 06 - 08 - 2009

*"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"*

அன்பான எம் தெய்வங்களே!
எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் பல ஆனாலும்
எம்மைவிட்டு விலகாது உம் நினைவு.
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்

*உம் பிரிவால் துயருறும்:*
*சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.*
தகவல் : கசியன் பிலிப்புப்பிள்ளை, இலண்டன்.

**31ம் நாள் நினைவஞ்சலி**

மலர்வு 14 12 1954 | உதிர்வு 15 01 2016



## திரு. ச. சூசையப்பு குரூஸ் (சிங்கம்)

(தாழ்வுபாடு, மன்னார்)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கைகொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11:25-26)

பாசத்தை உங்கள் வளர்ப்பிலே கண்டோம்
தியாகத்தை உங்கள் வாழ்வினிலே கண்டோம்
உதிரத்தை உழைப்பினிலே கண்டோம்
உழைப்பில் எம் வாழ்வையே வாழ்ந்தோம்.

கண்ணை இமை காப்பதுபோல்
பாலகர் எம்மை அறிவோடு கூடிய நற்பழக்கங்களை
புன் சிரிப்போடு வளர்த்தீரே! ஐயா! - உம்
புன் சிரிப்பைக் காண ஏங்குகின்றோம்
மழலைகள் நாங்கள்.
உங்கள் ஆன்மா இறைவனில் மகிழ்ச்சி கொள்வதாக!

*உம் பிரிவால் துயருறும்:*
*குடும்பத்தினர்.*

## மன்னார் மறைமாவட்டம் .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

இரக்கத்தின் யூபிலி ஆண்டிற்கான பங்கு மேய்ப்புப்பணித் திட்டங்களின் பிரதிகள் திருப்பலிக் காணிக்கை வேளையில் பங்குப் பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் மற்றும் தோட்டவெளிப் பங்குத்தந்தை அருட்பணி றொக்சன் குரூஸ் அடிகளார் ஆகியோரின் நெறிப்படுத்தலில் இந்த விழாவுக்கான ஆயத்தங்கள் இடம்பெற்றன.

மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் துறவியர் மற்றும் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளைச் சார்ந்த இறைமக்கள் இந்த மறைமாவட்ட விழாவில் கலந்துகொண்டனர். அரச உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் என பல பிரமுகர்களும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

## குருத்துவ வாழ்வில் ....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

மன்னார் மறைமாவட்டத்தின் ஆட்காட்டிவெளிப் பங்கு, ஆண்டாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் றெஜினோல்ட் அவர்கள் 1991 – 1992 வரை தூய செபஸ்தியார் பேராலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாகவும், 1992 – 1993 வரை மடுத்திருத்தலத்தில் உதவிப் பரிபாலகராகவும், 1993 – 1994 வரை மன்னார் ஆயரின் செயலாளராகவும், 1997 – 2002 வரை நானாட்டான் பங்குத்தந்தையாகவும், 2002 – 2006 வரை உயிலங்குளம் பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார். பின்னர் 2006 – 2010 வரை அமெரிக்காவில் உயர் கல்வியை மேற்கொண்டார்.

அமெரிக்காவில் இருந்து நாடுதிரும்பிய இவர், 2010 – 2011 வரை முத்தரிப்புத்துறைப் பங்குத்தந்தையாகவும், 2011 – 2013 வரை திருப்பாலத்துவசபை இயக்குனராகவும் 2011 – 2016 வரை (இன்றுவரை) மறைக்கல்வி நடுநிலைய இயக்குனராகவும் பணியாற்றி வருகின்றார்.

தற்போது தனது மறைக்கல்வி இயக்குனர் பணிகளோடு மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் குழுவின் செயலாளராகவும் பணியாற்றுகின்றார்.

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

## கடவுளின் பெயர் இரக்கம் .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

அல்பேட் லூசியானி (lbino Luciani) என்ற இயற்பெயரைக் கொண்ட திருத்தந்தை முதலாம் ஜோன் போல் அவர்களின் எழுத்துக்கள் தன்னை மிகவும் ஈர்த்தன என்றும், "சில காரியங்கள், வெண்கலத்திலும், பளிங்கிலும் வடிக்கப்படவில்லை. ஆனால் அவை தூசியில் வடிக்கப்பட்டுள்ளன என்பதால் கடவுள் என்னைத் தேர்ந்துகொண்டார்" என திருத்தந்தையாவதற்கு முன்பே ஒரு மறையுரையில் கூறியிருக்கிறார். இத்திருத்தந்தை தன்னை தூசி என்று அழைத்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்,

Miscrando atque cligendo என்ற தனது ஆயர் இலச்சினை குறித்தும், இளம் வயதில் கடவுளின் இரக்கத்தை அனுபவித்தது குறித்தும் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திரு அவை பாவத்தைக் கண்டிக்கிறது. பாவியிடம் இரக்கம் காட்டுகின்றது என்றும் கூறியுள்ளார்.

பாவத்திற்கும் ஊழலுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் குறித்தும் தனது நேர்காணலில் விளக்கியுள்ள திருத்தந்தை, ஊழல் மனிதர் தனது பாவங்களை ஏற்பதற்குரிய தாழ்மைப்பண்பு இல்லாமல் இருக்கிறார் என்றும், இத்தகைய மனிதர் மன்னிப்புக் கேட்பதற்கு சோர்வடைகிறார். முடிவில் தான் மன்னிப்புக் கேட்கத் தேவையில்லை என்ற முடிவுக்கும் வருகிறார் என்றும் கூறியுள்ளார்.

150 பக்கங்கள் அடங்கிய இந்தப் புதிய புத்தகத்தில், திரு அவைக் கோட்பாடுகளைப் பின்பற்றாதவர்களை ஒதுக்கி வைக்காமலும், கண்டனம் செய்யாமலும், காயமடைந்துள்ள மனித சமுதாயத்திடம் பரிவன்புள்ள மேய்ப்பர்களாக வாழுமாறும் கத்தோலிக்கத் தலைவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். தீர்ப்பிடுவதற்கு நான் யார் என்ற கேள்வியை, "கடவுளின் பெயர் இரக்கம்" என்ற புத்தகத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அடிக்கடி கேட்டுள்ளார்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**
கறுப்பு வெள்ளை 4,500/=,
கலர் 7,500/=

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 0200200[illegible]9782

**வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால்**

## சமூக சேவையாளர்கள் கௌரவிப்பு



மனித அன்புப் பணிகளையும், சமூக வளர்ச்சிப் பணிகளையும், கைமாறு கருதாமல் முன்னெடுத்துவரும் சமூக சேவையாளர்கள் ஆண்டுதோறும் இனங்காணப்பட்டு, சமூக சேவை அமைச்சினால் சான்றிதழ்கள், விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த ஆண்டில் இவ்விருது வடமாகாணத்தில் பிரதேச மட்டங்களில் இருந்து தேர்வுசெய்யப்பட்ட சிறந்த சமூக சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

வடமாகாண சபை வடபகுதியிலுள்ள மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வில் மேலான கவனத்தைக் காட்டி வருகின்றது. இதனால் இச்சபை, 2015 டிசம்பர் 10ம் நாள், யாழ். கைதடியில், வலுவிழந்தோர் கல்விக்கூடத்தில், உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை சிறப்பு நிகழ்வுகள் பலவற்றுடன் கொண்டாடியது. இதில் மாகாணத்திலுள்ள எல்லாப் பிரதேசச் செயலாளர் பிரிவிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்ட சிறந்த சமூக சேவையாளர்கள். வடமாகாண சுகாதார அமைச்சர் கௌரவ சத்தியலிங்கம், மருத்துவ கலாநிதி அவர்களால் பொன்னாடை புனைந்து சான்றிதழ் விருதுகளும், நினைவுச் சின்னங்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்கள்.

மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்விலும், வளர்ச்சியிலும், பல்வகையான சமூக மேம்பாட்டுப் பணிகளிலும் ஈடுபாடுகாட்டிவரும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று பேருக்கும் சிறந்த சமூக சேவையாளர்களுக்கான விருதும், மதிப்பும் கிடைக்கப்பெற்றது. மன்னாரைச் சேர்ந்த முன்னைநாள் கோட்டக்கல்வி அதிகாரி திரு. யூட் பிகிறாடோ, பறப்பாங்கண்டலைப் பிறப்பிடமாகவும் முள்ளிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேதியர் திரு. இ. யக்கோவு சேரம், முருங்கனைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. தி. பரஞ்சோதி ஆகியோரே மன்னார் மாவட்டத்தில் இருந்து கௌரவிக்கப்பட்டவர்களாவர். இவர்களுக்கு மன்னாவின் வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் உரித்தாகுக!

## முசலி தேசிய பாடசாலை மாணவி கலைப்பிரிவில் முதலிடம்!

அண்மையில் வெளியிடப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி மன்னார் மாவட்டம் முசலி தேசிய பாடசாலையில் கல்விபயின்ற செல்வி. றிஸ்வீனா பேகம் அவர்கள் கலைப்பிரிவில் மன்னார் மாவட்டத்தில் முதல் நிலை மாணவியாகவும் தேசிய மட்டத்தில் 43ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

முசலி பிரதேச வரலாற்றில் முதல் தடவையாக மாவட்ட மட்டத்தில் இந்த மாணவியே கலைத்துறையில் முதல்நிலை மாணவியாக தெரிவாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்டத்தில் மணற்குளத்தை பிறப்பிடமாகக் கொண்ட இம்மாணவியான றிஸ்வீனா பேகம் அலியார் தம்பதியின் புதல்வி ஆவார்.

இவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில், "எங்கள் குடும்பத்தில் எங்கள் பெற்றோருடன் சேர்ந்து எட்டுப் பேர். நான் எங்கள் குடும்பத்தில் நான்காவது பிள்ளை. எனது தகப்பன் ஒரு விவசாயியாக இருக்கின்றபோதும் நாங்கள் மிகவும் வறுமை கோட்டுக்குள்ளே வாழ்கின்றோம். இந்தக் குடும்ப கஷ்டத்தை உணர்ந்து நான் நன்றாக படித்து எங்கள் குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடனேயே எனது கல்வியில் அதிக அக்கறை காட்டினேன். எனது எண்ணத்துக்கு ஏற்றவாறு முதலில் இறைவன் மற்றும் பெற்றோர், ஆசிரியர்கள் நன்கு ஒத்துழைப்பு வழங்கியிருப்பதை நான் உணர்கின்றேன். நான் கிழமையில் மூன்று தினங்கள் தனியார் நிறுவனத்துக்கு கற்பதற்காக சென்றாலும் பாடசாலை கல்வியில் அதிகம் அக்கறை செலுத்தினேன் என்றார். இவருக்கு மன்னாவின் வாழ்த்துக்கள்!

## மன்னார் பாடசாலைகளில் நடந்த கால்கோள் விழாக்கள்

இந்த வருடம் தரம் 1இல் புதிதாக அனுமதி பெற்றுள்ள மாணவர்களை வைபவ ரீதியாக வரவேற்கும் 'கால்கோள் விழா' கடந்த 14.01.2016 மன்னார் பாடசாலைகளில் சிறப்பாக இடம் பெற்றது.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் ஜோசப் ஒகஸ்ரின் தலைமையில் குறித்த நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் வரவேற்கப்பட்டதோடு இந்த வருடம் தரம் 2இல் கல்வி கற்கும் மாணவர்கள் புதிதாக தரம் 1இல் கல்விகற்க வந்துள்ள மாணவர்களை மலர்ச்செண்டு மற்றும் கைலாகு கொடுத்து வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் சர்வமதத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

## மன்னா விநியோகஸ்தர்களே!

உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை
காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!
- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## மணவாழ்வின் 60வது ஆண்டு மணிவிழா வாழ்த்து!



மணநாள்: 23.02.1956
மணிவிழா நாள் 23.02.2016

**திரு. திருமதி. தேவசகாயம் இப்போலிற் குரூஸ், சறபின், பெனாண்டோ**

அன்னை தந்தையாய் அறுபதாண்டுகள் முன்னே இணைந்தார்
ஆண்டவர் அன்று அவர் நாமம் நன்றே போற்றினோம்.
புன்னை மரமாய் பூச்சொரிந்து வண்ணத் தோட்டமாயமைத்தார்
ஆண்டவர் இன்று அவர் பாதம் பூமலர் ஆயிரம் சாற்றினோம்.
தன்னிகரில்லாத் தலைவா! எம்மிறையே!! குலந்தழைக்க வைத்தீர்
பொன்னிகர்த்த பிள்ளைகளும் பேரர்களும் பூட்டப்பிள்ளைகளும் தந்தீர்
ஆண்டவர் நீர் பின்னாளில் அதற்காயுரைத்தோம் நன்றிகளாயிரம்
இன்னலின்றி இழிநிலையின்றி வறுமையும் வாதையுமின்றி இன்றுவரை
ஆண்டவர் எமக்களித்தார் நற்சுகபெலம் அதற்காய் ஆயுள்வரை நன்றி.
பின்னமில்லா நல்வாழ்வு எமக்களித்த ஏந்தலே உமக்கே எம்மிதய நன்றி!

வாழ்த்துக்கள் கூறுவோர்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்.

- வரவேற்பு மாதா வீதி, முதலாம் வட்டாரம், பேசாலை.

## நிகழ்வுகளின் நிழல்கள்





30.01.2016 அன்று யாழ் புதிய ஆயர் ஜஸ்ரின் ஆண்டகைக்கு தோட்டவெளியில் வரவேற்பு அளிக்கப்பட்டபோது.



24.01.2016 அன்று முருங்கன் மெதடிஸ்த ஆலயத்தில் இடம்பெற்ற கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான இறைவேண்டலின்போது.



25.01.2016 அன்று வவுனியா அங்கிலக்கன் ஆலயத்தில் இடம்பெற்ற கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான இறைவேண்டலின்போது.

## நீங்காத நினைவுகள்

### 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 01 1954



உதிர்வு 04 02 2015

**திரு. சீமான் யோசப் (மோட்டைக்கடை, நானாட்டான்)**

"ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை" (தி.பா. 23:1)

நாட்கள் உருண்டோடி ஓராண்டு ஆனாலும் - ஓர்நாள் பிரிவுபோல்
எம் உள்ளம் உம் அன்பிற்காய் ஏங்குதையா!
நிறைந்து நிற்கும் உம் நினைவலைகளால் எம் உணர்வுகளில் உறைவிடமாகிவிட்டீர் ஐயா!
காலத்தின் நிறைவுகண்டு இறைவனைத் தேடிய உம் நிலையான வாழ்வில்
எம் கண்ணீர்கள் உதிரலாம். ஆனால் நீர் தந்த
வளமான அன்பும் பாசமும் என்றும் உதிர்வதில்லை!

பிரிவால் நினைந்துருகும், அன்பு மனைவி, பாசமுள்ள பிள்ளைகள், மற்றும் உம் அன்பின் உற்றார் உறவினர்.

### 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 02 1974



உதிர்வு 13 02 2014

**திருமதி. அகஸ்ரா தியோப்பின் விமல் றோய் (நிறோசா)**

(இறம்பைக்குளம், வவுனியா)

"ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு
அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"
(திருப்பாடல் 116: 15)

மண்ணில் பிறந்தவர்கள் மடிவதுண்மை என்றாலும்
எம் கண்மணி நிறோசா இன்னும் சாகவில்லை.
ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
என்றும் நீங்காத உன் நினைவுகளோடு வாழ்கின்றோம்
உன் ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்,
கணவர், பெற்றோர், சகோதரிகள், உற்றார் உறவினர்கள்.

### 05ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 02 1946



உதிர்வு 04 02 2011

**திருமதி. அந்தோனிப்பிள்ளை மரியரெத்தினம் (ரெத்தினம்) (மூர்வீதி, மன்னார்)**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம்
நம்பிக்கைகொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவான்: 11:25)

தாயைப்போல தரணியில் யாரம்மா? - நீங்கள்
தந்த நல்லன்பு மறக்குமோ அம்மா?
தந்தையாம் இறை திருவடியில் அமர்ந்து
உங்கள் தனையற்காய் வேண்டுவீர் தாயே!
பிரிவால் நினைந்துருகும்,
கணவன்: திரு. டேவிட் அந்தோனிப்பிள்ளை (J.P)
(இளைப்பாறிய உதவிக்கல்விப் பணிப்பாளர்)
பிள்ளைகள் : திருமதி. சூசைதாசன் டலேசியா,
திருமதி. தீலீபசிங்கம் டலோஜினி
மருமக்கள் : திரு. இ. சூசைதாசன் (சுகந்தன்)
திரு. அ. திலீபசிங்கம் (திலீபன்)
[illegible] உற்றார், உறவினர்.

### 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 05 1940



உதிர்வு 16 02 2015

**திருமதி. கிறிஸ்டீனா நேசமலர் ஜோசப்**

(சின்னக்கடை, மன்னார்)

"இறைவா என்னைக் காத்தருளும். உம்மிடம் நான்
அடைக்கலம் புகுந்துள்ளேன்" தி.பா.6:01)

அன்புக்கு அன்பான அம்மாவின் மரணம்
வேதனையில் கழியுது நாட்கள்!
உயிருக்கு உயிராக இருந்தாரே அன்று
மண்ணுக்குள் மறைந்தாரே இன்று.
எங்களுடன் அவர் வாழ்ந்த நாட்கள் எல்லாம்
கனவாகிக் கரைந்ததே!
அம்மாவின் ஆத்மாவை ஏற்றுக்கொள் இறைவா.
விண்மீது சேர்த்துக் கொள்.
தீர்ப்பின் நாளில் இரக்கத்தைக் காட்டும் இறைவா!

பிரிவால் நினைந்துருகும்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.